பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

23 AUG 2004

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 07 | திங்கட்கிழமை | (23.08.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 248

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## 4 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

இராணுவத்தினருக்கு இரகசியத் தகவல்களை வழங்கிய புளொட் மோகன் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 4 தமிழ் இளைஞர்களை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின்ர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் எனவும், ஒருவர் கொழும்பைச் சேர்ந்தவர் எனவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜப்பானிய சொகுசு வாகனம்

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட 68 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜப்பானிலிருந்து சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக பாராளுமன்ற விவகார அமைச்சர் மில்றோய் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜாதிக ஹெல உறுமய, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 68 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே இச் சொகுசு வாகனங்கள் வழங்கப்படவிருப்பதாக அமைச்சர் மில்றோய் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார். (ம)

## கலட்டிச் சந்தியில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள அப்பம் விற்கும் கடையை அகற்றக்கோரி நேற்று மாலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நேற்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில் ஒன்றுகூடிய பல்கலைக்கழக மாணவர்களும் பொது மக்களும் இணைந்து இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ் ஆர்ப்பாட்டத்தினை அடுத்து பெருமளவு பொலிஸாரும், இராணுவத்தினரும் அங்கு குவிக்கப்பட்டனர்.

அத்துடன், அப்பக் கடையும் மூடப்பட்டது. இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை நேற்றிரவு இராணுவத்தினர் மீண்டும் தமது அப்ப விற்பனையை ஆரம்பித்ததாக தெரிகிறது. (ச)

# பாதுகாப்பு அமைச்சின் செயலர் திருமலைக்கு நேற்று திடீர் விஜயம்

### பாதுகாப்பு நிலைமைகள் குறித்து இராணுவ அதிகாரிகளுடன் ஆராய்வு

(நமது நிருபர்)

**பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்து, திருகோணமலை துறைமுகத்தின் பாதுகாப்பு தொடர்பாகவும், கிழக்கிலங்கைப் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாகவும் இராணுவ உயர் அதிகாரிகளுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை துறைமுகப் பகுதி உட்பட மற்றும் பல இடங்களில் விடுதலைப் புலிகள் முகாம்கள் அமைத்துள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து அவை தொடர்பான உண்மை நிலைகளை அறிந்துகொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் நேற்று திருமலைக்கு விஜயம் செய்திருந்தார்.

திருகோணமலை துறைமுகத்தைச் சுற்றிவர விடுதலைப் புலிகள் பதுங்கு குழிகளையும், முகாம்களையும் அமைத்திருப்பதாக கடற்படையினர் திருகோணமலை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்திருந்ததையடுத்து அது தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றை அரசிற்கு சமர்ப்பிக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூரில் குண்டு கண்டுபிடிப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் பொதி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றை இராணுவத்தினர் செயலிழக்கச் செய்தனர்.

மட்டக்களப்பில் இருந்து 14 கிலோ மீற்றர் தொலைவில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதியிலுள்ள கடை ஒன்றின் முன்னாலேயே இக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான பொதி ஒன்று இருப்பதை அவதானித்த கடை உரிமையாளர் இராணுவத்தினருக்கு அறிவித்தார். இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிலியந்தலவில் சுட்டுக்கொலை

(கொழும்பு)


கொழும்பு பிலியந்தல பொலிஸ் நிலையப் பகுதியில் நேற்று நண்பகலில் நபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். குற்ற வழக்கு ஒன்றில் தொடர்புபட்ட பிரஸ்தாப நபர் நீதிமன்ற உத்தரவின்பேரில் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றுவிட்டு காரில் திரும்பிக்கொண்டிருக்கையிலேயே சுடப்பட்டுள்ளார்.

தெஹிவளையைச் சேர்ந்த ராஜா என்றழைக்கப்படும் ரஞ்சித் பெர்ணான்டோ (வயது 45) என்பவரே கொல்லப்பட்டவராவார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். ரி-56 ரகத் துப்பாக்கியினாலேயே இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டை அபிவிருத்தி செய்யாவிட்டால் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு மக்கள் பின்னிற்கமாட்டார்கள்

### வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்



(கொழும்பு)

எந்தவொரு நாடும் படிப்படியான முன்னேற்றத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற இந்தியக் கரையோர வலய ஒத்துழைப்புச் சங்கத்தின் ஐந்தாவது அமைச்சரவை மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்தினைத் தெரிவித்தார்.

அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாதுவிட்டால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புதிய அரசாங்கத்திடம் எதிர்பார்ப்பை ஏற்படுத்திக்கொள்ள மக்கள் முன்வரமாட்டார்கள்.

நாட்டின் அபிவிருத்தியின் பிரதி பலனை அநுபவிக்கும் நோக்கத்துடன் இருக்கும் மக்கள் அது கிட்டாமல் போனால் அரசாங்கத்தைக் கவிழ்க்க பின்னிற்கமாட்டார்கள்.

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையின் கீழ் பிராந்திய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டமும் இருக்கின்றது.

அரசாங்கம் தேசியக் கொள்கை ஒன்றைத் தயாரித்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

தனியாரின் ஒத்துழைப்புடன் அரச துறையைப் பலப்படுத்துவதே இதன் நோக்கமாகும். தனியார் துறையைச் சேர்ந்த அனைவருக்கும் சமூகப் பொறுப்பொன்றுள்ளது. மக்களின் கருத்துக்களைக் கேட்டே நாங்கள் இவ்வாறான முடிவை எடுத்தோம். எனினும் இந்தச் செயற் திட்டம் புதிய யோசனை அல்ல. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பல இவ்வாறான செயற்பாடுகளைப் பின்பற்றியுள்ளன எனவும் கதிர்காமர் மேலும் தெரிவித்தார். (த-121)

## கேபிள் இணைப்புடன் கப்பல் விபத்து இணையத்தள சேவைகள் ஸ்தம்பிதம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் இணையத்தளச் சேவைகள் நேற்று முற்றாகச் செயலிழந்தன. செயலிழந்த இணையத்தளச் சேவை நாளை முதல் வழமைபோல் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் என ஸ்ரீலங்கா ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடலின் அடியில் பொருத்தப்பட்டுள்ள இணையத்தள சேவைக்கான கேபிள் இணைப்புடன் கப்பல் ஒன்று மோதியதினாலேயே இவ் இணையத்தள சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதனைச் சீர்செய்வதற்கு கொச்சினி நாட்டிலிருந்து பொறியியலாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்

இவர்கள் நாளை வந்து சேர்ந்ததும் இணையத்தள சேவையில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் சீர்செய்யப்பட்ட பின்னர் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என ஸ்ரீலங்கா ரெலிக்கொம் அறிவித்துள்ளது

இதேவேளை சி.எம்.பி.பி என்ற இணையத்திற்குப் பதிலாக தற்போது தற்காலிக செய்ம்மதி மூலம் சி.எம்.பி-2 என்ற இணைப்பை பெறலாம் என ரெலிக்கொம் அறிவித்துள்ளது. (ச)

**அன்பு மாணவர்களே!**
**உள்ளே!**
க.பொ.த (சா/த) பரீட்சை மாதிரி வினாத்தாள்
ஆங்கிலம் பகுதி - I
ஆக்கம்:
திருமதி. வீ.சிவபாதவிருதயர்
ஆசிரியர்

## ஐ.நா.சபையின் 29 ஆவது அமர்வில் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றுவார்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 29 ஆவது அமர்வில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்த அமர்வில் அன்றைய தினமே ஜனாதிபதி உரை நிகழ்த்தவுள்ளார். இவ் அமர்வில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் உட்பட பல நாடுகளின் தலைவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி நியூயோர்க்கிலுள்ள ஆசிய சமூகப் பிரதிநிதிகள் மத்தியிலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற-க)

### ஹொலண்டில் நடைபெற்றுவரும் ஒருநாள் தொடரில்

# இந்திய அணியை 66 ஓட்டங்களால் தோற்கடித்தது பாகிஸ்தான் அணி

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் அம்ஸ்ரெல்லினில் நடைபெற்ற சர்வ தேச ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் பாகிஸ்தான் அணி 66 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.





நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவா் சௌரவ கங்குலி பாகிஸ்தான் அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

போட்டியின் ஆரம்பத்தில் மழைகுறுக்கிட்டதால் ஆட்டம் 33 ஓவர்களாகக் குறைக்கப் பட்டது. அதனடி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 33ஓவர்கள் முடிவில் 6விக்கெற்றுக்களை இழந்து 192 ஓட்டங்களைப்பெற்றது.

இதில் சொய்ப் மாலிக் 68 ஓட்டங்களையும், அப்துல் ரஸாக் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும், யூஸிப் யுகானா 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இந்திய அணிசார்பில் லக்ஸ்மிபதி பாலாஜி 27 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அதன் ஆரம் பத்துடுப்பாட்ட வீரர்களை மொத்தமாக 30 ஓட்டங்களையும் 69 ஓட்டங்களையும் பெற்றிருந்த வேளையிலும் இழந்தது.

அதன் பின்னர் துடுப்பெடுத்தாடிய வீரர்கள், தமது திறமையை வெளிக்காட்டாததினால் 27 ஓவர்கள் முடிவில் 127 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

துடுப்பாட்டத்தில் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 37ஓட்டங்களையும் சௌரவ் கங்குலி 25 ஓட்டங்களையும் வீரேந்திர சேவாக் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சிறப்பாகப் பந்துவீசிய சஹீட் அப்ரிடி 6 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களைக்கொடுத்து 4வீக்கெற்றுக்களை வீழ்த்தினார். அத்துடன், சொய்மாலிக் 4ஓவர்கள் பந்துவீசி 18ஓட்டங்களைக்கொடுத்து 3விக்கெற்றுக்களை வீழ்த்தினார். (ற-121)

# முரளிக்கு மூன்று விருதுகள்

லண்டன் அலக்ஸாண்டரா பலஸில் எதிர்வரும் செம்டெம்பர் மாதம் 7 திகதி நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெற் கவுன்சிலின் கௌரவ விருது வழங்கலில் இலங்கையணியின் முத்தையா முரளிதரன் மற்றும் சமிந்தவாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கிரிக்கெற் போட்டிகளின் உயரிய



மூன்று பிரிவுகளின் அடிப்படையில் வழங்கப்படும் இந்த விருதுகளுககு மொத்தமாக 29 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் விசேடமான அம்சம் என்னவெனில் மூன்று பிரிவுகளிலும் விருதுபெறும் வீரர்களில் இலங்கையணியின் முத்தையா முரளிதரன் இடம்பிடித்துள்ளார்.

அதேநேரம் சமிந்தவாஸ் ஒருநாள் சர்வதேச போட்டிகள் பிரிவில் சிறந்த வீரருக்கான விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 2003 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் திகதி முதல் 2004 ஜூலை 31ஆம் திகதிவரையான காலப்பகுதியில் இடம் பெற்ற கிரிக்கெற் போட்டிகளின் அடிப்படையில் வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இக் குறிப்பிட்ட காலப்பகுதியில் சிறப்பாக செயற்பட்ட போட்டி நடுவர்கள், மத்தியஸ்தர்கள் சிறந்த ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகள் சிறந்த அணித்தலைவர், என்ற பிரிவுகளிலும் விருதுகள் வழங்கப்படவுள்ளன. விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டோர்களின் விபரம்:.

☆ **வளர்ந்து வரும் வீரர்களுக்கான விருது டினோ பெஸ்ட் (மே.இ.தீவுகள்)** மைக்கல் கிளார்க் (அவுஸ்திரேலியா) இம்ரான் பர்ஹாத் (பாகிஸ்தான்), உமர்குல் (பாகிஸ்தான்), ஹமின் மார்ஷல் (நியூசிலாந்து) இர்பான் பதான் (இந்தியா), டெரோன் ஸ்மித் (மே.இ.தீவுகள்)

**ஒருநாள் சர்வதேச போட்டி விருது பெறுவோர்.** முத்தையா முரளிதரன், சமிந்தவாஸ், அடம் கில் கிறிஸ்ட், கிலஸ்பி, ஹெய்டன், பொண்டிங், சிமன்ஸ் (அவுஸ்திரேலியா) லஷ்மன், டெண்டுல்கா், (இந்தியா); ஸ்டீபன் பிளேமிங், டேனியல், வெட்டோரி (நியூசிலாந்து); ஜெக்கியூஸ் கலீஸ், ஷோன்பொலக் (தென்னாபிரிக்கா); அன்றுபிளின்ட்டோப் (இங்கிலாந்து); அப்துல்ரஸாக் (பாகிஸ்தான்); ஹீத்ஸ்ட்ரீக் (சிம்பாப்வே)

☆ **டெஸ்ட் போட்டிகளில் விருது பெறுவோர்:** ராகுல் ட்ராவிட், லஷ்மன், ஷெவாக்(இந்தியா); கில்கிறிஸ்ட், கிலஸ்பி, ஹொய்டன், பொண்டிங் (அவுஸ்திரேலியா); முரளிதரன் (இலங்கை); பிளிண்ட்டோப், ஹார்மிசன் (இங்கிலாந்து); கலீஸ் (தென்னாபிரிக்கா); பிரைன்லாரா (மே.இ.தீவுகள்); ஆண்டின் சிறந்த கிரிக்கெற் வீரர்கள் முரளிதரன், ராகுல்ட்ராவிட், ஹெய்டன், கலீஸ், லாரா, லஷ்மன், பொண்டிங், ஷெவாக், ஹார்மிச்ன், பிளிண்டோப். (ற-121)

# இலங்கை அணி மீண்டும் வெற்றி



இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் ஆர்.பிரேமதாஸா மைதானத்தில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் சர்வதேச போட்டியில் இலங்கை அணி 37 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் குமார் சங்கக்கார 63 ஓட்டங்களையும் உப்புல் சந்தான ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் ஜக்கலிஸ் 3 விக்கெட்டுக்களையும் மக்காயா நிற்றினி 2 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜோன் பொலக் 54 ஓட்டங்களையும், குளூஸ்னர் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் மிகத் திறமையாக பந்துவீசிய நுவான் சொய்சா 26 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டினையும் திலகரட்ண டில்சான் 4 விக்கெட்டினையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக நுவான் சொய்சா தெரிவுசெய்யப்பட்டார். (ச-121)

# இந்தியாவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது

ஏதென்ஸில் நடைபெற்று வரும் 28 ஆவது ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவுக்கும் நியூசிலாந்துக்கும் இடையே நடைபெற்ற ஹொக்கிப் போட்டியின் முடிவை மாற்றவேண்டும்மென இந்திய ஹொக்கிச் சம் மேளனம் விடுத்த வேண்டுகோளை, சர்வதெச ஹொக்கிச் சம்மேள்னம் நிரா கரித்துள்ளது.

நேற்று முன்தினம் மலேஷியாவின் அல்தான்- அசிலான்-ஷா தலை மையில் 6 உறுப்பினர் கொண்ட சர்வதேச ஹொக்கிச் சம்மேளனம் நடாத்திய 90 நிமிட நேர நடுவர் குழுக் கூட்டத்திலேயே சர்வதேச ஹொக கிச் சம்மேளனத்தின் தொழில நுட்பப் பிரதிநிதி வியட்டொயரால், இந்தியாவின் இந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள் ளது.

இந்தியா 1.2 என்ற கோல் அடிப்படையில் நியூசிலாந்திடம் தோற்ற ஆட்டத்தில் போட்டி நடுவரின் கடைசி நிமிட முடிவுக்கு இந்திய ஹொக்கிச் சம்மேளனம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஒலிம்பிக்கின் அநேக போட்டிகளில் இந்தியா தொடாந்தும் தோல்விகளையே சந்தித்து வருகின்றமை தெரிந்ததே. (ற-7)

### ATHENS 2004
### XXVIII OLYMPICS 13-29 AUGUST

### ஒலிம்பிக் இன்று 9ஆம் நாள்

# தொடர் வெற்றிக்களிப்பின் மகிழ்ச்சியில் திளைத்துக்கொண்டிருக்கும் இங்கிலாந்து

## நான்காவது டெஸ்டில் 10 விக்கெற்றால் வெற்றி

இங்கிலாந்து-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற நான்காவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந் தியத் தீவுக்ள் அணி 10விக்கெற்றுக்களால் தோல்வியடைந்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியைப் பொறுத்தவரை தனது முதலாவது இன் னிங்ஸிற்காக 123.2ஓவர்களுக்கு முகம்கொடுத்து சகல விக்கெற்றுக்களையும் இழந்து 470 ஓட்டங்களைப்பெற்றது.

இந்த மொத்த ஓட்ட எண்ணிக்கையைப் பெறுவதற்கு பிளின்ரோவ், பெல், மைக்கல் வோகன் மற்றும் ஜைல்ஸ் ஆகியோர் தமது பூரண பங்களிப்பை வழங்கினர்.

பிளின்ரோவ் 72 ஓட்டங்களையும், பெல் 70ஓட்டங்களையும் மைக்கல் வோகன் 66 ஓட்டங்களையும், ஜைல்ஸ் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பிறாவோ மற்றும் வோஸன் ஆகியோர் தலா 3 விக்கெற்றுக்களையும் எட்வேட்ஸ் 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, ஹார்மிஸனின் பந்துவீச்சில் நிலை குலைந்து மளமளவென விக்கெற்றினை இழந்தது.

இவ்வணியைப் பொறுத்தவரை லாரா நிலைத்து நின்று ஆடி 79 ஓட்டங்களைப்பெற்றுக் கொடுத்து அணியைத் திடமான நிலைக்கு இட்டுச்சென்றார்.

சிறப்பாகப் பந்துவீசிய ஹார்மிஸன் 46 ஓட்டங்களுக்கு 6 விக்கெற்றினை வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸில் 152ஓட்டங்களைப்பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இரண்டாவது இன்னிங்ஸ்களைப் பொறுத்தவரை இவ்வணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான கைலும், ஜோஸப்பும் நிதானமாகஆடி 73 ஓட்டங்கள் வரை நின்றுபிடித்தனர்.

அதிரடியாக ஆடிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சைல், 105ஓட்டங்களைப் பெற்றார். இதேவேளை, பிறாவோ 54 ஓட்டங்களையும், சந்திர போல் 32 ஓட்டங்களையும் பெற்றனர். மேற்கிந்தியத்தீவுக்ள் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் மொத்தமாக 84.2 ஓவர்களைச் சந்தித்து சகல விக்கெற்றுக்களையும் இழந்து 318 ஓட்டங்களைப்பெற்றது.

பந்துவீச்சில் ஆண்டர்ஸன் 4 விக்கெற்றுக்களையும் ஹார்மிஸன் 3 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

வெற்றிருக்கு ஓட்டமே தேவை என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய ரெஸ்கோதிக் அடித்த பவுண்டரி மூலம் இங்கிலாந்து அணி ஒரு ஓவரிலேயே வெற்றி இலக்கை அடைந்தது. (ற-121)

# விளையாட்டு செய்திகள்

## ஒலிம்பிக்கில் இன்று...

கிரேக்கத்தின் தலைநகர் எதென்ஸில் நடைபெற்று வரும் 2004 ஒலிம்பிக் போட்டியின்பதினோராம் நாளான இன்று,

தடகளப்போடடி, கூடைப்பந்து, கரப்பந்தாட்டம்,(கடற்கரை) குத்துச்சண்டை, படகோட்டப் போட்டிகள், சைக்கிள் ஓட்டம், நீச்சல் சாகசம். குதிரையேற்றம், உதைபந்தாட்டம், ஜிம்னாஸ்டிக் நடனம், கைபந்து, ஹொக்கி, மென்பந்து, நீச்சல், ட்ரைத்லோஸ்,டேபிள் டென்னிஸ், கரப்பந்தாட்டம், பளுதூக்கும் போட்டி, வேட்டர்போலோ மல் யுத்தம் ஆகிய விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன. (ற-7)




## அருள்வாய் நல்லூர் முருகா

உலக மூவப்ப உமையாள்
மூவிரு குழந்தைகளை யணைக்க
நிலமிசை ஆறு முகமும்
பன்னிரு தோளும்கொண்டே
அலகிற் சோதியாகும் நல்லூர்க்
கந்தனே! வள்ளியை நாடி
இலங்கை வந்த அருட்சுடரே
ஈழம் நீளமாக அருள்வாயே

ஊமைகுமர குருபரனுக் கருள்செய்த
உத்தம நல்லூர் முருகனே!
ஆமைபோல ஐம்புல னடக்கி
மும்மலமும் முதலாக அடக்கியுன்
நாமம் ஆயிரம் ஜெபித்து
தியானம் இருந்து உன்தன்
பூமலர் பாதம் பற்றிட
பாவங்கள் நீர்ப்பாய் முருகனே

எழில்மிகு ஈழத்திரு நாட்டில்
தமிழர் இனமொழியாற் கலங்கி
அழுது புலம்பி அகதியாகி
அலைவதை முருகனே! நீகண்டும்
கழிவிரக்கம் கொள்ளா திருந்தால்
அடியோம் யாரிடம் செல்வோம்
பழிபாவம் தொடரா தருள
நல்லூர் முருகா இரங்காயே

**குப்பிளானூா மாதாஜி**

## தொழுதின்பம் பெறுகின்றார்

# புலிகள் மீது தாக்குதலை நடாத்தி போருக்கு வலிந்திழுக்கிறது அரசு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சீற்றம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு காயங்கேணிப் பகுதியில் கடந்த 20ஆம் திகதி இரு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டமை தமிழீழ விடுதலைப்புலிகளை மண்டும் வலிந்து யுத்தத்திற்கு இழுக்கும் முயற்சி என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கமும் படைத தரப்புமே இச்சம்பவத்துக்குப் பொறுப்பேற்க வேணடும். சமாதான முன்னெடுப்புக்களுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய இவ்வாறான சம்பவங்கள மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

இச சமபவத்தை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. அரசாங்கப் புலனாய்வு அமைப்புக்களே இதன் பின்னணியில் இருக்கின்றன. எனவே, அரசாங்கமே இந்தச் சம்பவத்தைப் பொறுப்பேற்க வேண்டும் .

அத்துடன் இது காலத்துக்கு ஒவ்வாத ஓர் நடவடிக்கையாகும் எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் கருத்துரைத்த மாவை சேனாதிராஜா எம்.பி. இராணுவத்தினரின் காவலரணுக்கு அருகாமையில் இச் சம்பவம் இடம்பெற்றிருப்பதால் இராணுவத்தினருக்குத் தெரியாமல் இது நடந்திருகக முடியாது.

இவ்வாறான படுகொலைகள் அணமைக்காலமாக தொடர்ந்து கொண்டே செல்வது வன்முறைகளைத் தூண்டும் நடவடிக்கையாகவே உள்ளது.

அதேநேரம் சமாதான நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய இத்தகையை படுகொலைச் சம்பவங்கள் பாரதூரமான பின்விளைவுகளையே ஏற்றுபடுத்தும். ஆகவே சர்வதேச நாடுகள் இந்த விவகாரத்தில் தலையிட்டு படுகொலைகளைத் தடுத்து நிறுத்தி சமாதானப் பேச்சை முன்னெடுக்க உதவ வேண்டும்.

யுத்த நிறுத்த ஒப்பநதம் தொடர வேணடுமாயின் சமாதானப் பேச்சு மீண்டும ஆரம்பிக்கப்பட வேண்டுமாயின் இவ்வாறு படு கொலைகள் இடம்பெறுவது உடன் நிறுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

சமாதான எதிர்பார்ப்புடன் இருக்கும் மக்கள் ஏமாற்றப்பட்டுக கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தால் தமிழீழ மக்கள் மட்டுமல்ல முழு இலங்கை மக்களுமே மோசமான நிலைக்குத் தள்ளப்படலாம்

இவ்விடயம் குறித்து அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேணடும். இந்த விடயத்தில் குழப்பகரமான நிலையிலுள்ள அரசாங்கம், ஓர் நல்ல தீர்வினை வழங்க வேண்டும் என பாராளுமனற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் தொிவித்துள்ளார்.


(ற-121)

## நல்லைச் சூழலில் இன்று

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தையொட்டி, நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தினால் தெல்லிபபழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மணிடபத்தில் தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை நடாத்தப் பட்டு வரும் தெய்வீக இசையரங்கில் மூன்றாம் நாளான இன்று

## புதிய இராணுவத் தளபதியின் பதவியேற்பு வைபவம்





## தொழுதின்பம் பெறுகின்றார்

வேற்பெருமான் வீதிவலம் வருகையிலே
வினையாவும் எமைவிட்டு ஓடுதையா
கூர்வேலவன் வீதிவலம் வருகையிலே
கூடியுள்ள குறையாவும் தீருதையா
நீர்மலிசடை யப்பன் மகன் வருகையில்
நனைப்பதெலாம் என்றுமே கூடுதம்மா
மயில்வாகனன் வீதிவலம் வருகையிலே
மககளெல்லாம் தொழுதன்பம் பெறுகின்றார்

*அனுசூயா அருளானந்தம்.*

## பைந்தமிழைக் காத்திடவா

வேலெடுத்து வினை தீர்க்கும் முருகா!
வேடர் குல வள்ளியம்மை துணைவா!
காலெடுத்து உன்பதிக்கு வந்தால்
கருணையது காட்டி எமைக்காப்பாய்
கோலமயிலேறி வரும் வேலா!
தேவர் குலங் காத்திட்ட தலைவா!
பால வடிவான நல்லைக் குமரா!
பைந்தமிழைக் காத்திடவே பணிந்தோம்!

-மு.முத்துக்குமார்-

துர்க்காதேவி மணி மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை நடாத்தப்பட்டு வரும் தெய்வீக இசையரங்கில் மூன்றாம் நாளான இன்று எஸ். ஜெயகௌரி, கே. ஜெயபாரதி ஆகியோரின் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

அத்துடன் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் இரவு 7 மணிக்கு நடாத்தப்பட்டு வரும் முத்தமிழ நிகழ்வுகளில் இன்றும் தமிழக விரிவுரையாளர் சாண்டில்யன் இராமகிருஷ்ணமூர்த்தியின் சிறப்புச சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

மற்றும் இலங்கை சின்மயா மிஷன் ஆதரவில் நல்லை ஆதன மணடபத்தில் இரவு 7 மணி முதல் 8.30 மணிவரை "நல்லூரான் திருவடியை எனும் மகுடத்தில் பிரம்மச்சாரி ரமணி சைத்தன்யாவின் ஆன்மீகச் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது. (ந-7)

## வீதி சேதம் பயணிகள் சிரமம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கரம்பன் புனித- செபஸ்தியார் ஆலயததிலிருந்து பிரியும் கண்ணகி அமமன ஆலய வீதி கடந்த கால யுத்த அனர்த்தங்களால் கடும் சேதமடைந்துள்ளது.

கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக கவனிப்பாரற்றிருக்கும் இவ் வீதியால் பிரயாணம் செய்ய முடியாமல் உள்ளது.

இதேவேளை அண்மையில் முச்சக்கர வண்டியொன்று இந்த வீதியல் தடம் புரண்டமை குறிபபிடத்தக்கது. (ந)




(பலாலி)

யாழ. மாவட்டத்தின் புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் எஸ்.ரி. தென்னக்கோன் ஆர்.எஸ்.பி. என்ரீசி கடநத 20ஆம் திகதி சமய வழிபாடடின் பின்னர் காலை 9.27க்கு தனது பதவியைப் பொறுப்பேறறுக் கொண்டார். பதவியேற்ற பின்னர் பீரங்கிப் படையினரால் வழங்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட இராணுவத் தளபதி சகல இராணுவத்தினருடனும் தேநீர விருந்துபசாரத்தில் கலந்து கொணடதன் பிறகு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சகல சேனையகம் மற்றும் படையணிகளின் கட்டளையிடும் அதிகாரிகளை பலாலித் தலைமையகத்தில் சந்தித்து விசேட கலந்துரையாடலையும் நடாத்தினார்.


## விவாத அரங்கு -5

விடயம்

வீடியோப் படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதிக்கின்றது, பாதுகாக்கின்றது.

நடுவர் : புத்தூர் சி.சிவநேசன்
(பிரபல சட்டத்தரணி)

உங்கள் வாதங்களை எழுதி
அனுப்பிவையுங்கள
*அனுப்பவேண்டிய முகவரி*
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

### வெற்றியின் ரகசியம்!

வேலைக்குப் போகும் சிலபேரை விசாரித்துப் பாருங்கள்."ஏன்தான் இந்த வேலைக்கு வநதேனோ என்றிருக்கிறது'' என்று சொல்லி அலுத்துக் கொள்பவர்கள் பலபேர். ''எனககு என் வேலை பிடித்திருக்கிறது என்று சொல்பவர்கள் சிலபேர் தான் உள்ளனா''. "ஒருவனுக் குப் பிடித்தமான பொழுதுபோக்கே அவனது தொழிலாக இருந்துவிட்டால் அவனை மாதிரிக் கொடுத்து வைத்தவன் வேறுயாரு மல்ல'' என்றாராம் பேரறிஞர் பெர்னாட்ஷா.

நீங்கள் ஒரு அலுவலகத்தில் வேலை செய்தாலும் சரி. தனியார் நிறுவனத்தில் வேலை செய்தாலும் சரி. ஒரு முதலாளியிடம் வேலை செய்தாலும் சரி. உங்கள் துறையில் வெற்றிகரமாக இருக்கின்ற சிலரைப் பார்த்து ''உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன?'' என்று கேட்டுப் பாருங்கள். அநேகமாக எல்லோரும் கூறும் பதில் என்ன தொியுமா? ''எனக்கு நான் செய்யும் வேலை மிகவும் பிடித்திருக்கிறது'' என்பது தான்.

சரி... அது போல மற்றவர்களாலும் வெற்றிகரமாகச் செயற்பட முடியுமா? முடியும் என்கின்ற னர் சில நிபுணர்கள். எந்தச் சூழலையும் நமது கட்டுப்பாட்டிற்குள் வைக்கக் கற்றுக் கொண் டால் போதுமாம். அதற்கு அவர்கள் ஆறு வழிகளைக கூறியுள்ளார்கள்.

முதலில் உங்கள் மேலதிகாரி அல்லது முதலாளியின் எதிர்பார்ப்பிற்கு தகுந்த மாதிரி உங்கள் வேலை இருக்கிறதா அல்லவா என்று பாருங்கள். அப்படி இல்லாவிட்டால் அதனையும் மாற்றி விடுங்கள்.

அடுத்ததாக உங்களுக்கு மேலே பணிபுரிபவர்கள் உங்களுக்குக் கீழே பணிபுரிபவர்கள் எல்லோரிடமும் உங்கள் பழக்கவழக்கம் நல்லபடியாக இருக்கின்றதா இல்லையா என்று பாருங்கள். அப்படி அமைந்திராவிட்டால் அதையும் சரி செய்து விடுங்கள்..

உங்கள் மீது மற்றவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும். நீங்கள் எந்த முடிவு எடுத்தாலும் அது நல்ல முடிவாக இருக்கும் என்ற எண்ணம் மற்றவர்களுக்கு வரவேண்டும். அது போல் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் உடல் நிலை நன்றாக இருக்க வேண்டும். அதுபோல உங்கள் மனதும் நன்றாக இருக்க வேண்டும். இவையிரண்டும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அழகாக இருக்க வேண்டும். ஆக நீங்கள உங்கள் தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இது மிகவும் அவசியம்.

நீங்கள் எங்கே வேலை செய்தாலும் சரி. உங்கள் நிர்வாகம் செயற்படும் விதம் எப்படி என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். உங்கள் நிர்வாகம் இப்போது என்ன செய்கின்றது அதன் குறிக்கோள் என்ன? அது நீடிப்பதற்குக் காரணம் என்ன? என்பவற்றையெல்லாம் நன்கு தெரிந்து கொள்ள

## பிரச்சினையிலிருந்து மக்களை விடுவிக்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக வேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க எடுத்துரைப்பு

(கொழும்பு)

நாட்டில் இன்று நிலவும் பிரச்சினைகளிலிருந்து அதனை மீட்டெடுக்கும் கஷ்டமான சவாலை எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தயாராக வேண்டுமென எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவா அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், நாட்டில் தற்போதுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆட்சியானது மீண்டும் 70 ஆம் ஆண்டின் நாட்டு நிலைமைக்கு இட்டுச் சென்று கொண்டிருக்கின்றது.

இரண்டு ஆண்டுகள் அர்ப்பணிபபுகள் செய்த மக்களுக்கு அதன் பிரதிபலனகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான பொறுப்பை ஜே.வி.பி. உட்பட கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



பொருட்களின் விலை அதிகரிப்பினால் மக்கள் பல நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்துள்ள நிலையில் அவர்களின் கஷ்டங்களைத் தீர்த்து வைப்பதற்கு ஐக்கியக் தேசிய கட்சி தயாராக வேண்டும் எனத் தெரிவித்தார். (ற-8)

## தெற்காசியாவின் பாரம்பரியத்திற்கே உரிமை கோரும் தமிழ்மொழியால் நாட்டுக்குப் பெருமை சேர்ந்துள்ளது

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பெருமிதம்



(கொழும்பு)

ஆசியாவின் மிகவும் பழமையான மொழி தமிழ் மொழியாகும். அதற்குப் பழமையான வரலாறுகள் உண்டு என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் கொழும்பு சாஹிராக் கல்லூாியில் நடைபெற்ற தமிழ் விழாவில் கலந்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட தமிழ் மொழியின் இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளமை குறித்து இலங்கை பெருமிதம் கொள்ள வேண்டும்.

தெற்காசியாவிலேயே மிக நீண்ட பாரம்பரியத்துக்கு உரிமை கோரும் தமிழ் மொழியால் எமது நாட்டுக்கு பெருமையும் கௌரவமும் ஏற்பட்டுள்ளன.

உலகில் உள்ள ஏனைய திராவிட மொழிகளை விட தமிழ்மொழி சிறப்பாக விளங்குகின்றது தமிழ் நாட்டில் சுமார் 6 கோடி மக்களால் பேசப்படும் தமிழ் மொழியானது இலங்கை, சிங்கப்பூர் மலேசியா, இந்தோனேசியா, மியன்மார், தென்னாபிரிக்கா மற்றும் மொறிசியஸ் போன்ற நாடுகளிலும் பேசப்படுகின்றது.

தமிழானது மிகவும் அழகான மொழியாக- ஆழமான மொழியாக விளங்குகின்ற அதேவேளை, இந்த நாட்டில வாழும் தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுககும் ஒரு பொதுவான மொழியாகவும் திகழ்கின்றது.

நாட்டில் நாங்கள் எல்லோரும் ஒரு தாய் மக்களாகவே வாழ்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இங்கு தமிழிலேயே உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ற-க)

## இராசி பலன்

23.08.2004 *(ஆவணி 07 ,திங்கட்கிழமை )*
அட்டமி பி.இ 12.24 மணிவரை
விசாகம் மரண மு.ப. 8.36 மணிவரை
இராகுகாலம் 7.35 - 9.05 மணிவரை
சுபநேரம் 12.05 - 1.35 மணிவரை

**மேடம்**

பிரயாண பயம், காரியத்தடை, ரோக நிலை, போசன சுகம்.

**இடபம்**

சௌக்கிய விருத்தி ,வாகன சுகம், விருந்துபசாரம்,நல்ல முயற்சி.

**மிதுனம்**

தொழில்விருத்தி, காரிய நன்மை,தன இலபாம், செல்வாக்கு.

## மாபெரும் விவசாயக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வட்டக்கச்சியிலுள்ள ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் எதிாவரும் முதலாம் திகதி மாபெரும் விவசாயக் கண்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், விவசாயத் திணைக்களம்,கால்நடை உற்பத்தித்திணைகளம் மற்றும் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம் என்பவற்றின் அனுசரணையுடன்.இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டள்ளது.

போரின் பிடியின் அகப்பட்டு மீளப் புத்துயிர் பெற்று வரும் தாயக மண்ணின் மக்களின் விவா சாய அறிவினைப் பெருக்குவதற்கும் புதிய தொழில் நுட்ப அறிவினைப் பெறுவதற்கும் விருத்தி செய்வதற்குமாக இக் கண்காட்சி நடாத்தப்படவுள்ளது.

இக் கண்காட்சி அனைத்து சமூக மட்டங்களிற்

இப்போது என்ன செய்கின்றது அதன் குறிக் கோள் என்ன? அது நீடிப்பதற்குக் காரணம் என்ன? என்பவற்றையெல்லாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். உங்களுடைய வேலைச் சூழலைக் கட்டுப்பாட் டில் வைத்துக்கொள்ள இவையாவும் சிறந்த வழிகள்.

இவை தவிர எல்லாவிதமான வேலைகளுக் கும் பொருந்தக் கூடிய சில வெற்றி ரகசியங்க ளும் உண்டு. அவை என்னவென்றால் ஆக்கபூர் வமான செயல் ஆக்கபூர்வமான முடிவைத் தரும். நன்றாகச் சிரியுங்கள் அப் போது தான் அது திரும்பக் கிடைக்கும். எதையும் முன் நின்று செய்வதற்கு ஆர்வம் காட்டுங்கள்.

உங்கள் கடந்த கால தோல்வியால் ஏற் படும் மனச்சோர்வு உங்களை முட்டுக்கட்டை யாக இருக்க முயற்சி செய்யும். அதைத் துரத்தி விடுங்கள். உங்களுக்கு ஒரு பொறுப்பான வேலை கிடைத்துவிட்டதென்றால் உடனே சத்தம் போட் டுக் குழப்பத்தை உண்டாக்கி சூழ்நிலையை பதற்றமாக்கிவிடாதீர்கள். நீங்கள் எந்தச் சூழலை யும் திறமையாகக்கையாளக் கூடிய வர் என்பதை நிரூபிக்க வேண்டும் அது தான் முக்கியம். இவை தான் ரகசியம்.

ஒருவர் சொன்னார்."நான் இந்த வேலையில் சேர்ந்ததிலிருந்து இதுவரையில் ஒரு முறை கூட லவே எடுத்ததில்லை சார்" என்றார். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. "நீங் கள் இந்த வேலையில் எப்போது சேர்ந்தாகள்?" என்று கேட் டேன். "இன்று காலை 8 மணிக்கு சேர்ந்தேன்" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

**மிதுனம்**
தொழில்விருத்தி, காரிய நன்மை,தன இலபாம், செல்வாக்கு.

**கடகம்**
உடல் நலக்குறைவு, தொழில் மந்த நிலை, குடும்ப மகிழ்ச்சி, வியாபாரவிருத்தி.

**சிங்கம்**
மனச் சோர்வு காரிய தாமதம், மாதா சுகம், ரோகநிலை.

**கன்னி**
செய்தொழில் நன்மை, வாக்கு மேன்மை, தன இலாபம், நல்ல முயற்சி.

**துலாம்**
காரிய தாமதம், கடும் வார்த்தை,தனவிரயம், அதிகாரம் .

**விருச்சிகம்**
கல்வியில் ஆர்வம், முயற்சி கைகூடும், தொழில் நன்மை, போசன சுகம்.

**தனுசு**
சயன சுகக்குறைவு, பணவிரயம், உறவினர் வெறுப்பு காரியதடை.

**மகரம்**
பொருள் சேர்க்கை, உறவினர் சந்திப்பு, க்ர்த்தி, நல்ல காரியம்.

**கும்பம்**
தொழிலில் முன்னேற்றம், புதிய விடயம், முயற்சி கைகூடும், அதிகாரம்.

**மீனம்**
காரிய தாமதம்,மனப்பதற்றம், தொழிலில் ஆர்வம் பிரயாணம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

வரும் தாயக மண்ணின் மக்களின் விவா சாய அறி வினைப் பெருக்குவதற்கும் புதிய தொழில் நுட்ப அறி வினைப் பெறுவதற்கும் விருத்தி செய்வதற்குமாக இக் கண்காட்சி நடாத்தப்படவுள்ளது.

இக் கண்காட்சி அனைத்து சமூக மட்டங்களிற் குமாகக் குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கும் விவசாயப் பெருமக்களிற்கும் மிகுந்த பயனுள்ளதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இக் கண்காட்சியில் பூரண தகவல்களை வழங்கு வதற்குரிய ஆக்கங்கள் செய்கை முறையிலும் ஒளிப் படம் மற்றும் புகைப்படக் காட்சிகளாகவும் விளக்கவு ரைகளாகவும் தயாராகவுள்ளன.

எமது பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக் கும் விவசாய வளத்தினுடைய பல்வேறு உச்சப் பயன்பாட்டையும் இவ் வளங்களைப் பேணிப் பாதுகாப்பது பற்றியும் பூரண விளக்கங்களும் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன. இந் நோக்கங்களை நிறைவேற்றும் முக மாக பயிர்வளர்ப்பு, விலங்குவளர்ப்பு, அவற்றின்முகா மைத்துவம், நோய்க் கட்டுப்பாடு,விதைத் தெரிவு மற்றும் விதை உற்பத்தி போன்ற பல அரிய பகுதிகளும் காட் சிப்படுத்தப்படவுள்ளன. (ற)

# சுகாதாரப் பரிசோதகர் பற்றாக்குறை

(சுதுமலை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவி லுள்ள நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு ஆகிய 3 இடங்களிலும் பொதுச்சுகாதாரப் பரிசோதர் ஒருவரே கடமை புரிந்து வருவதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

நெடுநதீவுப் பகுதிக்கு கடந்தவாரம் புதிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்பட்டார். கடந்த 4 வருடங்களிற்கும் மேலாக நயினாதீவு, நெடுந்தீவு மற் றும காரைநகர் பகுதிகளில் கடமை புரிந்த பொதுச் சுகா தாரப் பரிசோதகர்களிற்கு கடந்த யூலை மாதம முதல் வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத் தால் இடமாற்ற உத்தரவுகள் வழங்கபபட்டமையினாலேயே இந்நிலைமை தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-252)

# உடைந்த எலும்பைப்பொருத்தலாம்

# மனம் உடைந்தால்...?

**வேதர்**



சித்திரவதை செய்யும் சிறுமை மனிதரிடத்தில் இல்லா தொழியுமாயின் பூமி புனித பூமி யாகிவிடும். பணத்திற்காக சித்திரவதைகள் நடை பெறுகின்றன. தீவிரவாதிகள் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்காக சித்திரவதை கள் நடைபெறுகின்றன. விசாரணைகளை விஞ்ஞான ரீதியாக நடத்தி குறித்த தகவல்களைப் பெறுவதற்கான பரீட்சையமின்மை முக்கிய காரணமாகலாம். பொய் கண்டுணர் கருவி **(Lie Betector)** போன்றவைகள் பரவலாகப் பயன்பாட்டிற்கு வரவில்லை. இதனால் கைது செய்யப்படும் ஒருவர் தலைகீழாகக் கட்டி தொங்க விடப்படுவதுடன், சித்திரவதைகள் ஆரம்பிக் கின்றன. இது மழைவிட்டும் தூவானம் விடாத நிலை ஒன்றுக்கு வித்திடுகின்றது. அதாவது போர் இல்லை. ஆனால் போரினால் ஏற்பட்ட உளவியல் தாக்கம் பாதிக்கப்பட்டவர்களை பல ஆண்டுகள் ஆட்டிப் படைக்கும். சில சமயம் வாழ்நாள் பூராகவும் தீராத வேதனையுடன் அழுந்தவைக்கும்.

கொடூரமான சித்திரவதைகளுக்கு ஆளாகிய ஒருவர் உங்கள் ஊருக்கு அல்லது நாட்டுக்கு வந்து குடியேறி வாழ்ப வராக இருப்பர். அவர் உங்கள் அயலில் தான் ஒரு வீட்டை ஏற்பாடு செய்து வ்ாழ்பவராக இருக்கலாம். அவரது பிள்ளைகளும் உங்கள் பிள்ளைகளுடன் அதே பாடசாலைய்யில் படிப்பவர்களாகவும் இருக்கலாம். அவர் ஒரு அமைதியான மனிதர். அடக்க மான பலக்கவழக்கங்கள் கொண்டவர். மரியாதையுடன் நடந்து கொள்பவர், ஒதுங்கி வ்ாழ்பவர் என்று நீங்கள் அறிந்து வைத்திருக்கின்றீர்கள். ஆனால் அவையாவும் வெளித்தோற்றங் களே என்று நீங்கள் அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள்.

அத்துடன், ஏமாந்தும் விடு வீர்கள். அவர் மீது நடத்தப்பட்ட சித்திரவதைகள், அவமானங் களை நினைவில் சுமந்து கொண்டு தன் உள்ளக் குமுறலை மறைத்துக்கொண்டு வாழ்ப வராய் இருப்பார். அத்தகைய ஒருவர் ஏதாவது ஒரு காட்சி யைப் பார்த்தால் அல்லது வழ மைக்கு மாறான ஒரு சத்தத் தைக் கேட்டால் திடீரென்று அதிர்ந்து போவார். கடந்தகால அனுபவங்கள் அவர் மனத்தி ரையில் ஓட ஆரம் பித்துவிடும்.

அந்த அனுபவங்களையுடைய ஒருவர் பல்பொருள் அங்காடி யொன்றின் முன்னால் நின்று கண்ணாடியினூடே உள்ளே உள்ள பொருட்களைப் பார்த் துக்கொண்டு நிற்கின்றாரென வைத்துக்கொள்வோம். இரண்டு இராணுவத்தினர் அவ்விடத்தில் நடந்து கொண்டிருப்பது கண் ணாடியில் தெரிந்தது. திடீ ரென்று அவரது கை, கால்கள் உதறுகின்றன. யாரோ தனது கழுத்தைப் பிடித்து நெரிப்பது போல அவர் உணர்கிறார். அவருக்கு வியர்வை கொட்டத் தொடங்குகின்றது. பல வருடங் களுக்கு முன்னர் பல மைல் களுக்கு அப்பால் நடந்த ஒரு சம்பவம் அவர் கண்முன் வந்து நின்றுவிட்டது. இப்படி எவருக் கும் நடக்கலாம். எம் மத்தியில் வாழும் பலர் இவ்வாறானவர் களாக இருக்கலாம். பள்ளி மாணவர் ஒருவர் ஒருநாள் படையினரால் கைது செய்யப் பட்டான். தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டான். பொல்லுகளாலும், வயர்களாலும் தாக்கப்பட்டதாகத் தெரிவித் தான். ஒருநாள் சில பொலிஸ் காரர்கள் பலவந்தமாகத் தனது வாயைத் திறக்க வேறு ஒருவர் தனது வாயினுள் சிறுநீர் கழித்ததாக நீதிமன்றம் ஒன்றில் அம் மாணவன் கூறியிருந்தான்.

சித்திரவதை ஏன் பரவலாகக் காணப்படுகிறது. சித்திரவதை செய்யப்படுபவர் களில் அநேகர் தங்கள் தாய் நாட்டைவிட்டு புலம்பெயர்ந்து வேறு நாடுகளுக்குத் தப்பி ஓடி புதிய வாழ்க்கையை ஆரம்பிக் கலாம் என்று நம்புகின்றார்கள். வேறு இடங்களில் குடியேறினா லும் அவர்களின் உடல், உளவேதனைக்ள் அவர்களைத் தொடர்கின்றன. உடன் பிறப் புக்களோ, உறவினர்களோ, நண் பர்களோ துன்புறுத்தப்பட்டும் மோசமாக நடாத்தப்பட்ட போது கையாளாகதவன் போல பார்த் திருந்தேன் என்ற குற்ற உணர்வு அவர்களை வாட்டி வதைக்கும்.

அத்தகையவர் வேறு எவரையும் நம்பமாட்டார். யாரைக் கண்டாலும் அவர் தன்னைக் காட்டிக்கொடுக்கத் தான் வந்திருக்கிறார் என்று பயப்படுவார். தன்னை ஒரு அந்நியராகக் கருதிக்கொண்டு ஒதுங்கியே இருப்பார். உலகமே தன்னை வெறுப்பதாக நம்புவார். உலகத்தின் மீது நம்பிக்கை இருக்காது. உடலும் உள்ள மும் புண்பட்டிருக்கும் நிலையில் பாதிக்கப்பட்டவர் போலவே உதவி செய்ய முன் வந்துள்ளவரும் திணறிப் போய் விடுகின்றார். தீயினால் சுட்டவடு மாறும் நாவினால் சுட்டவடு மாறாது என்பது போன்ற நிலை புண்பட்ட மனதை ஆற்றுவதற்கு அரவணைப்பே தேவை.

அவர்கள் அனுபவித்த சித் திரவதையை மனம் திறந்து சொல்லிவிடுவதற்கு வாய்ப்பளித்தல் வேண்டும். ஏற்பாடுகள் செய்யப்படுதலும் வேண்டும். அத்தகையவர் களுக்கு இரண்டு வேதனைகள் முக்கியமானவை. சித்திரவதை அனுபவித்தது முதலாவது. அது பற்றி மற்றவர்களிடம் பேசமுடியாமல் இருப்பது அடுத்தது. அவரின் அனுபவத்தைக் கேட்பதற்கு ஆட்கள்தேவை. தன் மீது கரிசனைகாட்டுவதற்கு ஆட்கள் இருக்கின்றார்கள் என்று அவர்கள் நம்புதல் வேண்டும். தன்னிடம் அனுதாபம் கொண்டுள்ளவரிடம் தனது வேதனைக்குரிய விடயங்களைக் கொட்டித் தீர்த்து விடலாம் என்று பாதிக்கப்பட்டவர் விரும்புகையில் அதனை மிகுந்த பொறுமையுடன் கேட்டல்வேண்டும்.

கேட்பதற்கு விரும்பாமல் இருப்பது அவர் மீது நடத்தப் படும் இன்னுமொரு சித்திரவதை ஆகிவிடும். சித்திரவதைக்குள் ளாகியவர் அவமான உணர் வால் வேதனைப்படுகின்றார். பல தடவைகள் பலரால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண்ணிடம், உங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

அவமானப்பட வேண்டியவர் கள் நீங்களல்லவே! அவர் களலல்வா? என்று கூறி ஆறுதல் படுத்தவேண்டும். மனித னுக்கு மனிதன் இழைக்கும் மனித நேயமற்ற செயல்கள் பூமியை நரகமாக்கிக் கொண்டிருக் கின்றன.

*'நன்றி தமிழ் உலகம'*

## பிணைபெற முடியாத கைது ஆணை

# முதலமைச்சர் உமாபாரதிக்கு ஆதரவாக 24 அமைச்சர்கள் பதவி விலகினர்

(மத்திய பிரதேசம்)

**மத்திய பிரதேச முதலமைச்சர் உமாபாரதிக்கு ஆதரவு தெரி வித்து 24 அமைச்சர்கள் பதவி விலகியுள்ளனர்.**


முதலமைச்சர் உமாபாரதி தமது பதவியிலிருந்து விலக முடிவு செய்ததற்கு ஆதரவு தெரி வித்தே அவர்கள் இப்பதவி வில கலை மேற்கொண்டுள்ளனர்.

கர்நாடக நீதிமன்றம் ஒன்று முதலமைச்சர் உமாபாரதிக்கு எதிராக பிணை பெறமுடியாத தை ஆணை ஒன்றை பிறப்பித் ததை அடுத்து, நேற்று முன்தினம் அவர் வீ.ஜே.பி. தலைவரிடம் தனது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்திருந்தார்.

இன்று இவ்வழக்குத் தொடர் பான விசாரணை ஹுப்ளியில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, 1995இல் ஈபிசா மைதானத்தில் உமாபாரதி தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றியபோது ஆத்திர மூட்டும் வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டதால், ஏற்பட்ட வன் முறையில் பலர் உயிரிழந்தமை தொடர்பாகவே இவ் வழக்கு தாக் கல் செய்யப்பட்டது.

உமாபாரதி முதலமைச்சர் பதவியில் தொடர்ந்தும் நீடிக்க வேண்டுமா என்பதை முடிவு செய் யவும் வி.ஜே.பி.யின் ஆட்சி மன்றக் குழுக் கூட்டம் இன்று நடைபெற வுள்ளது. (ற-7)



மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 60 வது பிறந்த தினம் நேற்றுமுன்தினம் நாடுமுழுவதும் அனுசரிக்கப்பட்டது. புதுடில்லியிலுள்ள ராஜீவின் சமாதியில் நடைபெற்ற சர்வமத பிரார்த்தனையில் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா வதெரா தனது மகன் ரேஹானுடன் கலந்து கொண்டார்.



மேற்கு வங்கத்தில் மிதுனாபூரில் வெள்ளத்தால் சூழப்பட் டுள்ள சாலையை கடந்த புதன்கிழமை கடக்க முற்படும் லாரி. கன்சாய் மற்றும் சிலாய் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட தால் மிதுனாபூர் மற்றும் பங்குரா உட்பட பல்வேறு மாவட்டங் களை இணைக்கும் சாலைகள் வெள்ளத்தால் சூழப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 30 கோடி ரூபா முத்திரைத்தாள் மோசடி மர்மங்கள் வெளியாவதாக சி.பி.ஐ. அறிவிப்பு

(சென்னை)

30 ஆயிரம் ரூபா போலி முத்தி ரைத்தாள் மோசடியில் கைது செய்யப்பட்ட பிரதான குற்றவாளி யான டெல்கிக்கும் டி.ஐ.ஜி. முகம்மது அலிக்கும் நேரடித் தொடர்பு இருப்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருப்பதாகச் சென்னை உ்யர் நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தெரிவித்துள்ளது.

முகமதுஅலி தாக்கல் செய்த ஜாமீன் மனு சென்னை முதன்மை நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக் கிழமை விசாரணைக்கு வந்த போது, இதனைத் தெரிவித்த சி.பி.ஐ. வழக்கறிஞர் ஜேக்கப் டானியல் பெங்களூர் சிறையில் டெல்கி இருந்தபோது அவருடன் செல்போனில் முகமது அலி பேசி யுள்ளார் எனக் கூறினார்.

டெல்கியின் கூட்டாளி நிஜா முதீன் கைது செய்யப்பட்ட போது அவரை விடுதலை செய்ய முக்மது அலிக்கு 25 இலட்சம் ரூபா கொடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். டெல்கியின் மற் றொரு கூட்டாளியும் தற்போது கைதாகிச் சிறையில் இருப்பவரு மான வார்கீஸ் அளித்த வாக்கு மூலத்தில் இந்த விபரம் இருப்ப தாக அவர் தெரிவித்தார்.

முத்திரைத்தாள் மோசடியில் முகமது அலிக்கு உள்ள தொடர்புகள் குறித்து ஏ.டி.ஜி. பி.ரமணி, ஐ.ஜி. அமித்வர்மா, எஸ்.பி.தாகூர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் சி.பி.ஐ.விசாரணை யில் விளக்கமாகக் கூறியிருப்ப தாகவும் ஜேக்கப் டானியல் தெரி வித்தார். எனவே, முகமது அலியை ஜாமீனில் விடுதலை செய்யக் கூடாது என்று அவர் கூறினார். (து)

# இந்தியச் செய்திகள்

## கடலில் மூழ்கிய மீன்பிடிக் கப்பல்

மீன்பிடிக் கப்பலொன்று நடுக் கடலில் மூழ்கி விபத்துக்குள்ளா னதில் அதில் பயணம் செய்த 12 பேரைக் காணவில்லை. இவர் களில் 11 பேர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களாவர்.

சென்னையைச் சேர்ந்த குமார் என்பவருக்குச் சொந்தமான எஸ். பி.சரளி என்ற மீன் பிடிக்கப்பல் ஆந்திரா மற்றும் ஒரிஸா மாநிலக் கடற்பகுதியில் மீன்பிடித் தொழி லில் ஈடுபட்டுவந்துள்ளது.

ஒரிஸாவின் பாரதித்துறை முகத்திலிருந்து கடந்த 9 ஆம் திகதி புறப்பட்ட இந்தக் கப்பல், இயந்திரக் கோளாறு காரணமாகக் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வங்கக் கடலில் மூழ்கியது.


கபபலில் இருந்த ஒருவர் மட்டும தப்பித்து வந்து கொடுத்த தகவ லையடுத்து, கப்பல் விபத்துக்குள் ளானது தெரிய வந்திருப்பதாக அதன் உரிமையாளர் குமார் தெரி வித்துள்ளார். (து)



# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)

## சிம்மம்



**26.12.2004 முதல் 11.02.2005 வரை**

அரசாங்கம் மூலமாக எதிர்பார்த்த எழுத்து வகையிலான வேலைகள், அரசியல்வாதிகளின் தொடர்பு, அவசர காரியங்களை நிறை வேற்ற உதவியாக இருக்கும். சுப விஷயம்பேசி முடிப்பதும் மிக முக்கிய அம்சமாகும். உத்தியோகப் பிரிவினருக்கு இக்கால பிற்பகுதி எல்லா வழியிலும் சிறப்புத் தருவதாக இருக்கின்றது. தொழில்கள் பல சிறப்புத் தருவதாக அமைந்திருக்கும். பலர் பாராட்ட பொதுத் தொண்டுகள் சில செய்வதும் குறிப்பிடத் தக்கதாக இருக்கும். பகைவர் மறைந்த காலம் இது. புகழ்வோரே அதிகம். இயந்திரம் வாகனம் சம்பந்தமான தொழில் உள்ளவர்களுக்கு யாகவே இருக்கும். அரசியல் வட்டாரத்தினர் உங்களுக்கு ஆகாதவர்களாக இருப்பர். இந்த ராசிப் பெண்கள் தேக ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். வயிற்றுக்கோளாறு போன்றவைகள் பாதிக்கக்கூடும். இதனால், மருத்துவ செலவும்கூட பெறக்கூடும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு நல்ல போக்குடன் இருக்கமுடியாது. மேல் நிலை மனிதர்களுடன் கருத்து மோதலும் வாக்குவாதமும் உண்டாக வாய்ப்பு இருக்கிறது. சில சமயம் கசப்பான பேச்சுக்களும் இடம்பெறும். புதிய திட்டங்கள் செயல்படுத்த தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு தக்கபடி நண்பர்கள் குழு உங்களை வலம் வருவதைக் காணலாம். செய்தொழில் வழியில் சில புதிய புத்தியை கையாள்வது மற்றவரால் பாராட்டப்படுவதும் இருக்கிறது. இந்த நேரத்தில் நீங்கள் சற்றுக் கூடுதலாக அலைச்சலை மேற்கொண்டு இருக்கிறீர்கள் என்றால் அதற்குக் காரணம் காரிய சாதனையும், அடுத்தடுத்து இருப்பதால் குடும்பத்தில் ஒரே சீரான போக்கு உண்டாகும். பெண்களுக்கு வெண்மைக்கல் ஆபரண சேர்க்கையும் உண்டாகும். பெண்களுக்கு தன கொடுக்கல் வாங்கல் தனிச்சிறப்பு உடையதாக இருக்கும். சிலர் இப்போது அயல்நாடு செல்வதும் இருக்கக் கூடும். முன்பு அவசரப்பட்டு முடிக்க வேண்டி இருந்த வேலைகள் அமைதியாக முடிக்கும் வாய்ப்பினைப் பெற்றுவிடும். வழக்கு பாதிப்பு இல்லை. அப்படி உண்டானாலும் இவை உங்களுக்கு அனுகூலமானதாகவே இருக்கும். சிலர் போட்டி, பந்திய விளையாட்டுக்களில் ஈடுபட்டு பரிசு பெறுவது, பாராட்டுப் பெறுவதும் இருக்கும். குடும்பத்தின் தேவைகள் குறித்த ப்டியே பூர்த்தியாவதால் இல்லறப் யும். இந்த கலைப்பிரிவினர்களுக்கு கூட்டு ஒப்பந்தம் ஏற்படுவதும் இருக்கும். இதன் காரணமாக மேற்கு, வடமேற்கு திக்குப் பிரயாணம் ஏற்பதும் உண்டாகும். இப்பிரிவு விவசாயிகளுக்கு இயந்திர கருவி வாங்குவதும் இருக்கும். மாணவ, மாணவியருக்கு மேல் கல்வி பெற வாய்ப்புக்கிட்டியிருக்கிறது.

**அதிர்ஷ்ட எண்கள் : 3, 8, 2**
**அனுகூலத் திக்குகள் : வட்மேற்கு, கிழக்கு**

**07.05.2005 முதல் 20.06.2005 வரை**

குடும்ப உறவினர்கள் இல்லம் வருதல், சுபவிஷயங்கள் பேசும் வாய்ப்பு உண்டாகும். இதன் காரணமாக விருந்து உபசாரங்கள் உண்டாகும். மேலும் குடும்பத்துடன் புண்ணிய ஸ்தல பிரயாணத்தையும் தொடர வேண்டியிருக்கும். கணவன், மனைவி உறவு திருப்பதியாகவே இருக்கும். சில விஷயங்களில் கருத்து வேறுபாடு இருக்கும். இதைப் போக்க சுமுக நிலையே வேண்டும். பின் நீங்கள் காரியத்தைச் சாதித்து விடலாம். இந்த நேரம் தொழில் வளர்ச்சிக்கு கடன் வரவு தேவைப்படுகிறது. வெளிவட்டார மனிதர்கள் ஒத்துழைப்பு தொழில் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். இப்போது பிற்பகுதியில் சிலர் திருமணம் ஏற்பதும், புதுகுடி புகுவதும் இருக்கின்றன. மேலும் விருந்து உண்பதும் இருக்கிறது. குடும்பத்தில் கணவன், மனைவி உறவு எல்லா வகையிலும் கருத்து ஒரு மித்ததாக இருக்கும். குழந்தைகள் ஆரோக்கியம் கவனிக்கப்பட வேண்டும். உஷ்ணப்பிணி மருத்துவச் செலவினங்களும் இடம்பெறும். உத்தியோகப் பிரிவினருக்கு பதவி உயர்வு இடம்பெறும். பாராட்டுக்களும் உண்டாகும். கலைப்பிரிவினர்களுக்கு முயற்சி இருக்கும் அளவுக்கு திருப்தியான சூதாட்டம் போன்றவை தள்ளி வைக்க வேண்டியவை. புதிய உடைகள் பழைய ஆபரணம் மாற்றுவது போன்றவை பெண்களுக்கு முக்கிய பலன்கள் ஆகும். இதேநேரம் பெண்கள் தங்கள் ஆரோக்கியத்தில் கவனம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். சகோதர, சகோதரிகள் வகையில் சுப செலவுகளும் இடம்பெறும் மாதம். அரசியல் மனிதர்களுக்கு தனக்கு ஆகாமல் இருந்த சூழ்நிலை மறைந்து பாராட்டும் அதனால் நற்பயனும் உண்டாகும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 4, 7, 8**
**அனுகூலத் திக்குகள் : கிழக்கு, வடக்கு**

**03.08.2005 முதல் 15.09.2005 வரை**

உங்கள் செயல்முறைகளை மாற்றிக் கொள்ள மாட்டீர்கள். இந்த போக்கு சிலவழியில் நன்மையாகவே இருக்கும். வரவேண்டிய பணம் ஒரு பகுதி வந்தால் வந்து சேரும். வழக்கு இருப்பவர்களுக்கு தள்ளிப்போட்டுக்கொண்டே போகவேண்டி இருக்கும். கடன் பாதிப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கும். இதனால்தொழிலில் ஒரு பகுதி வேகம் உடையதாக ஆகிவிடவும் கூடும். உறவினர் சந்திப்பு இதமாக இருக்கும். வெளிவட்டாரம் இப்போதுதான் பிரகாசமாகி வருகிறது. உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இக்காலம் 3 முதல் 14 ஆம் திகதி வரை அலுவலகப் போக்கு திருப்தியில்லாமலும், சில சமயம் மற்றவர்களுடன் வாக்குவாதம் சிலருக்கு வழக்கமாகவும் இருக்கும். அதன் பிறகு உங்கள் மாற்றம் மற்றவருக்கு ஆச்சரியத்தை உண்டாக்கும். காரணம் மேலிடத்து மனிதர்கள். உங்கள் சார்பு உடையவர்களாக இருப்பர். இலாகா மாற்றம் இப்போது மென்மேலும் விருத்தியடைந்து வரும். கடந்த ஆண்டைவிட ஒருபடி உயர்ந்ததாக இருக்கிறீர்கள். கணவன், மனைவி போக்கைப் பாருங்கள். புத்திர, புத்திரியர்களைப் பாருங்கள். எல்லா முன்னேற்றமும் உடையதாக இருக்கின்றது. இவைகளைப் பார்த்து மன நிறைவு கொள்ளுங்கள். பகையாய் இருந்த உறவினரும் ஒன்று சேருவர். குடும்பத்து ஆடை அணிகலன் சேர்க்கையும் உண்டாகும். கலைத்தொழில் உள்ள உங்களுக்கு மிக மிக சுறுசுறுப்பாக உள்ள காலம் என்பதால் பல புதியவர்களைச் சந்திப்பது, ஒப்பந்தம் செய்து மகிழ்ச்சி அடைவதும் இருக்கும். மாணவர், மாணவியருக்கு மகிழ்ச்சியளிக்கும் காலம் இது.

**அதிர்ஷ்ட எண்கள் : 7, 3, 5**
**அனுகூலத திக்குகள் : வடக்கு, கிழக்கு**

**11.02.2005 முதல் 24.03.2005 வரை**

இந்த சிம்ம இராசிக்கு குரு நாலில் சென்றது நன்மை தான் என்றாலும் சந்திரன் சார எல்லை நன்மை; உங்கள் வார்த்தை, செயல் இவைகளுக்கு ஒரு தனி செல்வாக்கு வளர்ந்து வருவதை நீங்கள் அறியக்கூடும். செவ்வாய் உங்களை எல்லா வழிகளிலும் ஊக்கம் உடையவர்களாக செய்துவிடும். தன நிலையில் தாராளப்போக்கு இருந்து வரும். சில வகையில் நீங்கள் தன் நிறைவு உடையவர்களே. தொழில் பெருக்கம் இருப்பால் கடன்பெருக்கமும் இருக்கத்தான் செய்யும். இது குறித்து சிந்தனை தேவை இல்லை. குடும்பப்பொருள் சம்பந்தமாக சிலருக்கு வழக்கு அல்லது இதரவகை இடையூறு இருந்து கொண்டே இருக்கும். கலைத்துறையினருக்கு இப்போது சற்று வேகம் குறைந்திருக்கிறது. உங்கள் தேவைகள் பூர்த்தியாவதும் தாமதமாகவே இருக்கும். சூரியன் உங்கள் புதனுடன் சேர்ந்து இருப்பதால் வாகன மாற்றத்திற்கு வழி செய்வான். குடும்ப வகைக்கு நாகரிகப் பொருடகளும் சேரும். கணவன், மனைவி கண்ணியம் மிக்கதாக இருக்கும். குழந்தைகள தேக ஆரோக்கியமும் திருப்தி போக்கு இனிமையாக அமைந்து இருக்கும். **அதிர்ஷ்ட எண்கள் : 9, 3, 6**
**அனுகூலத் திக்குகள் : வடக்கு, மேற்கு**

**24.03.2005 முதல் 07.05.2005 வரை**

குழந்தை வகை ஆரோக்கிய செலவு, மருத்துவமனை போய்வருவதும் அவசியமானதாகும். நண்பர்களின் போக்கு நன்றாக இருக்கிறது. அலுவலகப் போக்கும் நன்றாகவே இருக்கும். கலைப்பிரிவினர் ஆண், பெண்களுக்கு நீங்கள் இப்போது பணநெருக்கடியை உடையவர் என்பதால் முக்கிய காரியங்கள் தடைப்பட்டு நின்றது ஒவ்வொன்றாகக் கூடிவரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள், விருந்து உண்பது போன்றவை இருக்கும். கலைத் தொழிலில் உள்ளவர்களுக்கு இது கடுமையான நேரமாக இருக்கிறது. கொடுக்கல், வாங்கல் ஸ்தம்பித்தல், பெரிய மனிதர்களுடன் மனத் தாங்கலும் இடம்பெறும். எழுத்து மூலம் எதிர்பார்த்த நன்மைகள் தள்ளிப் போய் விட்டது. தைரியக் குறைவும் உண்டாகும். இந்த ராசி உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு ஆரோக்கியப் பாதிப்பும் அலுவலக வேலைகளைக் கவனிக்க முடியாமலும் இருக்கும். இதனால் மேல்நிலை கீழ் மனிதர்களிடமும் சீற்றம் கொள்ளும் நிலை உருவாகும். இது படிப்படியே அதிகமாகுமே தவிர குறைய மார்க்கமில்லை. மாணவ, மாணவியர் கவனித்துப் படிக்க வேண்டும். இல்லையேல் பாதிப்புத் தரும். நட்பு வளர்சசியும், கல்வி மேன்மையும் இருக்கிறது. வெளியூரிலிருந்து அன்பளிப்புப் பெறுவது நாகரிக பொருள் வாங்குவது, உடைகள் சேர்க்கையும் உண்டாக்கும். பிறகு வெற்றி மேல் வெற்றி இருக்கிறது. பதவி மாற்றம் இடம்மாறுதலும் குறிப்பிடத்தக்கது. பெண்களுக்கு இடமாற்றம் அல்லது இலாகா மாற்றம் உள்ளது. கீழ் நிலை மனிதர்களுடன் மனத்தாங்கல் ஏற்படும் என்பதால் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். காதல், கல்யாண முயற்சிகள் தள்ளிப்போய் விடும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் உண்டாகி மறை போக்கு இல்லை. வரவேண்டிய பணம் உரிய நேரத்தில் வந்து சேராமையால் தொழில் மந்தம் இருக்கும். இதனால் தொழில் வகையில் உங்கள் கவனம் குறைந்தே காணப்படுகிறது. பணம் கொடுக்கலும் சற்று மந்தமாக இருக்கின்றன. மறைத்து வைக்கப்பட்ட விஷயங்களில் சில வெளியாகும் காலம் இது. கடன் வழக்கு வகைகள் கட்டுப்பட்டே இருக்கும். கணவன், மனைவி உறவு கனிவு கொண்டதாகவே இருக்கும். உங்கள் நாகரிக வாகனத்தை மாற்ற வேண்டிய அவசியம் உண்டாகும். அல்லது பழுது செலவையும் கொடுக்கத் தக்கது. மேலும் சிலர் அயல்நாட்டுப் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் உண்டாகும். அல்லது அயல்நாட்டில் வாழும் உறவினர்களை தம் இல்லத்திலே சந்திப்பு விருந்துகொடுப்பதும் உண்டாகும். உத்தியோகப் பிரிவு, ஆண், பெண்களுக்கு பதவி உயர்வு இல்லாமல் இலாகா மாற்றம் உண்டாகும் மாதம் இது. கலைபபிரிவினருக்கு புதிய மனிதர்களின் தொடர்பு, புகழ் ஆரத்தை அளிப்பதாகவும், தனவருவாய்க்கு வழிவகுப்பதாகவும் இருக்கும். அரசியல்வாதிகளுக்கு மந்தமான போக்கை உண்டாக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 4, 3, 2**
**அனுகூலத் திக்கு : தென் கிழக்கு**

**20.06.2005 முதல் 03.08.2005 வரை**

நாகரிகப் பொருள் சேர்க்கை, புது உடைகள் வாங்குவது, நண்பர்கள், உறவினர்களால் பாராட்டும் உண்டாகும். இந்த நேரத்தில் சில சமயம் எழும் பிரச்சினை சிக்கல்களுக்கு எல் லாம் காரணம் ஒரு பக்கம் பத்தில் ராகு என்பதை கவனத்தில் வேண்டி இருக்கிறது. பண விஷயத்தில் நீங்கள் பக்குவமாக நடந்து கொள்வது மிகவும் அவசியம். இதனால் ஏற்படும் சிக்கல்கள் தான் வழக்கு வரை செல்லக் கூடும். வார்த்தையைக் காப்பாற்ற அதிக முயற்சி தேவைப்படுகிறது. குடும்பத்தில் மட்டுமல்ல வாகனத்தை சீர் செய்ய அல்லது மாற்றி அமைக்க செலவு உடையவர்கள் நீங்கள். போட்டி, பந்தயம், மனத்திருப்தி அளிப்பதாக இருக்கும். உங்கள் வாகன வகையில் செலவிட வேண்டியும் இருக்கும். பெண்கள் தேக ஆரோக்கியத்தில் கவனம் எடுத்துக் கொள்வது அவசியமாகும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபவிரயங்கள் உண்டவதும் இருக்கும். உறவினருடன் சேர்ந்து விருந்து உண்ணும் வாய்ப்பு உள்ளது. இந்த ராசி குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு போன்ற பாதிப்புக்களைக் கொடுக்க இரண்டில் குரு. கடைப்பகுதி வழக்கு வேகம் முழுவதும் குறைந்துவிடும் என்பது குருவால் உறுதியாக்கப்படுகிறது. குடும்ப வகைக்கும் புதுப்பொருள் சேர்க்கை, சுப விஷயங்களுக்கு செலவுகளைப் பெறுவது, விருந்து நிகழ்ச்சிகளும் இருக்கும். கணவன், மனைவி உறவு திருப்தியாக இருக்கும். சொத்து சம்பந்தமான பிரச்சினை ஏதும் இல்லை. இந்த ராசி உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு இது ஏகாதிபத்திய காலமாக இருக்கும். எதிலும் தன்னிச்சைப் படியே செயல்படுவீர்கள். தனப்புழக்கம் தைரியத்தை உயர்த்தும். சில அரசியல் வகை மனிதர்கள் தொடர்பு உங்கள் தொழில் வகைக்கு ஆதாயத்தைக் கொடுக்கும். இம்மாத கடைப் பகுதி எதிலும் நம்பிக்கையோடு செயற்படலாம். தொழில் வகையில் நல்ல போக்கு இருக்கிறது. வேலை யாட்கள் முதல் தொழில் அதிபர்களும் திருப்பதியான போக்கில் இயங்குவர். திருமணத்தைக் குறைவில்லாமல் நிறைவேற்றி வைப்பீர்கள். புத்திர வகை மனம் பேதபட்டிருந்தவர்கள் இப்போது எதிலும் இணைந்து செயற்பட்டு தொழில் வெற்றியை அடையக் கூடிய வராக இருப்பீர்கள். இல்லறம் நல்லறமாகத் திகழும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 6, 3, 5**
**அனுகூலத் திக்கு : மேற்கு**

(தொடரும்)

# பருவ மழைக்காலத்தில் மீண்டும் டெங்கு அபாயம்

(கொழும்பு)

கடந்த இருமாதங்களாக பாரிய அளவில் அதிகரித்திருந்த டெங் குத் தொற்று தற்போது குறைந் துள்ளது 'ஆயினும், பொதுமக்கள் தமது சுற்றாடல் சுகாதாரத்தில் கவனம் செலுத்தவேண்டும் என சுகாதார அமைச்சின் பணிப்பாளர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் பருவமழைக்காலத் தில் டெங்கு அபாயம் மீண்டும் தோன்றும் என அஞ்சப்படுவதால், டெங்கு நுளம்புகளை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கையில் விசேட குழுவொன்று ஈடுபடுத்தப்போவ தாகவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

(ந-க)

# ஒருமாத காலத்திற்குள் 250 சுதேச வைத்தியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்

(கொழும்பு)

ஒருமாத காலத்திற்குள் சுமார் 250சுதேச வைத்தியர்களை சேவை யில் சேர்த்துக்கொள்ளும் திட்டம் ஒன்றை சுதேசிய வைத்திய அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இது குறித்து சுதேச வைத்திய அமைச்சர் திஸ்ஸ கரலியத்தை கருத்துத் தெரிவிககையில் சுதேச மருத்துவத்துறையை நாடு பூராக வும் விரிவுபடுத்த இன்னும 4ஆயிரம சுதேச வைத்தியர்கள் தேவைப்படு கின்றனர்.

இதனால் முதல் கட்டமாக 250 சுதேச வைத்தியர்களைப் புதிதாக இணைப்பதற்குத் திட்டமிட்டுள் ளோம்.

படிபபடியாக ஏனைய 3ஆயிரதது 750சுதேச வைத்தியர்களுக்கான வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளன.

அத்துடன இச்சேவையில் தேசிய வைத்தியர்களையும் இணைத்துக் கொள்வதற்கு வசதியாக அவர்க ளின ஓய்வூதியத் திட்டம் குறித்தும ஜனாதிப்தியின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளேன்.

இதன் அடிப்படையில், சுதேச மருத்துவர்களின் சம்பள முரண்பாடு களை நீக்கி எம்.பி.பி.எஸ்.மருத்து வர்களுக்குச் சமனான சம்பளத்திட் டத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் குறிப் பிட்டார்.

(ந-க)

## மாணவிக்கு கௌரவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஸ்ரீ பழனி சிக்கனக கடன் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர் களின பிள்ளைகளில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு ஆயிரம் ரூபா கொடுப் பனவு வழங்கும் திட்டத்தின கீழ் இம் முறை தெரிவுசெய்யப்பட்ட சாவகச் சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவி சி.கானமிதாவுக்கு அண்மையில் மண் டபத்தில் வைத்து சங்கத் தலைவி திரு மதி ச.சண்முக நாதனினால் ஆயிரம் ரூபா பணமுடிப்பு வழங்கிக் கௌர விக்கப்பட்டது.

(ந-29)





காரைநகர் வியாவில் முன்பள்ளி விளையாட்டு விழாவில் விருந்தினர்களாகக் க லந்துகொண்ட வியாவில்
கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் தலைவர் க.ப[illegible]சுப்பிரமணியம் மங்க ள விளக்கேற்றுவதையும்,
யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவத்துடன் முன்பள்ளி விளையாட்டு விழாத் தலைவர் சோமசேகரம்
ஜே. பி.நிற்பதை முதலாவது படத்திலும், விளையாட்டுப் போட்டிக்கு தயாரான நிலையில் ஆசிரியருடன்
நிற்கும் மாணவர்களை மறு படத்திலும் காணலாம். படம்:-காரைநகர் செய்தியாளர்



ஞானஜோதி சனசமூக நிலைய பாடசாலையின் வருடாந்த விளையாட்டு வி ழாவில் விருந்தினராகக்
கலந்துகொண்ட யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சித ம்பரநாதனுக்கு ஆசிரியர்
சிவ நாகநந்தினி மலர்மாலை அணிவித்து வரவேற்பதையும், பாலர் பாடசாலை மாணவர்களின் வினோத
உடை நிகழ்வுக் காட்சியையும் படங்களில் காணலாம்.


# இலங்கை சின்மயா மிஷன்

CHINMAYA MISSION SRI LANKA

நல்லூர் கந்தன் கோவில் திருவிழாவை முன்னிட்டு

## நற்சிந்தனை

ஆன்மீக சொற்பொழிவுகள்
(தமிழில்)



வளம்நிறைந்த ஈழத்திருநாட்டின் வடபுகுதியில், சைவப்பண் பாட்டில் சாலச்சிறந்து விளங்கிய யாழ்ப்பாண நகரிலே அவதரித்து, சாதி, மத, பேதமின்றி சிவத் தொண்டாற்றி தமது அன்பர்களுக்கு


# அபிவிருத்தி இலக்குகளை எட்டும் வகையில்

வளம்நிறைந்த ஈழத்திருநாட்டின் வடபகுதியில், சைவப்பண்பாட்டில் சாலச்சிறந்து விளங்கிய யாழ்ப்பாண நகரிலே அவதரித்து, சாதி, மத, பேதமின்றி சிவத் தொண்டாற்றி தமது அன்பர்களுக்கு திசை காட்டியாகத் திகழ்ந்தவர் யோகர் சுவாமிகள்.

சுவாமிகள் உலகத்தவர் போன்று இயற்கையோடு அளவளாவி வாழ்ந்த பொழுதிலும், அவர் நிலைத்து நின்ற இடமோ ஆதியும், அந்தமும் அகன்ற பெரு வெளியாய் இருந்தது. அவர் திரிகாலம் அறிந்த ஞானி. அவரை தரிசித்தவர்கள் சிவசொருபமாகவே அவரை பாவித்தும், பரவியும் பணிந்துவந்தார்கள்.

சுவாமிகளின் சிறப்புக்கு சான்று பகரும் வகையிலே, இவரது திருவாய் மொழியினால் ஆக்கப்பட்ட "நற்சிந்தனை" என்னும் நூல் அமைந்துள்ளது. ஆழமான கருத்துக்களை, சுவாமிகள் மிகவும் எளிய நடையிலே, ஆன்மீகசாதகர்களுக்கு தெளிவுபடுத்துவதும், தமது ஞான குருவான செல்லப்பதேசிகர் அருளிச்செய்த மகாவாக்கியங்களூடாக உண்மை விளக்கம் செய்வதும், நற்சிந்தனை நூலின் சிறப்பம்சமாகும்.

23.08.2004 (திங்கள்) ~ நல்லூரான் திருவடியை...
24.08.2004 (செவ்வாய்) ~ கிளிக் கண்ணி பாட்டு
25.08.2004 (புதன்) ~ அன்பே வடிவாய் அமைந்த தறவி

வழங்குபவர் - பிரம்மச்சாரி ரமண சைத்தன்யா
(ஆச்சாரியார், இலங்கை சின்மயா மிஷன்)
இடம் - நல்லை ஆதின மண்டபம், நல்லூர்.
நேரம் - மாலை 7.00 மணி முதல் 8.30 மணி வரை
(புதிய நேரம்)

அனைவரும் வருக! அருளமுதம் பெறுக!

விளம்பர அனுசரணை:

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்,
50, 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/421)

# அபிவிருத்தி இலக்குகளை எட்டும் வகையில் வரவு-செலவுத்திட்டத்தில் மாற்றங்கள்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றும் வகையில் வரவு-செலவுத்திட்டத்தைத் தயாரிபபதற்கு நிதியமைச்சு ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

அடிபபடைக் கட்டமைப்பு மனித வளங்கள் மற்றும் கிராமியத் திட்டங்கள் போன்றவற்றை நிரந்தரமாக அபிவிருத்தி செய்யும் வகையில அரசாங்கம் தொடர்ந்தும் நிதிகளை ஒதுக்கவிருக்கின்றது.

எனவே, அனாவசியமான செலவீனங்களை குறைத்து வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை மொத்த உளளூர் உற்பத்தியில் 8 சதவதத்திற்கு உட்பட்டதாக வைததிருப்பதற்கு நிதியமைச்சு திட்டமட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து கடனகளைப் பெறுவதிலும் உள்நாட்டில் கடன்களைப் பெறுவதிலும் சமனிலையைப் பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அத்துடன் அரசாங்கத்தின் வருமானத்தை எதிர்வரும் ஆண்டுகளில் மொத்த உள்ளூர் உற்பத்தியில் 20 சதவீதம் வரை ஊக்குவிபபதறகும் நிதியமைச்சு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நிதிப் பொறுப்புக்கள் சட்டத்திற்குகமைய வரவு-செலவுத் திட்டப் பற்றாக் குறையை 5 சதவீதத்திற்கு மேற்படாமல் இருக்கும் வகையில் புதிய திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 2005 ஆம் நிதியாண்டுக்கான கூட்டமைப்பு அரசாங்கத்தின் வரவு -செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-121)

## பிருந்தாவன பிரவேச விழா

(நல்லூர்)

நல்லூர் ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் பிருந்தாவனத்தின் பிரவேச விழா' எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30மணிக்கு நடைபெறவுள்ளது.

கொடியேற்றலுடலும், திருக்கதவு திறக்கும் வைபவத்துடனும் ஆரம்பமாகும் இவ்விழா, செப்ரம்பர் மாதம் முதலாம் திகதி திருக்கதவு சாற்றலுடன் நிறைவுபெறும்.

இக் காலத்தில் ஸ்வாமி ராகவேந்திரர் பற்றிய உரையும், இசைக் கச்சேரியும் நடைபெறவுள்ளன.

(ரு-7)

## திருடர் தொல்லை அதிகரிப்பு

(கோப்பாய்)

கோபபாய்ப் பகுதியில் அண்மைக காலமாகத் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் திருட்டு நடவடிக்கைகளைக் கடடுப்படுத்தும் வகையில் உடனடியாக விழிப்புக்குழுக்களை அமைக்குமாறு கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிததுள்ளார்.

கோப்பாய் சந்திக்கு அண்மையிலுள்ள கடையொன்று இரவு வேளையில் உடைத்துத் திருடப்பட்டது.

அத்துடன்வெள்ளெருவைப்பிள்ளையார் ஆலயத்தின் கதவுகள் உடைக்கப்பட்டதுடன் அங்கிருந்த சில பொருட்களும் திருடப்பட்டிருந்தமை தெரிநததே.

இன்னும் சில பகுதிகளில் கோழித் திருடர்களின் கைவரிசை மீணடும் ஆரம்பமாகியுள்ளதையும் அடுத்தே இப்பகுதிக்கு விழிப்புககுழுக்களை நியமிக்குமாறு தெரிவிக்கப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-79)

# கல்விப் பொதுத் தராதர (சா/த)
# மாதிரிப் பரீட்சை - 2004
## General Certificate of Examination (Ord. Level)
## Model Examination - 2004


ENGLISH
PART I
Time - 1 hour

ஆக்கம் :
Mrs.V.Sivapathaviruthyar
J/ Navalar Maha Viddiyalaum, Jaffna.

## Answer all Questions

1. Look at the picture and fill in the blanks using the correct preposition given below. The first one is done for you.

under, by, to into, along, down




A man walked ........ his car, and got ................ it. and drove ................ the road, and ................. a tunnel to the other side. He stopped the car and got ................... and went to the near..................... boutique.

(1x5=5)

2. Fill in the blanks in the following conversation use the words from the box

| buy a lottery, smell good, television, any money watch the match |
|---|

i) A: Excuse me. Have you got a ................................................ here? I want to.................................................
B: Yes, It's in our coputer room.
A: Thank you.
ii) A: I want to............................... have you got .......................?
B: Sorry I didn't bring my purse.
iii) A: The dishes..................................... Did you make them?
B : Yes, I can cook well.

(1x5 = 5)

3. Fill in the blanks with suitable word in the bracket

Mala got ____________ (she) degree in 1996. ____________(she) is an old student of St.Mary's College. ____________ (It) is in the East--ern province. Later ____________ (she) school apponited ____________ (she) as an assistant teacher. ____________ (she) was able to help ____________ (she) school in raising ____________ (It) standard and making ____________ (It) one of the leading schools in ____________ (they) district.

(10x1= 10)

4. Match the headlines with the news statements, first one is done for you.

2 Drop in egg price

4 New world record

1 Hand bag snatched

5 School bus needed

3 Teenager stole goods

6 Are any of these goods yours

a. [6] The Police are looking for the owners of the stolen goods.

b. [ ] A large number of students of schools in the Jaffna zone are very often stand due to the lack of an adequate school bus service.

Jaffna zone are very often stand due to the lack of an adequate school bus service.

c. [ ] Prices of eggs have come down in Kandy. The prices range from Rs.6 /- to Rs. 6.50

d. [ ] A hand bag was forcibly taken from an old lady who was going to the market.

e. [ ] A fourteen years old boy stole some spanners, pliers and hacksaws.

f. [ ] Sweden's David Palmer broke the world high jump record. today at Olympics.

(5x2=10)

5. The instructions given below for using the telephone are not in order. put the correct order of the numper in the correct boxes. first and last are done for you.

1.Lift the receiver

2.Do not stop between numbers

3.Give enough time for some one to answer.

4.You will hear the ringing tone.

5.When you have finished replace the receiver.

6. Press each numper as far as the finger stops.

7. Check Your numper you wish to call.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | | | | | | 5 |

(1x5=5)

6. Write about a sport you like. use the questions given in the box to decide what to write.

What is the sport?
How many players are there?
How long does it last?
Where is it normally played?
What type dresses, people wear to play the game?
Play the game?
What are things you need to play this game?

................................................................................................
................................................................................................
................................................................................................

7. Read the following text and complete the chart given.
Finland is in Europe. Its official name is Suomen Tasavalta. Its popula tion is 5, 100, 000. Its capital is Helsink, Their official lanquages are finish and swedish. finland is a land of lakes and islands. There are about 1,80,000 lakes, most of them connected by rivers. It has the larg est forest area than any other European country.Lumbering is a major finish industry and wood is their main natural resource. Finland is also a leading paper producer. The cheif products are timber, paper,textiles and metals.

Country : ____________ (1)
Capital : ____________ (2)
Population : ____________ (3)
Languages : ____________ (4)
____________ (5)
Main industry : ____________ (6)
Chief Products : ____________ (7)
____________ (8)
____________ (9)
____________ (10)

8. Write a short paragraph about the advantages and disadvantages of the television, in about 50-60 words. (5 Marks)

நாளை ஆங்கில வினாத்தாள் பகுதி II வெளிவரும்

க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

## பங்களாதேஷில் கைக் குண்டுத் தாக்குதல் 16 பேர் பலி ; 150 பேர் படுகாயம்

(பங்களாதேஷ்)

பங்காளாதேஷில் இடம்பெற்ற பேரணி மீது கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டதில் 16 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன், 150 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் இடம்பெற்ற எதிர்க்கட்சித் தலைவி ஷேத் ஹஷினாவின் பேரணியிலேயே இந்த துரதிஷ்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற சமயத்தில் ஷேத் ஹஷினாவின் ஆதரவாளர்கள் சுமார் 3 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பேரணியில் குழுமியிருந்தனர்.

இப்பேரணியில் 7 கைக்குண்டுகள் வீசப்பட்டதன் காரணமாக 16 பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் 150 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் பின்னர் தலைநகர் டாக்காவில் தற்பொழுது அதிகளவில் ஆயுதம் தாங்கிய பொலிஸ் படை தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், பங்களாதேஷ் எதிர்க்கட்சித் தலைவி ஷேக் ஹஷினாவுக்கு தனது அதிர்ச்சியையும் அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு இச்சம்பவம் தொடர்பாகக் கூறுகையில்,

"இப்போதைய இக்கட்டான நிலையில் இந்திய அரசும் மக்களும் பங்களாதேஷ் மக்களுக்கு ஆதரவாக இருக்கின்றனர்" என்றார்.

(ற-7)

## 85 வயது சாதனையாளர் அந்தாட்டிக்கா செல்கிறார்

முதல் முதலாக எவரெஸ்ட் சிகரம் ஏறி சாதனை படைத்த பெருமைக்குரிய 85 வயதுடைய எட்மண்ட் ஹிலாரி இன்னும் சில மாதங்களில் அந்தாட்டிக்கா துருவத்துக்குச் செல்ல இருக்கிறார்.

எட்மண்ட் ஹிலாரி, நேபாளத்தின் டெர்பா இனத்தைச் சேர்ந்த டென்சிங் நார்கே ஆகிய இருவர் தான் முதன் முதலாக 1953, மே 29ம் திகதி எவரெஸ்ட் சிகரம் ஏறி சாதனை படைத்தனர்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பும் ஹிலாரி அந்தாட்டிக்கா சென்றுள்ளார். 1979, நவம்பர் 29ல் நியூசிலாந்து விமானம் ஒன்று இரிபஸ் குன்று மீது மோதியதில் விமானத்தில் சென்ற 257 பேருமே இறந்தனர். இந்த விபத்தில் ஹிலாரியின் சகவிஞ்ஞானியான பீட்டர் மல்குரு என்பவரும் பலியானார்.

இந்த விமான விபத்து நடந்து 25 ஆண்டுகள் ஆகின்றன. இதைக் குறிக்கும் வகையிலும் ஹிலாரியின் பயணம் அமைகிறது.

ஹிலாரியின் இப்போதைய மனைவி ஜூன். இவர் அவரது இரண்டாவது மனைவி ஆவார். முதல் மனைவி 1975ஆம் ஆண்டில் நேபாளத்தில் நடந்த விமான விபத்தில் இறந்தார். ஹிலாரி 1990இல் ஜூனை மறுமணம் செய்து கொண்டார்.

அந்தாட்டிக்காவில் நடந்த விமான விபத்தில் உயிரைப் பறிகொடுத்த மல்குருவின் மனைவி இவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

(ற-7)

## விஷத் தேள்களுடன் வாழும் போட்டியில் காஞ்சனாவின் சாதனையை முறியடிக்க நூர்மலீனா ஹசன் கடும் பிரயத்தனம்

மலேசியாவில் 24 வயதையுடைய நூர்மலீனா ஹசன் என்ற பெண் ஒருவர் 6 ஆயிரம் விஷத் தேள்களுடன் ஒரு மாத காலம் வாழ்ந்து சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

கோலாலம்பூரில் உள்ள நகர மையத்தில் இச்சாதனையை நடத்தி வருகிறார்.



கின்னஸ் சாதனை ஒன்றை முறியடிப்பதற்காக வேண்டி பிரஸ்தாப பெண் மிகத் துணிச்சலாக கண்ணாடிக் கூண்டினுள் நுழைந்த போதே அவர்மீது ஆயிரக் கணக்கான தேள்கள் ஊரத் தொடங்கிவிட்டன என சம்பவத்தை நேரில் பார்த்தோர் மெய்சிலிர்க்கக் கூறினர்.

இவரது சாதனையை "கின்னஸ்" அவதானிகள் மிக உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர்.

சாதனையாளருக்கான அவசர வைத்திய சேவையைக் கருத்தில் கொண்டு அங்கு வைத்திய நிபுணர்கள் குழு ஒன்றும் அனுப்பப்பட்டிருப்பதாக மலேசிய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு தாய்லாந்தைச் சேர்ந்த காஞ்சனா என்பவர் 3 ஆயிரம் தேள்களுடன் ஒரு மாத காலம் வாழ்ந்து கின்னஸ் சாதனையைப் படைத்திருந்தார். இவரது சாதனையை முறியடிப்பதற்காகவே மலீனா ஹசன் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த சில வாரங்களுக்கு முன்பு நூர்மலீனா ஹசன் தான் போட்டிக்குச் செல்வதற்கு ஏற்ப 6 ஆயிரம் தேள்கள் கிடைக்காமையால் தனது போட்டியைத் தற்காலிகமாகக் கைவிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப)

## சீனக் கம்யூனிஸ்ட் தலைவர் டெங்-ஷியோவிற்கு உருவச்சிலை

(சீனா)

சீனாவில் சீர்திருத்தப் பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகப்படுத்திப் பெருமதிப்பைப் பெற்ற காலுஞ் சென்ற கம்யூனிஸ்ட் தலைவர் டெங்-ஷியோ-பிங்கின் 100ஆவது ஜனன தினத்தையொட்டி அவரது வெண்கல உருவச் சிலை நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

டெங்-ஷியோ-பிங்கின் வழியில் சீர்த்திருத்தங்களைச் செய்வதில் முனைப்பாக ஈடுபட்டு வருகிறார், சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும், சீன அதிபருமான கு-ஜின்-ரௌவ்.

தமது சீர்த்திருத்தப் பொருளாதாரக் கொள்கை மூலம் பல சீனர்களைப் பணக்காரர் ஆக்கியவர் டெங்-ஷியோ- பிங்.

இவர் 1996ஆம் ஆண்டிற்கும் 1976ஆம் ஆண்டிற்குமிடையே நடந்த கலாசாரப் புரட்சியின் குழப்பத்தினால் வெளியேற்றப்பட்ட சுமார் இலட்சக்கணக்கான மக்களுககு மறுவாழ்வு அளித்ததுடன், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளையும் மாற்றி அமைத்தமை குறிப்பிடத்தக்கது.

டெங்-ஷியோ-பிங் தனது 92ஆவது வயதில் 1997இல் காலமானார். (ற-7)

## WORLD NEWS உலக தரிசனம்

## தீவிரவாதிகளின் தாக்குதலால் பதினொரு ரஷ்யர் உயிரிழப்பு

ரஷ்யாவின் செச்சினியப் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் மற்றும் வாக்குச் சாவடிகளின் மீது தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 11 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இச்சம்பவங்களில் உயிரிழந்தவர்களில் அதிகமானோர் பொலிஸாரே என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதனையடுத்து ரஷ்யாவில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை, எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெறவுள்ள ரஷ்யாவின் ஜனாதிபதித் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படுவோர் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்படும் எனத் தீவிரவாதிகள் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தீவிரவாதிகளின் தாக்குதல்களால் ரஷ்யாவில் எழுந்துள்ள பதற்ற நிலையைத் தடுக்கவும் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. (ப)

## அல்-கெய்டா தீவிரவாதிகளென பாகிஸ்தானில் 10 பேர் கைது

அல்-கெய்டா தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் பத்துப் பேர் பாகிஸ்தான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் எகிப்தியர்களாவர்.

பாகிஸ்தானிய அரசுக்கும் அமெரிக்கத் தூதரகத்திற்கும் எதிராகத் தற்கொலைத் தாக்குதல்களை நடாத்தத் திட்டம் தீட்டியதுடன் இவர்கள் தொடர்புபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் சுதந்திர தினக்கொண்டாட்டத்தின்போது தற்கொலைத் தாக்குதல் நடாத்த இவர்கள் திட்டம் தீட்டியதாக பாகிஸ்தான் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பைஸல் ஹலே-அயர் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தான் தகவல்துறை அமைச்சர் உட்பட முக்கிய தலைவர்களையும், பாகிஸ்தான் அதிபர் மாளிகை, பாகிஸ்தான் இராணுவ இல்லம், அமெரிக்கத் தூதரகம் மற்றும் பஞ்சாப் மாகாண முதலமைச்சர் அலுவலகம் போன்ற முக்கிய இடங்களையும் தற்கொலைத் தாக்குதல் மூலம் அழிக்க இவர்கள் குறிவைத்திருந்ததாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் முஷாரப்பைக் கடந்த டிசம்பர் மாதம் கொலை செய்ய இருதடவைகள் அல்-கெய்டா தீவிரவாதிகள் மேற்கொண்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

புதிய பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ள நிதியமைச்சர் சௌகத் அஸீஸை கடந்த மாதம் கொலை செய்ய முயன்ற ஒரு தற்கொலைப் படையாளி, தன்னைத் தானே மாய்த்துக்கொண்டு வேறு எட்டுப்பேரையும் கொன்றமையும் தெரிந்ததே. (ற-7)

## இத்தாலிய நிருபரை காணவில்லை

(நஜாப்)

ஈராக்கில் இத்தாலிய பத்திரிகை நிருபர் ஒருவர் காணாமல் போயிருப்பதுடன் அவரது வாகனச்சாரதி கொல்லப்பட்டிருப்பதாகவும் ஈராக் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ப)

## பிரான்ஸ் பத்திரிகையாளர் இருவர் ஈராக்கில் காணாமல் போயினர்

### தீவிரவாதிகள் மீது சந்தேகம்

(பக்தாத்)

ஈராக்கில் பணியில் ஈடுபட்டிருந்த இரு பிரான்ஸ் நாட்டு பத்திரிகை நிருபர்கள் காணாமல் போயுள்ளனர் என பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது.

இவ்வாறு காணாமல் போன இரு நிருபர்களில் ஒருவர் ஈராக்கில் இடம்பெற்று வரும் தீவிரவாதத் தாக்குதல்களை விமர்சித்து அண்மையில் நூல் ஒன்றினையும் வெளியிட்டிந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் இடம்பெற்றுவரும் மோதல்கள் குறித்து தகவல் சேகரிப்பில் ஈடுபட்டிருந்த இவ்விருவரும் காணாமல் போயிருப்பதாகவும் இவர்கள் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக ஈராக்கில் உள்ள பிரான்ஸ் தூதரகம் தெரிவித்துள்ளது. (ப)

## தாய்லாந்தில் பறவைக் காய்ச்சல் மீண்டும் வேகமாகப் பரவி வருகிறது

தாய்லாந்தின் வடக்குப்பகுதியில பறவைக் காய்ச்சல் நோய் மிக வேகமாகப் பரவி வருவதாக அந்நாட்டுச் சுகாதார பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் உள்ள கோழிப்பண்ணைகளும் வாத்துப்பண்ணைகளும் மூடப்பட்டுள்ளதுடன், பண்ணைகளில் இருந்த ஆயிரக்கணக்கான வாததுகளும் கோழிகளும் இந்நோயால் இறந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

எனினும் இந்நோய் மனிதர்களுக்கு பரவுவதை தடுக்கவும் தாய்லாந்தின் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நோய்த்தாக்கம் காணரமாக இந்நாட்டில் இருந்து கோழி மற்றும் வாத்து இறைச்சிகளை ஏற்றுமதி செய்வது தடைப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (ப)

# நயினை நாகபூஷனி அமுதசுரபி

# இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்கள் சிறந்த சித்தி

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி இந்து அறநெறிப் பாடசாலையின் மேற்பிரிவு மாணவர்களில் 90 சதவீதமானோர் கடந்த 2003 ஆம் ஆண்டு பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட, பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய 30 மாணவர்களில் 27 பேர் சித்தியடைந்துள்ளதுடன், 8 மாணவர்கள் நான்கு பாடங்களிலும் விஷேட சித்தியைப் பெற்றுள்ளனர்.

மேலும் 8 மாணவர்கள் 3பாடங்களில் 'டி' சித்தியும், ஒரு பாடத்தில் 'சி' சித்தியும் பெற்றுள்ளனர். 6 மாணவர்கள் இரு பாடங்களிலும் 'டி''சி' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வருடம் இப் பரீட்சைக்குத் 45 மாணவர்கள் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ளனர். இப் பாடசாலையில் சிறந்த பெறுபேற்றுக்குக் காரணமாகவுள்ள மேற்பிரிவு மாணவர்களை அர்ப்பணிப்புடன் பயிற்றுவித்து வரும் ஆசிரியை செல்வி ஜெயலக்சுமி ராமலிங்கத்திற்கு இப் பாடசாலையை நிர்வகித்து வரும் நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அமுதசுரபி அன்னதான சபையினர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இச் சபையினரால் புதிதாக முன்னெடுத்துச் செல்லப்பட்ட சமயப் பணிக்கு இப் பாடசாலை மாணவர்களின் பெறுபேறு சிறந்த வெற்றியாகவே கருதப்படுகிறது. இந்து சமயம், சமய மெய்யியல், சமய இலக்கியம், சமய வாழ்வியல் ஆகிய பாடங்களில் இப் பரீட்சைக்கு மாணவர் தோற்றியிருந்தனர். இப்பெறுபேறுகள், ஏனைய மாணவர்களையும் ஊக்குவிப்பதாக அமைந்துள்ளதுடன் தீவக வலயத்தில் முன்மாதிரியான எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இப் பரீட்சைக்கான பெறுபேற்றுச் சான்றிதழ்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. விஷேட சித்தி பெற்ற மாணவர்களின் விபரங்கள் வருமாறு,

ப.குகப்பிரியா, ப.சர்மிளா, அ.அமுதினி, ந.சுதர்ஷினி, மு.செல்வபாலினி, க.சுஜாதா, து.சுவர்ணலதா, க.லோகேஸ்வரி. (ற)

## சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க நிர்வாக அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்காலத்தில் அரச ஊழியர்களிடையே சம்பள முரண்பாடுகள் ஏற்படாதிருப்பதற்கு எழுதுவினைஞர் சேவையையும் ஏனைய சேவைகளையும் இணைத்து 'தேசிய அரச முகாமைத்துவ இணை சேவை' ஒன்று ஏற்படுத்தப்படவிருப்பதாக பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

அடிக்கல் நாட்டு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாட்டு உதவியுடன் 4 இலட்சம் ஓய்வூதியர்களின் சம்பள முரண்பாடுகள் விரைவில் நீக்கப்படவுள்ளன. அத்துடன், பொது நிர்வாக சேவையிலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும், அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வுகள் வழங்கப்படும்போது, ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்படவேண்டும். அத்துடன் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் ஏற்படும் தாமதங்களைக் குறைப்பதற்கும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஓய்வூதியக் கொடுப்பனவு நிலையங்களைத் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அமைச்சர் அமரசிறி தொடங்கொட மேலும் தெரிவித்தார். (ற-6)

## நாகர் கோயில் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு வீடுகள்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோயிலில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது கற்கோவளம் புனித நகர்ப் பகுதியில் வசித்து வரும் 56 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினால் நாகர்கோயிலிலிருந்து இடம்பெயர்ந்து அங்கு மீளக் குடியேறமுடியாத நிலையில் இடம்பெயர்ந்தோர் நலன் புரி முகாம்களில் தங்கியிருக்கும் இக் குடும்பங்களை வேறு இடங்களில் குடியமர்த்தும் திட்டத்தின் கீழ் அரசு புனித நகரிலுள்ள, அரச காணிகளில் முதற்கட்டமாக 56 குடும்பங்களுக்கு யு.என்.ஏச்.சி.ஆரின் நிதி உதவியுடன் போருட் நிறுவனம் இவ் வீடுகளை அமைத்துக்கொடுக்கவுள்ளது.

இவர்களுக்கு மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள் மற்றும் பொது மண்டபம் என்பவற்றையும் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. (ற-35)

## 80 சதவீத மானவர்களுக்கு தகாத உறவுமூலம் எயிட்ஸ்

### இலங்கை எயிட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

எயிட்ஸ் நோய்த் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை நாட்டில் பெருமளவு அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் எயிட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்ட எயிட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவின் உயர் அதிகாரிகள் இந்த தகவலை வெளியிட்டனர்.

அவர்கள் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

தற்சமயம் நாடளாவிய ரீதியில் 7 ஆயிரத்து 200 பேர் எயிட்ஸ் நோய்த தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இவர்களில் 80 சதவீதமானவர்களுக்கு தகாத பாலியல் உறவு மூலமே எயிட்ஸ் நோய் தொற்றியுள்ளது.

1987 ஆம் ஆண்டு இலங்கையில் முதன் முதலாக ஒருவர் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர், படிப்படியாக எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

கடந்த 2002 ஆம் ஆண்டளவில் 540 ஆக இருந்த எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை தற்போது பன்மடங்கை அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் மேலும் கூறினார்கள். (ற-க)

## வகுப்பறைத் தொகுதிகள் நிர்மாணம்

(பளை)

பளைக் கல்வித் கோட்டத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளுக்கு வகுப்பறைக் கட்டடத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளன.

மாசார் அ.த.க.பாடசாலை மற்றும் இயக்கச்சி அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் வகுப்பறைத் தொகுதிகளும், சேரன்பற்று கணேசா வித்தியாலயத்தில் இரு மாடிக் கட்டடமும் அமைக்கப்படவுள்ளன.

இக் கட்டடங்களை அமைக்க நிக்கொட் நிறுவனத்தின் காப் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் கடந்த கால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்து, தற்போது தற்காலிக கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பளை மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுவந்த விஞ்ஞான கூடம் மற்றும் நூலகம் ஆகியவற்றுக்கான கட்டட வேலைகள் அனைத்தும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகவும் தெரிய வருகிறது. (ற-97)

## வீரமுரசம் நிகழ்வு

(சில்லாலை)

பண்டத்தரிப்பு வலயத்தில் 'வீரமுரசம் நிகழ்வு' கடந்த புதன் கிழமை இரவு 7.30 மணிக்கு வலியடைப்பு கிராம முன்னேற்றச் சங்க மண்டப முன்றலில் நடைபெற்றது.

பண்டத்தரிப்பு பரிஸ் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வங்கி முகாமையாளர் மா.மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கலை நிகழ்வுகள் பலவும் இடம்பெற்றன. (ற-58)

## கருத்தரங்கு

(பொன்னாலை)

சங்கானைக் கல்விக் கோட்டப் பிரிவிலுள்ள பண்ணாகம் மற்றும் மூளாய் ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு செயல்நிலை ஆய்வுக் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கானது இன்று 23 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-49)

# செய்தித் துளிகள்

## உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது. ஒரு பீப்பா அமெரிக்க மசகு எண்ணெயின் விலை 49 டொலர்களாக உயர்ந்துள்ளது. லண்டனில் ஒரு பீப்பா மசகு எண்ணெயின் விலை 44.5 டொலர்களாக அதிகரித்துள்ளது. கடந்த வியாழனன்று காணப்பட்ட புள்ளிவிபரத்துடன் ஒப்பிடும் போது இது 28 வீதம் அதிகரித்துள்ளது.

ஈராக்கில் கலவரங்கள் அதிகரித்தமை சீன, இந்தியா ஆகிய நாடுகளில் எண்ணெய்க்கான கிராக்கி அதிகரித்தமையே விலையேற்றத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

## விவசாயிகளுக்கு வதிவிடப் பயிற்சி

(மருதங்கேணி)

விவசாயத்திணைக்கள அதிகாரிகளால் வடமராட்சிலுள்ள விவசாயிகளுக்கு வதிவிடப்பயிற்சி வகுப்பு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையில் பருத்தித்துறை விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் வி.பாலசுப்பிரமணியம் ஈடுபட்டுள்ளார்.

பருத்தித்துறை கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 40 விவசாயிகளுக்கு திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2,3,4ஆம் திகதிகளில் இவ் வதிவிடப்பயிற்சி நடாத்தப்படவுள்ளது.

இவ் பயிற்சி வகுப்பு நிக்கொட் நிறுவனத்தின் உதவியுடன் நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-35)

## நிர்வாகிகள் தெரிவு

(கோப்பாய்)

கோப்பாய் அரசினர் வைத்திய சாலையின் நடப்பாண்டு நிர்வாக சபைக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

சபையின் புதிய தலைவராக து.தனபாலசிங்கம் ஜே.பி.யும், பொருளாளராக கே.வி.குணசேகரமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி செயலாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், நிர்வாக சபை உறுப்பினர்களாக 11 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ற-79)

## ஆன்மீக நூல் வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

கந்தர் மடத்திலுள்ள சிவகுரு நாதபீடத்தில் சனி,ஞாயிறு ஆகிய இரு தினங்களும் மாலை 4.00 மணிக்கு ஆன்மீக நூல்கள் கற்பிக்கப்படுகின்றன.

நேற்று முன்தினம் முதல் 'சாதன பஞ்சகம்' என்ற நூலை, கோயம்புத்தூர் சுவாமி, தயானந்த சரஸ்வதியின் சீடர் யோகேசானந்த சுவாமிகள் விளக்கி விரிவுரை நிகழ்த்தி வருகிறார்.

ஆன்மீக நாட்டமுள்ள அனைவரையும் இதில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற)

## சிறுவர் அரங்கு

(யாழ்ப்பாணம்)

தீவக வலய மட்டச் சிறுவர் அரங்கு நிகழ்வு கடந்த 7ஆம் திகதி வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் 12 பாடசாலைகளைச் சேர்ந்த 192 மாணவர்கள் பங்கு பற்றினர்.

இந் நிகழ்வில் சிறப்பாக தெரிவு செய்யப்பட்ட ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலயம் மாகாண மட்ட நிகழ்வில் பங்குபற்றவுள்ளது. (ற).

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உபஅலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உப அலுவலகம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை கைதடிச் சந்தியல் நிறந்து வைக்கப்பட்டது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவத்தின் தலைவர் அ.நல்லதம்பி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் இதனைத் திறந்து வைத்தார்.

இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்துள்ள பாதிக்கப்பட்ட தென்மராட்சி மக்கள் மத்தியில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் சேவை வரவேற்கப்படத்தக்கது என அவர் தெரிவித்தார். (ற)

## விஷமிகள் தொல்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் குடிநீருக்காக அலையவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இங்கு தொண்டர் நிறுவனத்தால் குடிநீர்க்கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டபோதும், சில விஷமிகள் இக் கிணற்றுள் விலங்குக் கழிவுகளையும், குப்பைகளையும் போடுவதால் இந் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இக் கிணறு சுத்தம் செய்யப்பட்டாலும் திரும்பத் திரும்ப விஷமிகள் இவ்வாறு மோசம் செய்வதுடன், அங்கு கட்டப்பட்டிருந்த மலசலகூடங்களையும் விஷமிகள் ஏற்கெனவே சேதமாக்கியமையும் குறிப்பிடத்தக்கது. (ற-29)

## சின்னமுத்து, ருபெல்லா தடுப்பு மருந்தேற்றல்

(சுதுமலை)

மானிப்பாய், சங்கானைப் பகுதி பிரதேச செயலர் பிரிவுகளில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11;12ம் திகதிகளில் சின்னமுத்து ருபெல்லா தடைமருந்து வழங்கப்படவுள்ளது.

இதுவரை இதற்காகப் பெயர்களைப பதிவு செய்யாத 16 தொடக்கம் 20 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரையும் உடனடியாகத் தமது பகுதி குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையின் பொறுப்பதிகாரி கே.வர்ணநாதன அறிவித்துள்ளார்.

இப் பகுதிகளில் 80 வீதத்திற்கு மேற்பட்ட பதிவுகள் பூரணப்படுத்தப் பட்டுள்ள வேளையிலும், மீளக்குடியமர்ந்த மற்றும் தவறவிடப்பட்ட சிலர் பதிவு செய்யாமல் இருப்பது ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளதாகவும எனவே இவ் விடயத்தில் அக்கறை எடுத்து கட்டாயம் இத் தடுப்பூசி பெற்றுக் கொள்வதற்கு வசதியாகப் பெயர்களை பதிவு செய்யுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-252)

## குறை நிவர்த்தி சேவை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இலந்தைக் குளம் பிள்ளையார் கோவில் அருகில் உள்ள கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஜே/61, ஜே/62, ஜே/63 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட கொழும்புத்துறை வாழ் மக்களுக்கான குறைநிவர்த்தி சேவை இடம் பெற்றது.

இதில் சுமார் 300ற்கும் மேற்பட்டோருக்குத் தேசிய அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், வாக்காளர் அட்டை என்பனவற்றுக்கான பதிவுகள் கிராம சேவகர்களாலும், யாழ்.செயலக அதிகாரிகளாலும் மேற்கொள்ளப்பட்டன. (ற-51)

கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு -குறள்

வலம்புரி

## சிறை மீண்ட வை. கோ. சொல்லியதைச் செய்வாரா?

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதனால் பொடா தடைச்சட்டத்தின் கீழ் சிறைக்குச் சென்றவர் வை.கோபாலசாமி. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தை பழிவாங்கும் நோக்கில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பொடா தடைச் சட்டத்தை பயன்படுத்தி வை. கோவை சிறைக்கு தள்ளினார்.

மத்திய அமைச்சராக இருந்தபோது சிறை சென்ற வை. கோ. சட்டத்தின் இறுக்கம் காரணமாகவோ அன்றி வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசின் பாராமுகமாகவோ அல்லது முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் ஆளுமைத் திறமை காரணமாகவோ விரைவாக சிறை மீள முடியாமல் போயிற்று.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினார் என்ற ஒரே குற்றச்சாட்டிற்காக வை.கோ. சிறை சென்றாலும் அதற்குள் இருக்கக்கூடிய ஜெயலலிதாவின் பழிவாங்கலைக் கண்டும் குரல் கொடுக்கமுடியாதவாறு மத்திய அரசு மௌனம் சாதித்தது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசி சிறை சென்ற தனது அமைச்சர் ஒருவரை மீட்க முடியாத வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சி, கூட்டு முன்னணிகள் எதிர்க்கட்சிகளாக இருந்த போதும் விடுதலைப் புலிகளின் போராட்டங்களை - ஈழத் தமிழர்களின் உரிமைகளை ஆதரித்துவந்தனர்.

குறிப்பாக பாரதீய ஜனதாக் கட்சியில் அங்கம் பெற்றிருந்த ஜோர்ஜ் பெர்ணான்டஸ், சிவசேனைக் கட்சித் தலைவர் பால்தாக்கரே போன்றவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பை பகிரங்கமாக ஆதரித்தவர்கள்.

ஈழத் தமிழர்களின் போராட்டம் சார்பான கூட்டம் ஒன்றை தனது வீட்டில் நடத்துவதற்கு அனுமதியளித்த ஜோர்ஜ் பெர்ணான்டஸ். அதேபோன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் போராட்டத் திறனைப் பாராட்டி அறிக்கை விட்டவர் சிவசேனைக் கட்சித் தலைவர் பால்தாக்கரே.

இவ்வாறு எதிர்க்கட்சியாக இருந்தபோது விடுதலைப் புலிகளையும், ஈழத் தமிழர்களையும் ஆதரித்து வந்தவர்கள் ஆட்சிபீடம் ஏறியதும் தமது சுருதியை குறைத்துக் கொண்டனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியவர்கள் ஆட்சிபீடம் ஏறியதும் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய மத்திய அமைச்சரையே மறந்துபோகும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது.

பாரதீய ஜனதாக் கட்சியைப் பொறுத்தவரை வை.கோவின் பிரச்சினையில் தலையிடாமல் முதல்வர் ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர்ந்து அடுத்த தடவையும் ஆட்சியைப் பிடிப்பதே நோக்கமாக இருந்தது. இதன் காரணமாகவே வை.கோவின் விடயத்தில் தலையிட வாஜ்பாய் அரசு விரும்பவில்லை. வாஜ்பாயின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இச் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னதாக சமாதானப் பேச்சை இந்தியாவில் நடத்தலாம் என்ற கருத்து பலராலும் முன்வைக்கப்பட்டது. எனினும், அதற்கு இந்திய அரசு அனுமதிக்கவில்லை.

சமாதானப் பேச்சை இந்தியாவில் நடத்துவதற்கு அனுமதியளிக்காதுவிட்டாலும் நோய்வாய்ப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்கு வசதியாக இந்தியாவில் தங்கியிருப்பதற்கும், சிகிச்சை பெறுவதற்கும் அனுமதியளிக்குமாறு இந்திய அரசிடம் விடுதலைப் புலிகள் கோரிக்கை விட்டிருந்தனர்.

புலிகளால் விடுக்கப்பட்ட அக் கோரிக்கையையும் இந்திய அரசு நிராகரித்திருந்தது. இவ்வாறு சமாதான முயற்சி வெற்றியளிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு இந்திய மத்திய அரசு மறுத்தபோது விடுதலைப் புலிகள் சார்பான கூட்டத்தை தனது வீட்டில் நடத்துவதற்கு அனுமதி வழங்கிய ஜோர்ஜ் பெர்ணான்டசும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய வை.கோபாலசாமியும் மத்திய அமைச்சரவையில் முக்கிய அமைச்சர்களாக இருந்தனர்.

இவர்களால் கூட அரசு - புலிகள் சமாதானப் பேச்சை இந்தியாவில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய முடியாமல் போயிற்று. இவ்விதம் இயலாமல் போனதற்கு அவர்களின் மௌனமும் காரணமாக இருந்திருக்க முடியும்.

இந்நிலையில் இப்போது சோனியாகாந்தி தலைமையிலான காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டுக் கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளன. இந்த ஆட்சியில் மத்திய அரசைத் தீர்மானிக்கும் வலுவான பலத்துடன் கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் பெற்றுள்ளது.

அதாவது நாடாளுமன்றத் தேர்தலில் வரலாறு காணாத வெற்றியைப் பெற்றுக்கொண்ட கலைஞர், வை.கோ. போன்றவர்கள் மத்திய அரசில் முக்கிய இடத்தை வகிக்கின்றனர். இச் சந்தர்ப்பத்தில் இனப் பிரச்சினைத் தீர்வில் இந்தியாவை தலையிடுமாறு அழுத்தம் கொடுக்கப் போவதாக வை.கோ. கூறியிருப்பது மனதிற்கு திருப்தி தருவதாக இருந்தாலும், அதை அவர் செய்து காட்டுவாரா? என்பதே ஈழத் தமிழர்களிடம் எழும் கேள்வியாகும்.

## பொருளாதார இரத்தத்தை உறிஞ்சும்
# பஞ்ச பூதங்களால் திறைசேரியில் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது
## நிதி அமைச்சர் கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூர் தீப்பெட்டித் தயாரிப்புக்களை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. உள்ளூர் சந்தைகளில் தீப்பெட்டி விற்பனையைக் குறைக்கின்ற சிகரெற் லைற்றர்கள் மீதான இறக்குமதித் தீர்வையை அதிகரிப்பதன் மூலம் உள்ளூர் தீப்பெட்டித் தயாரிப்பாளர்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியிலுள்ள டெய்லிமிரர் பத்திரிகையின் ஹோட்டலில் கடந்த வெள்ளிககிழமை நடைபெற்ற நிதி சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு அவசியப்படாத பல்வேறு பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவதோடு நாட்டில் வெளிநாட்டு நாணயமாற்றும் விரயமாகிறது.

இதனால் இத்தகைய இறக்குமதியைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

அரசாங்கத் தொழில் முயற்சிகள் எதுவும் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது.

ஆனாலும், இலங்கைக்குப் பெருமளவு முதலீட்டைக் கொண்டு வரக் கூடிய வகையில் மேலும் சில எரிபொருள நிலையங்களின் சிறுபான்மைப் பங்குகளை மற்றுமொரு இந்தியக் கம்பனிக்கு வழங்குவது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இந்த முதலீட்டினால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் நிதிக் கஷ்டங்களில் இருந்து விடுபடும்.

இதேவேளை பிரதேச சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றினால் பெருமளவு பணம் விரயமாகின்றது.

இத்தகைய நிதி விரயங்களைத் தவிர்த்து உள்ளூராட்சி மன்றங்களினால் நிதி முகாமைத்துவத்தை நிவிர்த்திக்கும் வகையிலான நடவடிக்கைகளை எமது அமைச்சு எடுக்கவிருக்கின்றது.

அத்துடன் நாட்டின் பொருளாதார இரத்தத்தை உறிஞ்சுகின்ற பெரும் பஞ்சபூதங்களாக கூட்டுறவு மொத்தவிற்பனை மையம், தொடரூந்து மையம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மத்திய போககுவரத்துச் சபை மற்றும் முதலீட்டுச் சபை ஆகியன இருக்கின்றன.

இவற்றைக் கொண்டு நடாத்துவதற்கு திறைசேரியிடம் இருந்து கோடிக் கணக்கான ரூபாய்களைப் பெற வேண்டியுள்ளது.

ஆனால் திறைசேரியினால் இந்த அளவிற்குப் பணத்தை வாரி இறைக்க முடியாதமையினால் வங்கிகளிடமே இந்தப் பஞ்சபூதங்கள் கடனைப் பெற வேண்டியுள்ளது.

இதற்கு வங்கிகளோ அவ்வளவு அதிகரித்த பணத் தொகையைக் கொடுக்க மறுக்கின்றன.

இதனாலேயே இந்திய நிறுவனம் ஒன்றுக்குப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றில் ஒரு பங்கைக் கையளித்து அரசாங்கம் சுமார் 50 ஆயிரம் டொலர் நிதியைப் பெற்றது எனக் குறிப்பிட்டார்.

(ந-க,121)

## பல இன்னல்களுக்கும் முகம்கொடுத்து மருத்துவத்துறை இன்று வளர்ந்துள்ளது
### "யுத்த காண்டம்" நூல் வெளியீட்டில் க.வே. பாலகுமாரன்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவத்துறை பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து மிகக் குறுகிய காலத்தில் வளர்ச்சி பெற்றிருக்கின்றது என்று விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

மருத்துவப் போராளி தூயவனின் "யுத்த காண்டம்" நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு வெளியீட்டுரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

உலகப் போரியல் வரலாறுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாம் மிகப் பெரிய சாதனையைப் படைத்திருக்கின்றோம்.

எமது நீண்டகாலப் போராட்டத்தின் வலுத்தெரியாது அரசாங்கம் இன்று தறிகெட்டு நிற்கிறது.

எமது விடுதலைப் போராட்டத்தின் ஊடான போர்ப் பணியை பதிவு செய்து வெளிப்படுத்தும் வகையில் தூயவனின் நூல்கள் படைக்கப்பட்டுள்ளன. இன்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள 'யுத்தகாண்டம்' நூலும் பெரும் பணியையே ஆற்றி இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

மருத்துவக் கலாநிதி சுயந்தன் தலைமையில் இடம் பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம், மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா, டாக்டர். பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைகளின் பொறுப்பாளர் மனோஜ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந் நூலின் முதற் பிரதியை மருத்துவக் கலாநிதி கெங்காதரன் வெளியிட்டு வைக்க மருத்துவக் கலாநிதி எழுமதி கரிகாலன் அதனைப் பெற்றுக் கொண்டார்.

(ந-121)

## போதிய தகைமையற்ற
# பொலிஸாரின் பதவி உயர்வு குறித்து பொ.ஆ.குழு இவ்வாரம் தீர்மானிக்கும்

(கொழும்பு)

போதிய தகைமையற்ற பொலிஸ் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டமை குறித்து தேசிய பொலிஸ் ஆணைக்குழு இவ்வாரம் முக்கிய தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளதென தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் தலைவர் றஞ்சித் அபேயசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் பொலிஸ் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகளில் தகைமையற்றவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

நாற்பத்தைந்துக்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகள் தகைமையிலேயே பதவி உயர்வு பெற்றுள்ளமை குறித்து விசாரணைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய பொலிஸ் அதிகாரிகள் குறித்து தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக தேசிய பொலிஸ் ஆணைக்குழு எதிர்வரும் புதன்கிழமை கூடவிருக்கின்றது.

இதேவேளை, இந்தப் பதவி உயர்வினால் பொலிஸ் திணைக்களத்துக்குள் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை அடுத்த மாதம் நிரப்புவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அண்மையில் பதவி உயர்வு பெற்ற 45 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு விசேட பயிற்சி ஒன்றும் விரைவில் வழங்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ந-க,121)

## த.தே.கூ.-ஐ.தே.க. ஒருமைப்பாடு;
# உண்மைகள் மறைக்கப்படுவதாக அமைச்சர் நிமால் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி ஒருமைப்பாட்டைக் கடைப்பிடித்து வருவதால் அது உண்மைகளை மறைத்து வருவதாக சுகாதார நலத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

தற்போது ஆட்சிப்பீடத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்குள் அபிப்பிராய பேதம ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் தெரிவித்து வந்த குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் உருவான கூட்டு எதிரணி கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்படுத்திய பிரச்சினைகளை பகிரங்கப்படுத்தித் தெரிவிக்கப்பட வேண்டும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஐக்கிய தேசியக் கட்சியிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் தெளிவான உடன்பாட்டில் உருவாக்கப்பட்டுள்ளதால் அது மிக்க உறுதியுடன் செயல்பட்டு வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவும எதிரணியின் மேற்படி குற்றச்சாட்டுக்களை நிராகரித்தார்.

கூட்டுத் தீர்மானங்களை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தற்போதைய அரசாங்கத்திடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் விமல் வீரவன்ச மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ந-121)

## தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்

**உலகங்கள் வரும் போகும். அதனால் என்ன? ஆன்மா வாழ்கிறது. விரிவடைந்து கொண்டே உலகங்கள் ஆன்மாவிற்குள் நுழைந்தாக வேண்டும். கடலில் நீர்த்துளிகள் மறைவது போன்று அவை அங்கே மறைந்தாகவும் வேண்டும். அங்கே உலகமே ஆன்மாவின் லட்சியமாக இருப்பது!**

சுவாமி விவேகானந்தர்

# பெண்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண மகளிர் சங்கம நிகழ்வு வழிவகுக்கிறது

## திருமதி பத்மினி சிதம்பரநாதன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வாழும் பெண்கள் தமது மன எண்ணங்களைப்பகிர்ந்து கொண்டு எதிர்காலத் திட்டமிடல்கள் பற்றி ஆராயும் 'சங்கம நிகழ்வு' ஒன்று நேற்றைய தினம் காலை பெண்கள் பண்பாட்டு மையத்தில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில், யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி உட்பட போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இந் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்,

இராணுவ ஆக்கிரமிப்புகளினால் இடம் பெயர்ந்து சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாத நிலையில் இடம் பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் வாழ்ந்துவரும் பெண்கள், கல்வி கலாசாரம், பண்பாடு மற்றும் வாழ்வியல் ரீதியாகப் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறு இன்னல்களை அனுபவித்து வரும் பெண்களின் துன்பதுயரங்களை வெளிக்கொணர்ந்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்குக் களம் அமைக்கும் விதமாகவே இந் நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது என்றார்.

(ற-ப)

# வியாபாரிகளின் கவனத்துக்கு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ காலத்தில் சிற்றுண்டிவகை, ஐஸ்கிறீம் மற்றும் உணவு வகைகள் என்பனவற்றை வியாபாரம் செய்ய விரும்புபவர்கள், குறித்த அவ்வவ் உணவுப் பண்டங்களைத் தயாரிக்கும் நிலையம், அமைந்துள்ள பிரதேச சபையினால் வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்தின் நிழற்படப் பிரதி அல்லது சுகாதாரப் பரிசோதகரின் சிபார்சுக் கடிதத்துடன் வரவேண்டும் என வலி. வடக்கு பிரதேச சபையின் செயலாளர் எஸ். செல்வரட்ணம் கேட்டுள்ளார்.

அவ்வாறு வருபவர்களுக்கு மாத்திரமே வியாபாரம் செய்ய அனுமதி வழங்கப்படும் என்றும் நோய்கள் பரவாதிருக்க இவ் விடயத்தில் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

(ற-க)

---

## பாதுகாப்பு அமைச்சின்...

மாறு யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கேட்டிருந்தார். இதற்கு புலிகள் அமைத்துள்ள முகாம்கள் தொடர்பாக ஆராய்ந்து 2 வாரங்களில் அறிக்கையை சமர்ப்பிப்பதாக யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவித்திருந்தனர். இந் நிலையில் திருகோணமலை துறைமுகப் பாதுகாப்பு, மற்றும் கிழக்கிலங்கைப் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பான உண்மை நிலைகளை ஆராய்வதற்கு திருமலை சென்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் அங்கு இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். நேற்றைய பேச்சுவார்த்தை வழமையாக நடைபெறும் மாதாந்த உயர்மட்ட மாநாடு என்று தெரிவிக்கப்படுகிறபோதும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் அறிக்கை கிடைப்பதற்கு முன்பாக இச் சந்திப்பு நிகழ்ந்திருப்பதும் அதனையடுத்து இன்று திருகோணமலை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவை சிறில் ஹேரத் சந்திக்க விருப்பதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இது இவ்வாறிருக்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போது நாட்டில் இல்லாத சூழ்நிலையில் அவரது பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஏற்றிருக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்கவின் பணிப்பின் பேரில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் திருகோணமலைக்கு சென்றிருக்கலாம் என்றும் இதன் நோக்கம் என்னவாக இருக்கும் என்பது சம்பந்தமாக பல்வேறு ஊகங்கள் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இன்று வவுனியாவிற்கும் மன்னாருக்கும் விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)

# சங்கம நிகழ்வு

(கல்வியங்காடு)

நல்லூர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் "சங்கமம்" நிகழ்வு நாளை பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் ஞான பண்டித வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(ச-74)

---

## பிலியந்தலவில்...

தாகத் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அங்கிருந்து காரில் திரும்பி வரும்பொழுது மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தவர்கள் அவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் இக் கொலையுடன் பாதாள உலகக் கும்பலுக்கு தொடர்பு இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(08)

---

## ஏறாவூரில்...

இராணுவத்தினர் பொதியினை சோதனையிட்ட போது அதில் குண்டு இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

அதன் பின்னர் அக் குண்டை இராணுவத்தினர் மீட்டுச் சென்று செயலிழக்கச் செய்தனர்.

(ச-121)

---

## 4 தமிழ்...

கூறப்படுகின்றது.

இதேவேளை, புளொட் மோகனின் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நால்வரில் இருவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத்லூகொட தெரிவித்துள்ளார்.

(ற-க,60)

# ஆசிய கலாசாரத்தை முத்திரையிடும் மாநாட்டில் இலங்கையும் பங்கேற்பு

(கொழும்பு)

ஆசியாவுக்கு உரிய கலாசாரத்தை அடையாளப்படுத்தும் வகையில் சீனாவில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்பதற்காக இலங்கையின் சார்பில் கலாசார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழு ஒன்று அங்கு சென்றுள்ளது.

ஆசியாவுக்கு உரிய கலாசாரத்தை ஏற்படுத்தும் வகையில் நடைபெறும் இந் நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி ஆரம்பித்து எதிர்வரும் 26ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

14 நாடுகளின் கலாசார அமைச்சர்கள் பங்குபற்றும் இந்த மாநாட்டில் ஐரோப்பாவை அடையாளப்படுத்த கலாசாரம் ஒன்று இருப்பதுபோல, ஆசியாவையும் அடையாளப் படுத்த கலாசாரம் ஒன்று நிர்மாணிக்கப்பட வேண்டும் என்று இவர்களால் வலியுறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க)

# அரசின் முழு நோக்கமும் ஆட்சியைத் தக்கவைப்பதே

## எதிர்க்கட்சி எம்.பி. திஸநாயக்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தேர்தல் காலத்தின்போது முன் வைத்த வாக்குறுதிகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் மறந்துவிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்புச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.டி.திஸநாயக்க அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள அரசாங்கத்தின் முழு நோக்கமும் ஆட்சியைக் கைப்பற்றுவதும் அமைச்சர்களின் வரப்பிரசாதங்களை பாதுகாப்பதுமாகத்தான் காணப்படுகின்றது. கடந்த பொதுத் தேர்தலின்போது மாகாண சபைத் தேர்தலின்போதும் கூட்டமைப்பு அரசாங்கத்தின் தலைவர்கள் எரிபொருள் விலையை அதிகரிக்கப்போவதில்லை என்று குறிப்பிட்டிருந்தனர்.

எனினும், நிதியமைச்சர் சரத் அமுனுகமவோ மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது எனக் கூறினார்.

கூட்டமைப்பினர் பொருட்களின் விலையைக் குறைப்பதற்காக ஆட்சிபீடம் ஏறவில்லை என ஜே.வி.பி தெரிவித்துள்ளது. இதன்மூலம் அரசாங்கத்தின் ஏமாற்று வேலைகள் வெளியாகியிருப்பதாகவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(த-121)

# க.பொ.த உயர்தர அனுமதிக்கு கணிப்பீடும் சேர்க்கப்படும்

(கொழும்பு)

பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கான அனுமதிக்கு இருக்க வேண்டிய மூன்று திறமைச் சித்திகளில் ஒரு சிறப்புச் சித்தியை மட்டும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகளின் கீழ் பெற்றுக் கொள்ள முடியுமென கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் டாராடிமெல் அறிவித்துள்ளார்.

இரண்டாம் முறை பாடசாலை மூலம் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. இருந்த போதிலும் இரண்டாம் தடவை பாடசாலை விண்ணப்பதாரி ஒருவராகத் தோற்றுகின்ற மாணவர் ஒருவர் முதலாம் ஆண்டில் அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு சிறப்புச் சித்தியை உயர்தரத்திற்கு அவசியப்படும் சிறப்புச் சித்தியின் தேவைக்குப் பதிலாகப் பயன்படுத்த முடியும். இச் சிறப்புச் சித்தித் தேவை கணிதம் மற்றும் தாய்மொழி ஆகிய பாடங்களுக்கு உபயோகப்படுத்த முடியாது.

உபயோகப்படும் மதிப்பீட்டு திறமைத் தேர்ச்சிக்கு அது தொடர்பான பாடம் முன்னைய ஆண்டில் அப் பாடத்தின் எழுத்துப் பரீட்சையில் சித்திபெற்றிருக்க வேண்டும் எனவும் கல்வி அமைச்சு விடுத்துள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

## ஜனாதிபதி தேர்தல் ஐ.தே.க. தயாராகிறது

(கொழும்பு)

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நோக்காகக் கொண்டு இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் ஒக்டோபர் மாத இறுதிக்குள் சுமார் 10 ஆயிரம் சமூகக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் தொகுதி அமைப்பாளர்களாக் புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(த-121)

யாழ். வணிகர் கழகம் நடாத்தும்

மாபெரும் யாழ் வர்த்தகக் கண்காட்சி 2004

ஆகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள், கல்வி அறிவியல் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றிப் பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/405)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 2[illegible].08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர்

விலை :-16.00

# சங்கு நாதம்

23 - 29 ஆகஸ்ட் 2004

Sankunatham

பக்கங்கள் - 20

சங்கு :-04 வள்ளுவர் ஆண்டு 2035 தொலைபேசி :- 2223378 நாதம் :- 24

## உச்சமடையும் சர்வதேச அழுத்தம்



அரசியல் - அறிவியல் - ஆன்மீகம் அதுவே உங்கள் சங்குநாதம்.

# இலங்கைத் தீவில் உச்சமடைந்திருக்கும் சர்வதேச அழுத்தம்



இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு எட்டாக்கனியாகியுள்ள நிலையில், மீண்டும் போர் வெடிக்கும் அபாயநிலை, பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு, நாட்டில் நிர்வாகத்தைப பாதிக்கும் குழபபகரமான போராட்டங்கள், அடுத்த தேர்தலுக்கான களநிலைமை என நாடு அல்லோலகல்லோலப்பட்டுக கொண்டிருக்கிறது.

இந்தநிலையில், ஆழ வேரூன்றி இருக்கின்ற சர்வதேச சமூகத்தின் அழுத்தம் இறுகி இறுகிக் கழுத்துவரை நெருங்கிவிட்டது. எந்தப் பக்கமும் திரும்பமுடியாத நிலைக்கு சர்வதேச அழுத்தம் இலங்கையில் திணிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இத்தகைய அழுத்தம் இனப்பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்தும் வகையில் அரசாங்கத்தை அதன்பால் ஈர்க்கும் அழுத்தமாக அமையாமை துரதிஷ்டவசமான நிலையாகக் காணப்படுகின்றது.

இலஙகையில் அமைதி ஏற்படவேண்டுமென உண்மையான அக்கறையுடன் சர்வதேச சமூகத்தின் கரிசனை இருக்குமானால், அதற்கான தீவிர முயற்சியில் அரசாங்கத்தை ஈடுபடுத்தும் வகையில் அதன் நடவடிக்க்கைகள் அமையவேண்டும்.

இதனை விடுத்து வாய்ப்பந்தல் போட்டுககொண்டு சர்வதேச ஆதிக்க சக்திகளின் கைக்குள் இலங்கை இருக்கவேண்டுமென்ற திட்டத்துடன் அழுத்தம் பிரயோகிக்கப்படுமாயின் அது எந்தவகையிலும் பயனற்றதாகவே அமையும்.

இலங்கையில் கால் நூற்றாண்டுக்கு மேலாக ஆழ வேரூன்றி வேதனைதரும் விடயமாக மாறியிருக்கும் இனப்பூசலின் உண்மைத்தாக்கம் என்னவென்பதை சர்வதேச சமூகம் இதுவரை உணரவில்லை என்பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமுடியாது. புரிந்தும் புரியாதநிலையில், தமது சுயலாப நோக்கில் அவை செயற்படுவதும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு தடைக்கல் என்றுதான் குறிப்பிடவேண்டும்.

இலங்கைத்தீவில் காலணித்துவ ஆட்சிக்குப் பின்னர் இடம்பெற்ற இனநசுக்கல், திட்டமிட்டவகையில் தமிழ் மக்கள் மீது ஏவப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள், தமிழ்மக்களுக்கு ஏற்படுத்திய, ஏற்படுத்திக்கொண்டிருக்கும் தாக்கம் வார்த்தைகளால் விபரிக்கக்கூடியதன்று.

சிங்களப் பேரினவாதத்தின் நாகரிகமற்ற தர்மம், இலங்கைத்தீவில் தமிழ் மக்களின் இரத்தத்தில் ஆனந்த அபிஷேகம் நடத்திய வரலாற்றை சர்வதேச சமூகம் இலகுவில் மறந்துவிடமுடியாது.

அரச இயந்திரம் தமிழ் மக்களை இரண்டாம்தரப் பிரஜைகளாகக் கருதி நடாத்திய அராஜக அட்டூழியம் இன்னமும் மண்ணில் மறைந்துவிடவில்லை.

இத்தகைய சிங்களப் பேரினவாத சக்திகளின் கோரத்தாண்டவத்துக்குப் பின்னர் கூட தமிழ்மக்கள் தமது உரிமை, சுயநிர்ணயம் பற்றிய விடுதலை முழக்கத்தை நியாயபூர்வமாக முதன்மைப்படுத்திய போதும், அதுவும் இன்றுவரை அழிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளையே எதிர்நோக்கி வருகிறது.

இவை சர்வதேச சமூகத்தின் கண்களுக்கு மட்டுமல்ல காதுகளுக்கும் மிகத் தெளிவாகக் கேட்கும விடயம்.

## பேச்சுவார்த்தைகள்

இத்தகைய அநீதிகளுக்கெல்லாம் அப்பால் தமிழ்மக்கள் தமது நியாயபூர்வமான கோரிக்கைகளை சர்வதேச சமூகத்தினமுன வைதது, தீர்வை நாடிச்சென்ற போதெல்லாம் நடந்தது என்ன என்பதை சர்வதேச சமூகம் மறுதலித்துவிடமுடியாது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எத்தனையோ ஒப்பந்தங்கள், சிங்களப் பேரினவாதத்தால் கிழித்தெறியப்பட்ட நிகழ்வுகள் இன்னமும் மறைந்துவிடவில்லை. மேலும் அரசியல் ரீதியாகப் பிரச்சினைகள் அணுகப்பட்ட போதெல்லாம், சிங்களக் குண்டர்கள் மூலம் அவற்றை முனனெடுத்தவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டமையும் வெளிப்படை.

இவற்றுக்கும் மேலாக இனப்பிரச்சினைக்குத் தீர்வாகப் போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டதையும், அதன் நிமித்தம் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் ஆறு சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றதையும் நினைவுகூர்கையில், சமாதானப் பேச்சுக்களை அர்த்தமற்றதாக்கி, அதனைக் கேள்விக் குறியாக்கியவர்கள் சிங்களப் பேரினவாதிகள்தான் என்பதைப் புரிந்துகொள்ள சர்வதேச சமூத்துக்கு கண்ணாடி தேவையில்லை.

அது மாத்திரமன்றி தீர்வுக்கான வரைபே இன்றி பேச்சை ஆரம்பித்த சிங்களப் பேரினவாதம், தமிழ்மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்ற வகுத்த புதிய திட்டமே சமாதானப் போர்வை என்பதையும்,



இன்றைய இலங்கை நிலைவரம் சர்வதேசத்துக்கு உணர்த்திநிற்கிறது.

வெளிநாட்டு உதவிகளை அள்ளிக்கொண்டு, தமிழ்மக்களையும் துன்புறுத்திக்கொண்டு, சர்வதேச சமூகத்துக்குப் பாசாங்குகாட்ட போட்ட வேஷமே சமாதானம் என்பது இன்று புரிந்துவிட்டது.

மேலும் பேசப்பட்ட எந்தவொரு விடயத்தையும் நடைமுறைப்படுத்தத் தயாரில்லாத சிங்களப் பேரினவாதம், எதனடிப்படையில் சமாதானத்தை சந்திக்கப்போகின்றது என்பதையும் சர்வதேச சமூகம் தெரிந்துகொள்ளவேண்டும்.

இந்தநிலையில் சர்வதேச சமூகத்தின் அழுத்தம் எங்கு பிரயோகிக்கப்படவேண்டும். அதன் தாக்கம் எதனை வலியுறுத்தவேண்டும் என்பதுதான் இனறைய முதன்மையான விடயம்.

யதார்த்தபூர்வமாக இலங்கையில் அமைதி, சமாதானம் ஏற்படவேண்டுமென சர்வதேச சமூகம் விரும்பினால், அதன் அழுத்தம் இலங்கை அரசை சமாதான வழிக்கு திசை திருப்புவதாக அமையவேண்டும். சமாதானம் ஏற்படவேண்டுமானால் முதலில் புரிந்துணர்வுடன் மக்களின் இயல்பு வாழ்வை உறுதிப்படுத்தவேண்டும் என்பதை அரசுக்கு அழுத்திக் கூறவேண்டும்.

அதற்காக இடைக்காலத் தீர்வு யோசனையை முதலில் அமுல்ப்படுத்தி படிப்படியாக இறுதித்தீர்வை நோக்கி நகர அரசை வழிநடாத்த சர்வதேச சமூகம் பாடுபடவேண்டும். இதுவே இலங்கையில் இன்று சர்வதேசம் பிரயோகிக்கவேண்டிய தமது அபார வல்லமை பொருந்திய அழுத்தமாக இருக்கவேண்டும்.

## உயர் பாதுகாப்பு வலயம்

அகதி முகாமில் அரை குறை வயிற்றுடன் அல்லல்படும் தமிழ்மக்களின் கண்ணீரைப் பாருங்கள். இவை சொல்லும் உயர் பாதுகாப்பு வலயத்தின் வேதனையை. சொந்தமண்ணில் அகதியாக அலையும் பிறப்பு தமிழ்மக்களுக்குத் தானா? என்ற வேதனையின் உச்சம் அப்போது புரியும்.

சமாதானம் ஏற்படுவதன் மூலம் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரவேண்டும்.

அப்போதுதான் அவர்களின் வாழ்வுரிமை மதிக்கப்படுவதான் உணர்வு ஏற்படமுடியும.

சமாதானத்தின் அடிப்படையே போர் அற்ற வாழ்க்கை என்றால், எதற்காக உயர் பாதுகாப்பு வலயம்? என்றதொருகேள்வி எழுவது நியாயபூர்வமானதே. இந்நிலையில் உயர்பாதுகாப்பு தேவை என அரசாங்கம் தமழ்மக்களின் குடியிருப்புக்களை ஆக்கிரமித்திருப்பது மீண்டும் போருக்கான சமிக்கை என்பதையே அது தெட்டத்தெளிவாக வெளிப்படுத்துகிறது. சமாதானச் சூழலில் இத்தகைய போருக்கான ஆயத்தம் அரசின் கபட நோக்கம் என்பதையே புலப்படுத்துகிறது.

இந்நிலையில் சர்வதேச சமூகம் இதனை உணராமல் தெரியாமல் இருக்கவில்லை. இது மறைத்துக் கட்டும் விடயமும் அல்ல. எனவே சமாதானம் மலர உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றுமாறு இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும். இது இலங்கைத் தீவில் அக்கறை காட்டும் சர்வதேச சமூகத்தின் செயற்பாடாக அமையும். இதுவே உச்சமடைந்திருக்கும் சர்வதேச சமூகத்தின் அழுத்தமாக இருக்கவேண்டும்.

## இடைக்கால நிர்வாகம்

யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசம் மீளக் கட்டியெழுப்பப்படவேண்டும் என்பது நியாயபூர்வமானதொரு கோரிக்கை. இரண்டாம் உலக மகா யுத்த முடிவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளைப் புனரமைக்க மார்ஷல் திட்டமென்ற நிதியம் ஆரம்பிக்கப்பட்டது நாடுகளைப் புனரமைக்கவே. இதன்மூலமே யுத்த வடுக்கள் மறைந்து சமாதான சூழலுக்குள் மக்களை இட்டுச்செல்ல முடியும்.

இதனை அடிப்படையாக வைத்தே விடுதலைப்புலிகள் வடக்கு கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகார நிர்வாகக்கோரிக்கையை அரசிடம் சமர்ப்பித்து, அதனை அமுல்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது மக்களின் அடிப்படைப் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒரு அடிப்படைத் திட்டமே தவிர கபட நோக்கில் தயாரிக்கப்பட்ட தீர்வு அல்ல. இதன்மூலம் வடக்கு கிழக்கில் இயல்பு சூழலை உருவாக்கி நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்பும் அடிப்படைத் திட்டமே இந் நிர்வாகக் கோரிக்கை ஆகும்.

ஆனால் இத்தகைய தமிழ்மக்களின் அடிப்படைத் தேவைகளை தீர்த்து வைக்கவே முடியாமல் சாட்டுப் போக்குக் கூறிக்கொண்டு, வெற்று சமாதானம் பேசி வருகிறது சிங்கள அரசு.

கோவையூர் ஜெயன்

இந்நிலையில் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வு எப்படி சாத்தியமாகும். இது சாத்தியமாகாத நிலையில் சமாதானம் எப்படிச் சாத்தியமாகும்.

இதனை நியாயபூர்வமாக உணர்ந்திருக்கின்ற சர்வதேச சமூகம் இலங்கையில் சமாதானம் நிலைபெற வேண்டும் என்ற நோக்கில் விடுதலைப்புலிகளின் தமிழ் மக்களுக்கான இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை அமுல்படுத்தவேண்டும் என்பதை இலங்கை அரசுக்கு அழுத்திக் கூறிச் செயற்படுத்தவேண்டும்.

மேலும் தமிழ்மக்களின் உரிமை, தமிழ்த்தேசியம் என்பவற்றை வலியுறுத்தி அவர்களின் நியாயபூர்வமான

(17ஆம் பக்கம் பார்க்க...)

# என் இனிய குழந்தைகளே...

## டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் அவர்கள்

சில மாதங்களுக்கு முன்பு நான் வடகிழக்கு இந்தியாவில் நாகலாந்து சென்றிருந்தேன். டுயன் சாங் (**Tuensang**) என்ற சிறு நகரில் குழந்தைகளைச் சந்திக்க ஏறபாடு செய்திருந்தார்கள். 'இமய மலைத் தொடரின் அடிவாரக் குன்றுகள் சூழ்ந்த அழகான சிறு நகர், மலையில் பூத்த குறிஞ் சிப் பூக்கள் போல சிறார் குழாம் எதிர் பார்ப்பும் ஆர்வமுமாக என்னைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள்.

ஒரு சிறுவன் எழுந்தான். என்னை நோக்கி அறிவு உமிழும் முகத்துடன் தெளிவான ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினான். அந்த மலையடிவாரமென்ன... அந்த ஆங்கிலமென்ன! இறையுணர்வு மலர்ந்த அந்த நொடியில் என்னைப் பார்த்து அவன் கேட்டான் "திருவாளர் குடியரசுத் தலைவர் அவர்களே... நானொரு வளமான, அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும் பாதுகாப்பான இந்தியாவில் வாழ விரும்புகிறேன். அதற்கு நீங்கள் என்ன செய்ய இருக்கிறீர்கள்? நானென்ன செய்ய வேண்டும்?''.

ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான் அந்த மாணவன். சுற்றியிருந்த எல்லாக் குழந்தைகளும் அந்தச் சிறுவனை நோக்கி அவன் கேள்வியை உள் வாங்கி என்னை நோக்கினர். என் பதிலை எதிர்பார்த்தனர். அந்த 'க்ஷணம்' என் மனதில் பாய்ந்தது.

அந்தச் சிறுவன் "நான் என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்ட கேள்வியில் இளைய சமுதாயத்தின் பொறுப்பு உணர்ச்சி மிளிர்வதைக் கண்டேன். இளைய சமுதாயம் முன்னேறத் துடிக்கிறது.

நான் சொன்னேன்: "இந்தத தருணத்தில் நீ செய்ய வேண்டியது நன்றாகப் படிப்பதுதான். ஓய்வு நேரத்தில் எழுதப் படிக்கத் தெரியாத இரண்டு பேருக்கு அதைச் சொல்லிக் கொடு. இவ்வாறு நீங்கள் எல்லோரும் செய்தால் கோடிக் கணக்கான மக்கள் கல்வியறிவு பெறவாய்ப்புள்ளது. அதைத் தவிர, நீ பன்னிரண்டாம் வகுப்பு தாண்டுவதற்குள் ஐந்து மரக் கன்றுகளை நட்டுவளர், இந்தியாவில் ஏறக்குறைய 30 கோடி மக்கள் பதினேழு வயதுக்குட்பட்டவர்கள். நீங்கள் இவ்வாறு மரம் நட்டால் ஏறக்குறைய 100 கோடி மரங்கள் வளர வாய்ப்புள்ளது. ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் நீ செய்ய வேண்டியது இது தான்'' என்றேன்.

இதைப் போல மற்ற இந்தியர்களுக்கு வெவ்வேறு கடமைகள் இருக்கின்றன. இந்தியா கி.பி. 2020-களில் ஒரு வளர்ந்த நாடாக ஆக வேண்டும் என்றால் நாம் முக்கியமாக ஐந்து துறைகளில் கவனத்தைச் செலுத்தவேண்டும். அவை:

i. விவசாயம் மற்றும் உணவுப்பொருள் பதப்படுத்தும் துறை
ii. தரமான மின்சக்தி வசதி
iii. கல்வி மற்றும் சுகாதாரம்
iv. தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்
v. தன்னிறைவு காணும் விதத்தில் நாட்டின பாதுகாப்புத் துறை விளங்கவேண்டும்

என்று அடிப்படை அஸ்தி பாரததை அவர்களுக்கு எடுத்துரைத்தேன். என் எண்ணத்தில் நீங்காத ஓவியமாக நிலை பெற்றது அந்தத் தருணம்.

ஒவ்வொரு நாளும் நான் இளைய சமுதாயத்தைச் சந்திப்பது தொடர்ந்து கொண்டிருக்கிறது. ராஷ்டிரபதி பவனிலும் சரி, பிற மாநிலங்களுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும்போதும் சரி, எல்லா இடங்களிலும் நான் ஒரு கருத்தை எப்போதும வலியுறுத்தி வந்தேன். "நாட்டுக்கு ஒரு இலக்கு இருக்க வேண்டியது போல ஒவ்வொரு இளைஞருக்கும ஒரு இலக்கு இருக்க வேண்டும். இலக்கை அடைய உழைப்பு இருக்க வேண்டும். தனி மரம் தோப்பாகாது. பல உயர்ந்த குறிக்கோள்கள் ஒரு உயரிய நாட்டை-வளர்ந்த நாட்டை உருவாக்கும். சோதனைகளையும் தோல்வியையும் கண்டு துவளாது இலக்கை பின்தொடரும் மன உறுதி இருக்க வேண்டும். "**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு இடும்பை படாஅ தவா**'' என்று வலியுறுத்தி வருகிறேன்.



அதைப் போல நான் மாணவர்களிடம் உரையாடும் வாய்ப்பு ஒன்று கிடைத்தது. அது இந்த ஆண்டு மே 15-ஆம் திகதி, ஒரிஸாவில் பரிபாடா (**Baripada**) என்கிற இடம்.

பத்தாம் வகுப்பு படிக்கும் ஒரு மாணவன் சொன்னான். தானொரு இன்ஜினியர் ஆக விரும்புகிறேன் என்று ப்ளஸ் டூ படிக்கும் ஒரு மாணவன் சொன்னான்... தானொரு டாகடராக வர விரும்புவதாக. ஏழாம வகுப்பு படிக்கும் ஒரு மாணவன் சொன்னான், தானொரு வக்கீலாக விரும்புவதாக.

அப்போது என் கண்ணில் பட்டாள் ஒரு சிறுமி. சுடர் விடும் அறிவும் கண்ணில் ஒரு தீர்க்கமுமாக நின்றிருந்தாள் அவள். எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருப்பவள். அவளைக் கேட்டேன்: "நீ என்னவாக விரும்புகிறாய்?''

துளியும் திகைக்காது, மணி சிதறியது போல உரைத்தாள்: நான் வளர்ந்து ஒரு அரசியல் வாதியா விரும்புகிறேன். உடனே அந்தச் சிறுமியுடன் அமர்ந்திருந்த எல்லா மாணவ, மாணவியரும் கொல்லென்று சிரித்தார்கள். என்னுடன் அமர்ந்திருந்த கவர்னர் ராஜேந்திரன் முதலமைச்சர் பட்நாயக் மற்றும் உயரதிகாரிகள் எல்லோரும் சிரித்தார்கள். ஆனால், அந்தச் சிறுமி சிரிக்கவில்லை.

நான் சொன்னேன். 'அருமையான பதில் அருமையான பதில்'' அவள் முகம் சற்றுச் சிவந்ததே ஒழிய அவள் முன்போலவே தீர்க்கமாக நின்றிருந்தாள். நான் கேட்டேன். "ஏன்? எதனால் நீயொரு அரசியல்வாதியாக விரும்புகிறாய்?''

அந்தச் சிறுமி கூறுகிறாள். "நான் அரசியலில் இருந்து ஊழலை ஒழித்துக் கட்டவேண்டும். இந்த நாட்டுக்கு ஊழலல் இருந்து விடுதலை கொடுக்க வேண்டும்''.

ஆங்கிலத்தில் சொல்வார்கள் '**Hands on Approach**' என்ற அந்த தீர்க்கமான தெளிவான பதில் பசுமரத்தாணி போல என் நெஞ்சைத் துளைத்தது. முடிவான பாதை தெரியாதபோது அடிவானில் இருள நீங்குமா என்றொரு கவிஞன் பாடினான். நான் அங்கு விடிவெள்ளியை கண்முன் கண்டேன். வாழிய பாரதம். வாழ்க இந்நன்னாடு.

சமீபத்தில் நான் பெங்களூர் சென்றிருந்தேன். இஸ்கான் கோயிலில் அட்சயப் பாத்திரம் என்றொரு நிகழச்சி. கல்விப் பணியில் கருத் தொன்றிச் செல்ல பள்ளிப் பிள்ளைகளுக்கு உண்ண உணவளிக்கும் உன்னத நிகழ்ச்சி. அங்கு அட்சயப பாத்திரத்தை அள்ள அள்ளக் குறையா அன்னமிடும் பாத்திரமாக உருவகித்திருந்தார்கள்.

அப்போது என் மனதில் இடங் கொண்ட வள்ளுவர் சிந்தையில் அளாவினார். "தொட்டனைத்தூறும் மணற்கேணி'' குறள் நிழலாடியது. ஒரு கருத்தோவியம் கண்ணில் தெரிந்தது.

பள்ளிப் பிள்ளைகளுக்கு மதிய உணவு. ஒரு சில மாநிலங்களில் மட்டுமின்றி நாடு முழுவதும் அமுல்படுத்தப்படவேண்டும் என்பது என விருப்பம். அந்தத் தருணத்தில் இளைய சமுதாயம் அன்னப் பாத்திரமும் வித்யா பாத்திரமும் ஒருங்கிணைந்த அட்சயப் பாத்திரமாக வேண்டும் என்ற எண்ணமும் என்னில் வலுப்பட் டது. நான் அதைச் சொன்னேன். கி.பி. 2020-களில் நீங்கள் இந்தியாவை உங்கள் அளுமையால் வியாபிக்கப் போகிறீர்கள். நன்றாக வாழுங்கள். நன்றாக ஓடியாடி விளையாடுங்கள் ஆரோக்கியமான உணவருந்துங்கள். ஆனால் ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம். ஓயாமல் கற்றுக் கொண்டே இருங்கள். இந்த அடசயப் பாத்திரம் உங் களுக்கு அன்னமும் வித்தையும் ஒருங்கிணைந்து உயர் வளிக்கும் அற்புதப் பாத்திரமா கட்டும் என்றேன்.

**வாழ்க இளைய சமுதாயம்.**

***நன்றி : விகடன்***

# குருப் பெயர்ச்சி

## பொதுப்பலன்கள்

### மேடம்

உங்கள் மேட ராசிக்கு குரு 9,12க்கு உரியவன். 9என்பது சுப இல்லம், 12என்பது விரய இல்லம். இந்த குரு வித ஆதிபத்தியம் உடைய குரு, இப்போது 6வது ராசிக்கு சென்றுவிட்டான். இது உங்களுக்கு மறைவு இல்லம் என்பது குறிப்பிடக் கூடியது. ஒரு முழு சுபக்கிரகமான குரு, இக்காலம் மறைந்தது உங்களுக்கு நன்மை இல்லை என்பது பொது. அதாவது செல்வத்தைக் கொடுக்க வேண்டிய குரு (பாக்யாதிபதி) 6 இல் மறைந்துவிட்டான் என்பதுதான். அடுத்தபடியாக நாம் பார்க்கவேண்டியது இந்த குரு செல்லும் பாதையை. இதைத்தான் நாம் சாரம் என்கிறோம்.

ஆரம்பத்தில் குரு செல்லும் சாரம் உத்தரம் நட்சத்திரம். இந்த நட்சத்திரம் சூரியனுக்கு உரியது. சூரியன் உங்கள் ராசிக்கு 5என்ற திரிகோண ராசிக்கு உரியவன். இது உங்களுக்கு நன்மை செய்யக்கூடியது. இது ஆரம்பம் முதல் 30.09.2004 வரையில் செல்வாக்கு, கௌரவ உயர்வு, சிலருக்கு பதவி உயர்வு, கடன் வரவு, திருமணம் போன்ற நன்மைகளைச் செய்யும். சிலருக்கு புதிய உத்தியோகப் பொறுப்பை ஏற்பதும் உண்டாக்கும். அடுத்தபடியாக, அத்தம் நட்சத்திரம் சந்திரன் சாரத்தில் செல்லும் குரு. சந்திரன் உங்களுக்கு நன்மை செய்யக்கூடிய ரகம். இது 30.09.2004முதல் தாய்வழி உறவில் சிறப்பான நன்மைகளை உண்டாக்கும். வழக்கு இருப்பவர்களுக்கு வெற்றியும் கிட்டும். அயல்நாட்டு பிரயாணத்தை மேற்கொள்வது, புதிய பதவி ஏற்பு, குழந்தை பிறப்பு போன்ற பலவிதமான நம்மைகளையும் செய்யும்.

அதன்பிறகு சித்திரை நட்சத்திரம் செவ்வாய் குரு. இது உங்களுக்கு நன்மையளிக்காது. சத்ரு, கடன், வழக்கு, நோய் போன்ற பல வழிகளில் பாதிப்பை உண்டாக்கக் கூடியதே. இப்போது ஆறாமிடத்து குரு என்பதை மறக்கக்கூடாது.

### இடபம்

உங்கள் இடப ராசிக்கு இந்த குரு 8க்குரியவன். 8-11 ஆகிய இரு வீட்டு ஆதிபத்தியம் இருந்தபோதிலும் உங்களுக்கு ஆகாத கிரகம் இந்தக் குரு. கிரகங்களில் முழு சுபக்கிரகமான குருவும் உங்கள் ஜென்ம அதிபதியான சுக்கிரனும் ஆகாத கிரகமாகும். இப்போது கன்னி ராசியில் சென்றிருப்பது நன்மையா என்பதுதான் கேள்வி. இந்த வீடு குருவுக்கு நட்பு வீடு. உங்கள் ராசிக்கு 5வது ராசியில் சென்ற குரு. இந்த 5வது உங்கள் கௌரவவீடு அல்லது பூர்வபுண்ணிய ஸ்தானம் என்று அழைக்கப்படுவதாகும்.. எனவே, பொதுவாக இந்த குருப் பெயர்ச்சி உங்கள் கௌரவத்தை உயர்த்தக் கூடியதாகும். ஒரு சுபக்கிரகம் பூர்வபுண்ணிய இல்லத்தில் சென்றதால் உங்கள் பாக்கியம் அல்லது செல்வ ஸ்தானத்தைப் பார்க்கிறது. உங்கள் ஜென்மத்தையும் பார்ப்பதால் நீங்கள் எல்லா தீய பலன்களிலிருந்தும் காப்பாற்றப்படுகிறீர்கள். சத்ருக்கள், நோய், கடன்களிலிருந்தும் காப்பாற்றப்படுகிறீர்கள் இவை உங்களுக்கு பொதுவான பலன்கள்.

ஆரம்பத்தில் குரு மாறி இருப்பது உத்தரம் நட்சத்திரம் சாரத்தில். உத்தரம் என்பது சூரியனின் நட்சத்திரம். சூரியன் உங்கள் ராசிக்கு வகைக்கிரகம். 19.08.2004 முதல் 30.09.2004 வரை உத்தரம் எல்லையில்தான் குரு செல்கிறது என்பதால் அரசாங்கம், அரசியல் மனிதர்கள் மூலம் உங்களுக்கு ஆகாத நிலையே இருக்கும். அதன்பிறகு அத்தம் நட்சத்திர எல்லையில் செல்லும் குரு. இது 30.09.2004 முதல் 09.12.2004 வரை. இது உங்களுக்கு எல்லா வழியிலும் சிறப்புமிக்க காலமாகவே இருக்கும். பிறகு தொழில், குடும்பம், நட்பு இந்த வகையில் கௌரவ சாரத்தில் செல்லும் குரு, சொத்து, சுகம் விருத்திக்கு ஏற்ற பல நன்மைகளையும் செய்யும்.

### மிதுனம்

உங்கள் மிதுனராசிக்கு 7-10ஆகிய இரு கேந்திரத்திற்கு உரியவன் இந்த குரு. ஏழு என்பது இல்லறம், நட்பு, வெளி உலக மனிதர்களின் தொடர்பு போன்ற வகைக்கும், பத்து என்பது ஜீவனஸ்தானம் என்றும் அழைக்கிறோம். அந்த வகைக்கு வேண்டிய ஆதிபத்தியத்தையும் குரு செய்யும். இப்போது 4வது கேந்திரமான 'சுக'கேந்திரத்திற்கு வந்திருக்கும் குரு என்ன செய்வான் என்பதுதான் கேள்வி. கேந்திராதிபதியான குருதான் இப்போது கேந்திரத்தில் இருக்கிறான். எனவே தீமைக்குரியவன் அல்ல. இந்தக் குரு, சுகநலத்தை விருத்திசெய்வான். 4வது இல்லம் தாய் சுகம், கல்வி, வாகன சுகத்தை அனுபவித்தலைக் குறிக்கும். எனவே, ஸ்தான பலம் என்று பார்க்கும்போது இந்த குருப் பெயர்ச்சி உங்களுக்கு நன்மை செய்யக்கூடியதே.

மேலும், சாரபலம் என்று பார்க்கும் போது ஆரம்பத்தில் உத்தரம் நட்சத்திரம், சூரியன் சார குரு உங்களுக்கு நன்மை இல்லை. இது 19.08. 2004 முதல் 30.09.2004 வரை. அரசாங்கபாதிப்பு, வழக்கு, சத்ருக்கள் மூலமாக பாதிப்புமுண்டாகும். தந்தை வகையினரால் பாதிப்பு, சிலருக்கு உத்தியோக இடமாற்றம் மூலம் பாதிப்பும் உண்டாகும். பெண்களுக்கு தீயினால் பாதிப்பு இவைகளையும் செய்யும். பிறப்பு ஜாதகம் நன்றாக விருந்தால் இவ்வகையான பாதிப்பும் இல்லாமல்போகும். பிறகு சந்திரன் சார குரு உங்களுக்கு நன்மைகளையே செய்யும். காரணம் சந்திரன் குடும்பம், தனம், வாக்கு, இல்லத்து அதிபதி. சந்திரனுக்கும், குருவுக்கும் நட்புத் தன்மையுண்டு. மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்வியைக் கொடுக்கும். இது 30.09.2004 முதல் 09.12. 2004வரை சந்திரன் சாரம். பிறகு செவ்வாய் சாரம் நன்மையாக இருக்க முடியாது.

### கடகம்

உங்கள் கடக ராசிக்கு அதிபதியாக இருப்பவன் சந்திரன். இந்தச் சந்திரனுக்கு நட்புக் கிரகமாக இருப்பவன் குரு. உங்கள் கடக ராசி வீட்டில் குருவுக்கு உச்சபலன் உண்டு. எனவே மற்ற ராசிகளை விட உங்கள் கடக ராசிக்கும் குருவுக்கும் தனியொரு தன்மை உண்டு. ஏன் ஒரு பெரிய கதையே உண்டு. உங்கள் ராசியிலிருந்து 6-9க்கும் உரியவன் குரு. அதாவது 6வது அதிபதியாக இருந்தாலும், 9க்குரிய செல்வத்தை கொடுக்கத்தக்கவன் இந்தக் குரு. எனவே உங்களுக்கு இந்த குருப் பெயர்ச்சி மிக மிக முக்கியமாகும். இது ஸ்தான பலன். குரு மறைந்ததால் சுப பலன்கள் உங்களுக்கு குறைந்து விட்டன. திருமண தாமதம், குழந்தை பேறு பாதிப்பு, வழக்கு தள்ளிப்போதல் போன்றவையுண்டாகும். இவை பொதுவான குருப்பெயர்ச்சிப் பலன்கள்.

சார அடிப்படையில், ஆரம்பத்தில் உத்தரம் நட்சத்திரம் 2வது பாதத்தில் சென்ற குரு. 30.09.2004 வரை சூரியன் சாரத்திலும், பிறகு 09.12.2004 வரை சந்திரன் சார எல்லையான அத்தம் நட்சத்திரத்தில் செல்லும் குரு. பின் 15.09.2005 வரை செவ்வாய் சாரத்திலும், வக்ரம் பெற்று நிவர்த்தியாவதால் இந்த மூன்று கிரங்களின் சார எல்லைகளும் உங்களுக்கு அனுகூல எல்லைகளாக இருப்பதால் மூன்றில் சென்ற குரு என்றாலும் இந்த குருப் பெயர்ச்சி உங்களுக்கு பல வழிகளில் நன்மைகளைச் செய்யும் என நம்பலாம். எனவே இந்தக் குருப் பெயர்ச்சி பாதகமானதல்ல.

### சிங்கம்

உங்கள் ராசிக்கு குரு நட்புடையவன் தான். 5-8 ஆகிய இல்லங்களுக்குரியவன். 5க்குரியவன் என்று பார்க்கும்போது உங்களுக்கு குரு நன்மைக்குரியவன். 8க்குரியவன் என்று பார்க்கும்போது தீயவன். ஆகவே நன்மை, தீமை இந்த இருவழி பலன்களையும் செய்யக்கூடியவன் தான் குரு. இப்போது உங்கள் 2வது வீடான தனம், குடும்ப ஸ்தானத்துக்கு பொதுவாக நன்மைதான் என்பது சாஸ்திர விதி. ஆனால் அதே சாஸ்திரவழி கூறுவதென்ன. ஸ்தான பலம் சரிவரா விட்டால் சார பலத்தைப் பாருங்கள் என்பதுதான். ஆரம்பம் உத்தரம் நட்சத்திரம் 2வது பாதத்தில் செல்லும் குரு. உத்தரம் என்பது சூரியனின் நட்சத்திரம். உங்கள் சிம்ம ராசி வீடு சூரியனின் சொந்த ராசி. எனவே ஆரம்பம் 19.08.2004 முதல் 30.09.2004 வரை சூரியன் சார குரு சிறப்பான பலவழி நன்மைகளையும் செய்யக் கூடியவனாகும். பிறகு சந்திரன் சாரம் உங்களுக்கு நன்மையில்லை. காரணம் சந்திரன் உங்கள் வீட்டுக்கு விரய அதிபதி என்பதுதான்.

இந்த சந்திரன் சாரம் என்பது 30.09.2004 முதல் 09.12.2004 வரை. இது உங்களுக்கு நஷ்டத்தை உண்டாக்கும் காலம். பின் 09.12.2004 முதல் 15.09.2005வரையில் சித்திரை நட்சத்திரம் செவ்வாய் சாரத்தில் செல்லும் குரு. செவ்வாய் உங்களுக்கு நல்லவன் என்பதால் வக்கிரமாக இருக்கும் காலங்களிலும் நன்மைகளை செய்யக்கூடியவனே. வீடு, பூமிப்பொருள் நன்மை, விவசாயம் செய்பவர்களுக்கு தனி வகையினால் ஆதாயம், பொலிஸ் ராணுவத் துறையினருக்கு பெரிய முன்னேற்றமும் உண்டாக்கும். இந்தச் செவ்வாய் சாரக் குருவால் புத்திர, புத்திரியர்கள் கல்வி, குடும்ப முன்னேற்றம் இருக்கும்.

### கன்னி

இப்போது குரு கன்னி ராசிக்கு வந்திருக்கிறான். உங்கள் ராசி கன்னி ராசியாக இருப்பதால் ஜென்மத்துக் குரு என்னும் வார்த்தைதான் சரியானது. ஜென்மத்துக் குருவைப் பற்றி பலவகையான உதாரணத்தோடு கெடுதல் பலன்கள் கூறப்பட்டிருக்கின்றன. இந்தக் குரு ஜென்மத்தில் செல்லும் காலம் ஒரு வருடம். இக்காலங்களில் செல்லும் கிரக சார பலன்களால் மாற்றமும் இருக்கக்கூடும் என்பதையும் சிந்திக்கவேண்டும்..

ஆரம்பத்தில் 19.08.2004 முதல் 30.09.2004 வரை உத்தரம் நட்சத்திரம் சூரியன் சார எல்லையில் செல்லும் குரு. சூரியன் உங்கள் கன்னி ராசிக்கு விரயாதிபதி என்பதால் நன்மையில்லை. ஜென்மத்துக் குரு இந்த வகையில் கெட்டவன்தான். பிறகு அத்தம் நட்சத்திரம் சந்திரன் சார எல்லையில் செல்லும் குரு. இதனால் ஜென்மத்து இலாப இல்லத்துக்குரிய பலன்களே நடக்கும். இது 30.09.2004 முதல் 09.12.2004 வரையில் உள்ள காலம் ஜென்மத்துக் குருவாக இருந்தபோதும் கூடியவனே. தொழில் வழி இலாபம், மருந்து, நீர் போன்ற திரவப் பொருட்கள் மூலம் ஆதாயத்தைக் கொடுக்கும். சிலருக்கு நீண்ட அயல் நாட்டுப்பிரயாணத்தையும் உண்டாக்கும்.

மூன்றாம் காலம் 09.12.2004 முதல் 15.09.2005 வரை சித்திரை நட்சத்திரம் செவ்வாய் சாரத்தில் செல்லும் காலம். இதில் வக்ரகாலமும் அடங்கும். செவ்வாய் உங்கள் கன்னிராசிக்கு 3-8க்கு உரியவன். இந்த எல்லையில் செல்லும் குரு கெடுதல் பலன்களையே செய்யக்கூடியவன். இது தான் ஜென்மத்துக் குருவின் தீய பலன்களைச் செய்யக்கூடியது. விபத்து, அடிபடுதல் சிகிச்சைச் செலவுகள் போன்றவற்றைச் செய்யக்கூடியது.

### துலாம்

உங்கள் துலாம் ராசிக்கு சுக்கிரன் ஆதிக்க கிரகம். குரு முழு பகைக்கோள் என்பது சாஸ்திர விதி. உங்கள் ராசிக்கு 3-6க்கு உரியவன் குரு. இப்போது குரு வந்திருக்கும் ராசி12. (விரய ராசி 3-6 என்பதும் மறைவு ராசிகள்தான்). எனவே மறைவு ராசிகளுக்கு உரியவன்தான் இப்போது மறைவு இல்லத்திற்கு வந்திருக்கிறான். எனவே இந்தக் குரு மாற்றத்தைப் பற்றி நீங்கள் கவலைப் படவேண்டியதில்லை. இதுதான் உண்மையான நிலை. குரு கோள்சாரத்தில் கெட்டுவிட்டான் என்ற கவலை உங்களுக்கு வேண்டாம். உங்கள் ராசிக்கு சனியும் சுக்கிரனும் மட்டும் கெட்டுப்போகக்கூடாது. காரணம் அவர்கள் உங்களுக்கு அதிஷ்டக் கிரகங்கள்.

அடுத்தபடியாக நாம் சார பலத்தைப் பார்க்கும்போது 19.08.2004 முதல் 30.09.2004 வரை உத்தர நட்சத்திர சாரத்தில் செல்லும். குரு எழுத்துத்துறையில் உள்ளவர்களுக்கு எழுத்துமூலமான ஆதாயத்தையும், அரசாங்க மூலமாக நன்மைகளையும் செய்யும் காலம். சிலருக்கு தந்தை வழி சொத்து வரவையும் செய்யும். இரசாயனப் பொருட்கள் மூலம் தொழில் செய்பவர்களுக்கு திடீரென உயர்வை உண்டாக்கும். 30.09.2004 முதல் 09.12.2004 வரை அத்தம் நட்சத்திரம் சந்திரன் சார எல்லையில் செல்லும் குரு திடீரென அளவற்ற செல்வத்தை உண்டாக்கி விடும். இது சிலருக்கு ஏற்றுமதி மூலமாகவும் உண்டாகக் கூடும். மேலும் 09.12.2004 முதல் 15.09.2005 வரையில் சித்திரை நட்சத்திரம் செவ்வாய் சார எல்லையிலேயே வக்ரமாகி, வக்ர நிவர்த்தியும் பெற்றுவிடுகிறது இந்தக் குரு. இக்காலம் உங்களுக்கு பலவித பிரச்சினைகளை உருவாக்கும்.

### விருச்சிகம்

இந்த விருச்சிக ராசிக்கு ஆட்சிக் கிரகம் செவ்வாய். குரு 2-5 ஆகிய இல்லங்களுக்குரிய முழு சுபக்கிரகம். எப்படிப் பார்த்தாலும் இந்தக் குரு உங்களுக்கு நல்லவனே. இப்போது உங்கள் ராசிக்கு இலாப இல்லம் வந்த குரு, எண் ஸ்தானத்தின் தன்மையின் படி இந்தக் குரு முழு சுப பலன்களையும் செய்யத்தக்கவனே. 2க்குரியன் என்று பார்க்கும் போது ஆண், பெண் எவராக இருந்தாலும் குடும்பத்தை உண்டாக்குவான். திருமணத்தையும் செய்து வைப்பான். உத்தியோகம் இல்லாதவர்களுக்கு நல்ல உத்தியோகத்தைக் கொடுப்பான். சிலர் அயல்நாடு சென்று உத்தியோகம் பெறுவதும் குறிப்பிடத்தக்க நல்ல அம்சமாகும். 5க்குரியவன் என்று பார்க்கும்போது பதவி உயர்வைக் கொடுப்பான் இந்த இலாப இல்லத்துக் குரு. அரசியல்வாதிகளுக்கு கௌரவப் பதவி வந்து சேரும்.

அடுத்தபடியாக குரு சார எல்லையில் நல்லவனா? கெட்டவனா? என்பதைப் பார்க்கவேண்டும். ஆரம்பத்தில் உத்தரம் நட்சத்திரம் சூரியன் சாரத்தில் செல்லும் குரு. சூரியன் உங்கள் 11வது ராசிக்கு அதிபதி. பாதக அதிபதிதான் என்றாலும் பாதிப்புச் செய்வானா என்பது ஒரு கேள்வி. 19.08.2004 முதல் 30.09.2004 வரை சூரியன் சாரத்திலுள்ள குரு. உத்தியோகத்தில் உள்ளவர்களையும், அரசாங்க உததியோகத்திலுள்ளவர்களையும் பாதிக்க வாய்ப்புண்டு. உங்கள் கௌரவத்தைக் குறைக்க சில தொழில் பாதிப்பும் உண்டாகும். 30.09.2004 முதல் 09.12.2004வரைஅத்தம் நட்சததிரம் சந்திரன் குரு. சிலவகையில் சிறப்பு நன்மைகள் இருக்கின்றன. 09.12.2004முதல் 15.092005 வரை செவ்வாய் சாரத்தில் வக்ரம் பெற்று பின் வக்ரம் நிவர்த்தியாகிறபடியினால் எந்நேரமும் நன்மைப் பலன்களாகவே இருக்கும்.

### தனுசு

உங்கள் தனுசு ராசிக்கு ஆட்சிக்கிரகம் குரு. இந்த குரு வருடத்திற்கு ஒருமுறை ஒரு ராசியைக் கடந்து மீண்டும் இந்த ராசிக்கு வந்துசேர 11 வருடங்களாகின்றன. ஆக 12 ராசியிலும் செல்லும் காலம் 12 வருடங்கள். இதற்குப் பெயர்தான் ஒரு மாமாங்கம் என்பது. குரு உங்கள் ராசிக்கு 10வது ராசியில் வந்திருக்கிறான். இது தசம கேந்திரம். இதை ஜீவன் இல்லம் என்றும் அழைக்கலாம். இந்தக் குருப் பெயர்ச்சி உங்களுக்கு நன்மைகளையே செய்யும் என்பதில் சந்தேகமில்லை. உங்கள் தொழில் வகை அல்லது ஜீவன்வகையில் பெரிய மாற்றத்தைச் செய்யக் கூடியது இந்தக் குரு. இது ஸ்தானத்தின் பலன். சாரத்தைப் பார்க்கும் போது ஆரம்பத்தில் உத்தர நட்சத்திரம் சூரியன் சார குரு. சூரியன் உங்களுக்கு பாக்கிய அதிபதி. செல்வத்தைக் கொடுத்து கௌரவத்தை உயர்த்தக்கூடியவன். இது சிறப்பே. 19.08.2004 முதல் 30.09 .2004 வரை சூரியன் சார குருதான்.

(18ஆம் பக்கம் பார்க்க.....)

# ஒலிம்பிக் 2004

2004ஒலிம்பிக் போட்டிகள் தனது தாயக மண்ணில் 108 வருடங்களின் பின் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.




**2004ஆம் ஆண்டு ஏதென்ஸில் நடைபெறும் 28வது ஒலிம்பிக் போட்டியில் பயன்படுத்தப்படும் MASCOTS**

ஒலிம்பிக் வரலாற்றில் இருபத்தெட்டாவது போட்டியானது இம்முறை கிரேக்கத் தலைநகர் ஏதென்ஸில், 1896 ஆம் ஆண்டு முதலாவது ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற இடத்திலேயே நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ATHENS - 2004 ஒரு பார்வை

இம்முறை ஏதென்ஸில் நடைபெற்று வருகின்ற 28வது ஒலிம்பிக் போட்டி பற்றிய முக்கிய சில தகவல்களைப் பார்ப்போமானால்...


* 16 நாட்கள் நடைபெறவுள்ள இவ் ஒலிம்பக் போட்டியில் 301 பதக்கங்களை வழங்கக்கூடிய போட்டி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

* 28 போட்டிநிகழ்வுகள் 38 இடங்களில் நடைபெறவுள்ளன.

* இவ் ஒலிம்பிக் போட்டியில் 201 நாடுகளைச் சேர்ந்த 10,500 போட்டியாளர்களும், ஒவ்வொரு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக 5,500 நிர்வாகிகளும் கலந்து கொள்கின்றனர்.

* தொடர்பாடலைப் பிரதிநிதித்துவப்படுத்தும், முகமாக 21,500 பேர் பங்குபற்றுகின்றனர். இதில் 16,000 ஒலிபரப்பாளர்களும், 5,500 பத்திரிகையாளர்களும் அடங்குவர்.

* இம்முறை நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியின் பாதுகாப்பை பொறுத்தவரை 45,000 அதிகாரிகள் பங்குகொள்கின்றனர். இதில் 25,000 பொலிஸாரும், 7,000 இராணுவத்தினரும், 3,000 கடற்துறை பாதுகாப்புப் பிரிவினரும், 1,500 தீயணைப்புப் படையினரும், 3,500 தனியார் பாதுகாப்புப் பிரிவினரும், 5,000 பயிற்சி பெற்ற தொண்டர் ஊழியர்களும் அடங்குவர்.




## MASCOTS (அதிஷ்டத்தைக் கொண்டுவரும் பொருள்)

28வது ஒலிம்பிக் போட்டிக்காக அறிமுகப்படுத்தப்பட்ட MASCOTனை பார்க்கும் போது, அது கிறீஸ் தெய்வங்களான சகோதரங்களைக் குறிக்கின்றது. இதற்கு ATHENA, PHEVOS எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனைவிட ஒலிம்பிக்கின் கடவுளாகவும் இவைகள் கருதப்படுகின்றன.

**1896ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் 2004ஆம் ஆண்டு ஏதென்ஸில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 28வது ஒலிம்பிக் போட்டியை ஏதென்ஸில் நடாத்துவது தொடர்பாக 1997ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி சுவிஸ்லாந்தில் நடைபெற்ற சாவதேச ஒலிம்பிக் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.**

**இறுதி நேரத்தில் ATHENS, BUENOS AIRES, CAPE TOWN, ROME, STOCKHOLM ஆகிய 5 நகரங்கள் தெரிவு செய்யப்பட்டபோதும் இறுதியாக ATHENS நகரிலேயே 28வது ஒலிம்பிக் வோட்டியை நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.**

மேலும், PHEVOS ஐப் பொறுத்தவரை வெளிச்சத்துக்கும், இசைக்குமான கடவுளாகக் கருதப்படுகின்றது. அத்துடன் இதனை அபலோ (APOLLO) எனவும் அழைக்கின்றனர்.

# தாயகம் நோக்கி...

## OLYMPIC TORCH ஒலிம்பிக் விளக்கு

ஏதென்ஸில் நடைபெற்று வருகின்ற 28வது ஒலிம்பிக் போட்டிகளின்போது ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட விளக்கானது ஒலிவ் இலை (OLIVE LEAF) போன்ற சாயலை உடையது.

செங்குத்தாக வைத்துப் பார்க்கும்போது மேற்பக்கம் காணப்படும் வளைவானது ஒலிம்பிக் தீபம் எல்லா நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டமையை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

எல்லா நாடுகளுக்கும் கொண்டுசெல்லப்பட்ட ஒலிம்பிக் தீபமானது ஏதென்ஸ் மைதானத்தை வந்தடைந்தது.

2004ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில ஒலிம்பிக் தீபம் ஏற்றிவைக்கப்பட்டது.

இந்தத் தீபமானது செங்குத்தாக 68cm நீளமும், 700g நிறையும் கொண்டதாகும்.

## PICTOGRAMS

**ஒலிம்பிக் போட்டிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புகைப்படங்கள்**


ஒலிம்பிக் போட்டிகள்



**2004ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்கான பதக்கம்.**

1896ஆம் ஆண்டு ஆரம்பமானதிலிருந்து இதுவரை இடம்பெறாத வகையில் இந்தப் புகைப்படங்களை ஏதென்ஸ் நகர புகைப்பட வாசிகள் வடிவமைத்துள்ளனர்.

ஒலிம்பிக் போட்டிகளில் நடைபெறும் ஒவவொரு போட்டி நிகழ்ச்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக காட்டூன் வடிவில் இது



**முதன்முறையாக இம்முறை ஒலிம்பிக் போட்டிக்காக அறிமுகப்படுத்தப்பட்ட காட்டூன் வடிவிலான PICTOGRAMS**

வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்படியாக இவ் ஒலிம்பிக் போட்டிக்காக 35 PICTOGRAMS வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பதக்கங்கள் (MEDALS)

இம்முறை ஒலிம்பிக் போட்டிக்காக வடிவமைக்கப்பட்டுள்ள பதக்கங்களைப் பார்ப்போமானால்...

அப்பதக்கங்களில் கிறீஸ் நாட்டு வரலாற்றுச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும், பதக்கத்தில் ஒலிம்பிக் தேவதை தானிய இலையையும், வெற்றிக்கொடியையும் ஏந்தியபடி காணப்படுகின்றது. அத்துடன் இந்தத் தேவதை 1896ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற மைதானத்தின் மேலே உள்ளது போல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனை வடிவமைத்தவர் ELENA VOTSI ஆவார். இவ ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்குவதற்காக 1,130 தங்கப்பதக்கங்களும், 1,130 வெள்ளிப்பதக்கங்களும், 1,150 வெண்கலப்பதக்கங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வியக்கவைத்த ஆரம்ப நிகழ்வு

நோயல்



டிரம் அடித்துவரும் இசைக் கலைஞர்கள்.

உலகையே வியக்க வைக்கும் வகையில் 28வது ஒலிம்பிக் போடடிகள் கடந்த 13ஆம் திகதி கோலாகலமாக ஆரம்பமாகின.

உலக மக்களின் மனங்களை ஈர்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலை நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளன.

ஏதென்ஸில் இம்முறை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுமா? என்ற சந்தேகம் நிலவிய போதும், அநதச் சந்தேகத்தைப் போக்கும்வகையில் அதன் ஆரம்பநிகழ்வுகள் நடைபெற்றன.

இலங்கை நேரப்படி நள்ளிரவு 11.45 மணிக்கு ஆரம்பமான கவின்மிகு, வண்ணமிகு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. தொடர்ந்து 3 மணிநேரம் நடைபெற்ற இந்நிகழ்வில் முதலில் 400 கலைஞர்கள் ரம்களை இதயம் துடிக்கும் ஓசையை இசைத்துக்கொண்டு ஆரம்பநிகழ்வு நடைபெற்ற பிரதான மைதானத்திற்கு அணிவகுத்து வந்தனர்.

**ஒலிம்பிக் அணிவகுப்பில் மலேசிய அணி சார்பாக தேசியக் கொடியை ஏந்தி வந்த 14 வயதான பிரயன் நிக்ஸன் லோமாஸே போட்டியில் பங்கேற்போரில் வயதில் குறைந்தவராவார்.**

தொடக்க விழா நடைபெற்ற மைதானத்தில் நீர் நிரப்பப்பட்டு தற்காலிக ஏரிபோல் உருவாக்கப் பட்டிருந்தது.


ஒரு கட்டத்தில் விண்கல் விழுவதுபோல் மைதானத்தின் உயரத்திலிருந்து வந்த லேசர் கதிரிலான தீப்பந்தம் அத் தண்ணீரில் விழுந்தது. அது விழுந்ததும், ஒலிம்பிக் சின்



தேசியக் கொடியுடன் வலம்வரும் சிறுவன்.

னத்தை நினைவுபடுத்தும் 5 வளையங்களும் நீரின் மேல் தீப்பற்றிக் கொள்ள மைதானமே ஜொலித்தது.

அதன்பின்னர் தற்காலிக ஏரியில் காகிதக் கப்பல் ஒன்று வர அதில் இருந்து ஒரு சிறுவன் கிரீஸ் நாட்



**மைதானத்தில் வலம்வரும் கிறீஸ் நாட்டுப் பிரதமர், ஒலிம்பிக் குழுத் தலைவி, சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர், கிறீஸ் நாட்டுக் கொடியுடன் சிறுவன்.**

டுத் தேசியக்கொடியுடன் வந்து கிரீஸ் நாட்டு ஒலிம்பிக் குழுத் தலைவி, கிரீஸ் நாட்டு அதிபர், மற்றும் சர்வதேச ஒலிம்பிக் குழுத்தலைவர் ஆகியோரை வரவேற்றமை ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது.

பின்னர் மூவாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த கிரேக்க நாகரிகம், கிரேக்கர்கள் உலகத்திற்கு அறிமுகப்படுத்திய உடற்கூறு விஞ்ஞானம், கணித சாஸ்திரம் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் காட்சிகளும், புராதன நகரமான ஒலிம்பியா முதல் இன்றைய ஏதென்ஸ் வரையான ஒலிம்பிக் போட்டிகளின் சித்தரிப்புக்களும், கிரேகக வரலாறரை நவன உத்திகளுடன் நடித்துக் காட்டியமையும் அனைவரையும் பரவசப் படுத்தின.

அதன்பிறகு 28வது ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் 202 நாடுகளைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் தத்தமது தேசியக் கொடியுடன் அணிவகுத்து வந்தனர். கிரீக் மொழியின் எழுத்துக்களின் அகர வரிசைப்படி அணிவகுப்பு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வணிவகுப்பில் போட்டியை நடாத்தும் நாடு முன்னால் வரவேண்டும் ஆனால் கிரேக்கம் அணிவகுப்பில் இறுதியாக வந்தது. இறுதியாக வந்தபோதும் வரவேற்புக் கோஷம் விண்ணை எட்டியது. இந்த அணி வரிசையில் 179ஆவதாக இலங்கை வந்தது. இலங்கை அணியின் ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க தேசியக் கொடி ஏந்தி வர ஏனையோர் அணிவகுத்து வந்தனர். இவர்கள் வரும்போது விழாவில் கலந்து கொண்ட பிரத






மர் மஹிந்த ராஜபக்ஸ எழுந்து நின்று கைதட்டி அவர்களை உற்சாகப்படுத்தினார்.

தொடக்க விழாவில் 8 ஆயிரம் கலைஞர்கள் கிரேக்க கலாசாரத்தை உள்ளடக்கிய கலை நிகழ்சசிகளை நிகழ்த்தினர்.

'ஓமடா எடா .'.பஸ்' எனும் நடனக்குழுவின் நிர்வாகி டிமிட்ரிஸ் பாப்பைளான்னெலி தொடக்கம் மற்றும் நிறைவு விழா நிகழ்ச்சிகளின் இயக்குநராக நியமிக்கப் பட்டிருந்தார்.

இதேவேளை நிகழ்ச்சிகளின் இடையிடையே பிரமிப்பூட்டும் கண்கவர் வான வேடிக்கைகளும் இடம்பெற்றன.

(18ஆம் பக்கம் பார்க்க...)

## வியாசரே! பட்டதாரிகளின் இலட்சியம் நிறைவேறுமா? அல்லது நிராசையாக்கப்படுமா?

*க.யாழினி கொக்குவில்.*

வியா!

நாம் குரங்கிலிருந்து தோன்றியவர்களென்றால் ஏன் எங்களுக்கு வால் முளைப்பதில்லை?



**இறைவா! எம்மை வேறுபடுத்துவதற்காக மனிதனுக்கு வாலைக் கொடுக்காதே என்று குரங்குகள் வேண்டிக் கொண்டனவாம்.**

*S.சுதன் யாழ்ப்பாணம்.*

டியர் வியா!

கட்டாயத்தின் பெயரில் ஒரு மனசைக்கொன்று விட்டு ஒரு குடும்பத்தை வாழவைப்பது நியாயமா? தியாகமா?

**இதற்குப் பதிலளிக்க, இது எங்கே? எப்போது? எவ்விடத்தில்? என்ன சந்தர்ப்பத்தில் நடந்ததென்பதை தெளிவாகக் கூறவேண்டும் சுதன்.**

*ஜொய்ஸி குருநகர்.*

வியா!

நிறுவனங்களில் வேலை செய்யும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என்ன வித்தியாசம்?

**பெண்களுக்கு பிரசவ லீவு உண்டு. ஆண்களுக்கு அதுக்கான லீவு இல்லையே.**

*நாகமகேந்திரலிங்கம் கோப்பாய்.*

வியா!

நல்லூர்த் திருவிழாவில் இம்முறை தமிழர் கலாசாரத்தை வெளிநாட்டுக்குச் சென்ற நம்மவர் விடுமுறையில் இங்கு வந்தால் .பேணுவார்களா?

**அவர்கள் பேணுகிறார்களோ! இல்லையோ! இஞ்ச இருக்கிறதுகள் வாலுகள், கத்தியள், சைக்கிள் செயினுகளோட திரியாவிட்டால் போதும்.**

## வியா அண்ணே! நீங்க ஒரு விஞ்ஞானியானால் எதை முதலில் கண்டுபிடிப்பீர்கள்?

*S.விதுஷன் வண்ணையூர்.*

வியா மாமா!

நீங்கள் கேள்விகளுக்குப் பதில் எழுதுவது எதறகாக? எங்கள் திறமையைப் புரிந்துகொள்ளவா? உங்கள் திறமையை எங்களுக்கு காட்டவா?

**இரண்டிற்குமாக என்று எடுத்துக் கொள்ளுங்களேன்.**

*இ.கவிதாரணி வவுனியா.*

வியா அங்கிள்!

வாழ்க்கை அமைதியாக இருக்க என்ன செய்ய வேண்டும்?



**சன்னியாசம் கொள்ள வேண்டும்.**

*V.இளங்கோ கோப்பாய்.*

வியா அண்ணே!

நீங்க ஒரு விஞ்ஞானியானால் எதை முதலில் கண்டுபிடிப்பீர்கள்?

**மரணித்தவரை உயிர்ப்பிக்கும் மருந்தைக் கண்டு பிடிப்பேன்.**

*M.லக்ஷி உடுவில்.*

ஹாய் வியா!

மனசிருந்தும் மனச்சாட்சி இல்லாதவர்களை என்ன செய்யலாம்? அவர்களுடன் எப்படிப் பழக வேண்டும்?

**லக்ஷி! அப்படியான வர்களோடு பழகுவதையே விட்டுவிடும்.**

# வியாசர் பதில்கள்

*N.சித்தார்த்தன் சித்தன்கேணி.*

வியாசரே!

பட்டதாரிகளின் இலட்சியம் நிறைவேறுமா? அல்லது நிராசையாக்கப்படுமா?

**தம்பி சித்தார்த்தா! அரசே ஆட்டங்காணுதையா.**

*ஜெ.சுபாஷினி நல்லூர்.*

வியாச்ரே!

நண்பன் பகைவனாவது எப்போது?

**தன் நட்புக்குப் பங்கம் வரும்போது.**

*ச.பிரபாகர் மல்லாவி.*

வியாசர்!

'சர்வாதிகாரி' ஆண்பாலா? பெண்பாலா?

**ஒன்றன்பால்.**

*கெ.கார்த்திகா வரணி.*

வியா!

அடக்கம் என்பது பெண்களுக்கு மட்டும்தானா...?



**பெண்களை அடக்க வேண்டிய ஆண்களுக்கு அது ஆகாது கார்த்திகா.**

*தே.கௌசிகன் நயினாதீவு.*

வியா அவர்களே!

தற்பெருமை பேசுபவர்களை எப்படித் திருத்துவது?

**தான் தற்பெருமை பேசுகிறேன் என்பதை உரியவருக்கு உணரவைக்க வேண்டும்.**

*சொ.நித்தியா கொக்குவில்.*

வியாசரே!

ஊர்சுற்றும் வாலிபர்களைத் திருத்த வழி ஒன்று கூறுங்களேன்?

**கட்டிப்போடுவதுதான் ஒரேவழி (கலியாணத்தைச் சொன்னேன்).**

*ம.நர்மதா உடுவில்.*

வியா!

சில கன்னியர்களின் காதல், கவலைக் கடலாகவும், சோகப்புயலாகவும் மையம் கொள்வதேன்?

**தாழ் அமுக்கம்தான் காரணம்.**

*A.அஜிதசஞ்ஜீவ் வில்வநதெரு.*

வியாசரே!

நண்பனுக்கு துரோகமிழைப்பவர்கள் பற்றி உமது கருத்து என்ன?

**' சஞ்சீவ்! காதல் பிரச்சினையேதும் வந்துவிட்டதா என்ன?**

*இ.ராகவி மல்லாவி.*

வியாசரே!

புகுந்த வீட்டில் எப்படி நடந்கொள்ள வேண்டும்?

**ராகவி! இந்தக் கேள்வியை யாரிடம் கேட்கலாமென்று நானும் நினைத்தேன்.**

*இ.சுகன்யா கோண்டாவில்.*

டியர் வியா!

உலகிலே அதிகம் உபயோகப்படும் ஆங்கில வார்த்தை என்ன?

**சொறி.**

*நாகமகேந்திரலிங்கம் கோப்பாய்.*

வியா அவர்களே!

தாய்ப்பால் குடித்து வளர்ந்த பிள்ளைக்கும், மாப்பால் குடித்து வளர்ந்த பிள்ளைக்கும் உள்ள வேறுபாடு என்ன?



**மாப்பால் குடித்த பளைகள் குறுகிய காலத்தில் முதிர்ச்சியடையுமென ஆய்வுகள் கூறுகின்றன்.**

## டியர் வியா! உலகிலே அதிகம் உபயோகப் படும் ஆங்கில வார்த்தை என்ன?

# வாசகர் பதில்கள் இல - 22

## 'சத்தியமா சொல்றேன்' என்னும் போது, ஏன் இதயத்தில் கை வைத்துக் கொள்கிறோம்?

நாம் சொல்லும் மனச்சாட்சிக்கு விரோதமான (பொய்) சத்தியம் இதயத்தைத் தாக்காமல் இருப்பதற்காகவே இதயத்தில் கை வைத்துக்கொள்கிறோம்.

கந்த. ஞானமுத்து, கைதடி.

**நாங்கள் சொல்லும் விடயம் சரி என்பதை ஆணித்தரமாக உறுதிப்படுத்துவதற்காக எமது இதயத்தைத் தொட்டுக் கொள்கிறோம். இதன் காரணம் நாங்கள் சொல்வது பொய் அல்ல உண்மை என்பதை உறுதிப் படுத்துகின்றது.**

***திருமதி செ.பாக்கியநாதன், வட்டுக்கோட்டை.***

புரியவில்லையா விதுஷன், பொய்ச் சத்தியம் செய்தாலும், இதயத்துடிப்பு நிற்காது என்ற நம்பிக்கையில் தான்!

M.இந்திரகலா, யோகபுரம்.

உண்மையைச் சொல்லுபோது அதைக் கேட்பவர் எங்கே நம்பாமல் போய் விடுவாரோ என்ற படட்டத்தில் உணர்ச்சிவசப்படுவதனாலேயே இதயத்தில் கை வைத்துக் கொள்கிறோம்.

P.பவானி, கொக்குவில்.

**தரமான பதில் தந்த முகவரிகள் சில...**

- சி.கோனேஸ்வரி, யாழ்ப்பாணம்.
- A.கலைச்செல்வன், சாவகச்சேரி.
- து.நக்கீரன், மல்லாகம்.
- செ.தர்ஷன், யாழ்.
- வி.தர்மராசா, கோண்டாவில்.

இதுகூடத் தெரியாதா?

நாம் சொல்லும் (பொய்) சத்தியத்தை மற்றவர் நம்புவதற்காக.

லோ.விஜி, வல்வெட்டி.

**மனச்சாட்சி என்கிற மகத்தான சக்திக்குப் பயந்து தான் இதயத்தில கைவைத்து சத்தியம் செய்கறார்கள் விதுஷன்.**

***ஸ்ரீ.ரவீந்திரகலா, உடுவில்.***

**நண்பா விதுஷன்! இதழ்கள் பொய் சொல்லும் இதயம் மெய் சொல்லும் தெரியாதா? உண்மை தெரியாதா?**

**V.ஜெயபாலன், இணுவில்.**

# வாசகர் பதில் இல - 24

## யாராலும் எடுக்கவோ, கொடுக்கவோ முடியாதது எது?

இக்கேள்வியை அனுப்பிய சங்குநாத வாசகன் A.அனிஸ்ரன், குருநகர்.

உங்கள் பதில்கள் எமக்குக் கிடைக்கவேண்டிய இறுதித் திகதி 28 - 08 - 2004.

உங்கள் பதில்கள் வந்துசேரவேண்டிய முகவரி:-

'வாசகர் பதில்'
சங்குநாதம்
இல- 15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# கவிதை பாடும் வெண்ணிலா

''அன்று வந்ததும் இதே நிலா
இன்று வந்ததும் அதே நிலாதான்''

ஆனால், இந்தக் கவிஞர்கள் இந்த நிலாவை எத்தனை எத்தனையோ விதமாகப் பார்க்கின்றார்கள்; பார்த்துப் பார்த்து ரசிக்கின்றார்கள்; ரசித்து மகிழ்கின்றார்கள். தாமும் பரவசமடைந்து நம்மையும் பரவசமடையச் செய்கின்றார்கள்.

தங்க நிலா, இனிய பொன் நிலா, துள்ளிவரும் வெள்ளிநிலா. பவளநிலா, பால்நிலா, தேன்நிலா, இளைய நிலா, பருவநிலா, வண்ண நிலா, அமுதநிலா, அமுதைப் பொழியும் நிலா, இன்பநிலா, காதல் நிலா, மஞ்சள்நிலா, வெள்ளை நிலா, பொட்டு வைத்த வட்ட நிலா, பட்டு நிலா, புத்தம் புதுநிலா, பொங்கிவரும் புது நிலா, கலை அழகு நிலா, கோல நிலா, குளிர்நிலா, தண்ணொளி வெண்ணிலா...

## 'நிலவு' பற்றிய தொகுப்பு

இப்படி எத்தனையோ விதமாக இந்த நிலவை வர்ணிக்கும் கவிஞர்கள் எண்ணிலாக் கற்பனை கொண்ட இதனுடன் மௌன மொழி பேசி, பாடி, புன்னகை புரிந்து சல்லாபித்து, வேடிக்கை செய்து விளையாடி மகிழ்கின்றார்கள்.

''வெண்ணிலா வானில் வரும் வேளையில்
நான் விழித்திருந்தேன்.
எண்ணிலாக் கனவுகளில் எதை எதையோ
நினைத்திருந்தேன்''

என்று ஒரு கவிஞன் எதை எதையோ சொல்ல நினைக்க, மற்றவர் -

''பிரேமை வெண்ணிலா ஜோதி வீச
என் உள்ளம் மகிழ்ந்திருந்தேன''

என்கிறார்.

''வா வெண்ணிலா உன்னைத்தானே
வானம் தேடுதே.
மேலாடை மூடியே ஊர்கோலமாய்ப்
போவதேன்?''

என்றும்,

''வெண்ணிலவே தண்மதியே என்னுடனே
வாவா.
நிலவே நிலவே வா. வேறு துணையாருமில்லை விதி வழியே வந்தேன் நிலவே
நிலவே வா...''

என்றும்,

''அமுதைப் பொழியும் நிலவே நீ அருகில் வராததேனோ. அருகில் வராததேனோ...?

என்றும் சிலர் அழைப்பு விடுக்க,

''இன்பம் பொங்கும் வெண்ணிலா வீசுதே
என்னைக் கண்டு மௌனமொழி பேசுதே...''

என்றும்,

''வீசும் தென்றலிலே கதை பேசும்
வெண் ணிலவே....''

என்றும் மௌனமொழி பேசுகிறார்கள் மற்றவர்கள்.

''வானிலிடத்தையெல்லாம் இந்த
வெண்ணிலா வந்து தழுவுது பார்...''

என்று காட்டும் பாரதியார்,

''வெள்ளை நிலாவிங்கு
வானத்தை மூடி
விரிந்து பொழிவது கண்டாய்...''

என்றும்,



''மெல்லிய மேகத்திரைக்குள்
மறைந்திடும் வெண்ணிலாவே உன்றன்
மேனியழகு மிகைபடக்
காணுது வெண்ணிலாவே...''

என்றும்,

''பொங்கிவரும் புது நிலவு''

என்றும் தமது பாட்டுத் திறத்தால் நிலவை அழகுறப்பார்க்கின்றார்.

''விண்ணோடும் முகிலோடும்
விளையாடும் வெண்ணிலவே.
கண்ணோடு கொஞ்சும் கலை அழகே....''

என நிலவின் கலையழகை ஒருவர் ரசிக்க,

''நிலவோடு வான் முகில் விளையாடுதே
அந்த நிலை கண்டு எனதுள்ளம் துணை
தேடுதே...''

என மற்றவர் துணை தேடுகின்றார்.

''மோகனப் புன்னகை வீசிடும் நிலவே
மேகத்திலே நீயும் மறையாதே. பாலுடன்
தேனுமே கலந்தது போலவே சாகசமே
நீயும் புரியாதே....''

என்றும்,

''புத்தம் புதுமலரே குறுநகை புரியும்
வெண் ணிலவே...''

''பூரண நிலவோ புன்னகைமலரோ...?''

என்றும் சிலர் வியக்க,

''பூரண நிலவின் தோரணம் ஏனோ
புன்னகை புரிகிறது - அது
காரணம் பாதி. காரியம் பாதி கதையாய்
வருகிறது...''

என்று கதையாய்த் தொடர்கிறார், கதையைத் தொடர்கிறார் மற்றவர். புன்னகையில் திருப்தியடையாதவர் வாய்விட்டுச் சிரிக்கவேண்டும் எனக் கேட்கிறார் அந்த நிலவை!

''வெள்ளரிக்காய் பிளந்தது போல்
வெண் ணிலவே சிரிக்காயோ...?''

என்பது அவரது விருப்பம்.

சிரிப்பை ரசிக்க விரும்பும் ரசிகர்கள் ஒருபுறமிருக்க நிலாவிடம் பாட்டைக் கேட்க விரும்புபவர்கள்-

''பாடு நிலாவே தேன் கவிதை பூமலர.
உன் பாடலை நான் கேட்கிறேன்.
பாமாலையாய் நான் கோர்க்கிறேன்...''

என்றும்,

''நிலவே நிலவே சரிகமபதநி பாடு.
என் கனவைத் திருடி பல்லவி சரியாய்
போடு...''

என்றும் பாட்டைக் கேட்டவர்கள் ஆடலை மறந்து விடுவார்களா?

''நிலவே நிலவே ஆட வா.
நீ என் ...டனே ஓடிவா...''

என்று ஒருவரும்,

''ஆடை கட்டி வந்த நிலவோ.
முகில் ஆடை கட்டி வந்த நிலவோ.
கண்ணில் மேடை கட்டி ஆடும் எழிலோ..?''

என்று மற்றவரும் லயிக்க,

''நிலவு ஒரு பெண்ணாகி உலவுகின்ற
அழகோ
நீர் அலைகள் இடம்மாறி நீந்துகின்ற
அழகோ........?''

என இன்னொருவரும் ரசிக்கின்றார்.

''கண் விழிக்கும் தாரகைகள்
வெண் ணிலாவே
உன்னைக் காவல்
காக்கும் தோழியரோ
வெண் ணிலாவே?
கன்னத்தில் காயமென்ன
வெண்ணிலவே? உன்
காதலன் தான் கிள்ளியதோ
வெண் ணிலாவே............?''

நிலாவுடன் வேடிக்கையாகப் பேசி மகிழ்வதில் இன்பம் காணும் கவிஞனின் கவிதை இது.

''முத்தமிழே. முழுநிலவே மோக வண்ணமே
முப்பொழுதும் எப்பொழுதும் தமது
சொந்தமே...''

**க.கணேசலிங்கம்**

என முழுநிலவுடன் சொந்தம் கொண்டாடும் கவிஞரும் உண்டு.

''நீலவான் ஆடைக்குள் உடல் மறைந்து.
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை!
கோலமுழுதும் காட்டிவிட்டால் காதற்
கொள்கையிலே இவ்வுலகம் சாமோ?
வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்க வெள்ளிப் பாற்குடமோ. அமுத
ஊற்றோ?
காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிளம்போ?''

பாரதிதாசன் அழகு ரசனையுடன் நிலாவை இவ்விதம் காண்கிறார், காட்டுகிறார்.

''இரவும் நிலவும் வளரட்டுமே - நம்
இனிமை நினைவுகள் தொடரட்டுமே...''

''சந்திரன் வருவது ஒளிதர - அது
தமிழுக்கு ஆயிரம் கவிதர...?''

நிலவே வா!

# நம்மாழ்வார் காட்டும் காதற் சித்திரங்கள்

நம்மாழ்வார் தம்மை நாயகியாக உருவகிக்கின்றார். எல்லாம் வல்ல திருமால் என்னும் பெருமானை உள்ளத்தில் உறைந்திருக்கும் காதலனாக உலகத்துக்கு உணர்த்துகின்றார்.

உண்மைக்காதலின் உன்னதத் தன்மையை உள்ளவாறு உரைக்கின்றார். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல் உள்ளுணர்வுகளை எல்லாம் தெள்ளுதமிழில் தெளிவாக உவமிக்கின்றார்.

அவரின் உடல், பொருள், ஆவி மூன்றும் ஆண்டவனுக்கே உரியனவாம். அரன் இல்லாத உலகம், உயிர் இல்லாத உடலாம். உயிர்ப்பிச்சை வேண்டி நாரையை, அன்னத்தை, அன்றில் பறவையை, குருவியை, கிளியை, பூவையை, பாவை உத்தமனிடம் தூது உரைக்க அனுப்புகின்றார்.

அன்னப்பறவைகளே! அண்ணலிடம் செல்லுங்கள்
அன்புக்காக ஏங்கும் அறிவிலியின் ஆற்றாமை
யைச் சொல்லுங்கள்
அன்றில் பறவைகளே அவரிடம் புறப்படுங்கள்
அபலையின் அவலத்தை அரனுக்குப் பகருங்கள்
குருவிகளே! கிருஷ்ணனிடம் ஓடுங்கள்
குலமகளைக் காத்தருளக் கூறுங்கள்
பூவைகளே நாயகனைப் பாருங்கள்
பாவையிங்கு ஏங்குவதைப் பாடுங்கள்

என்றெல்லாம் அரற்றுகின்றார்.

பறவைகளோடும், அஃறிணைப் பொருட்களோடும் பலவாறு அளவளாவுகின்றார்.

அன்றில் பறவையே! அல்லும் பகலும் ஆண்டவனின் துளசி மாலையை வேண்டியா அழுகின்றாய்?

செங்கால் நாரையே! செங்கணானிடம் இதயத்தைப் பறிகொடுத்துவிட்டா உறக்கம் இல்லாமல் அலைகின்றாய்?

கடலலையே! கண்ணனின் சேவடியைக் கழுவி நிற்பதற்காகவா கதறிக் கரைகின்றாய்?

வாடைக் காற்றே! உலகை அளந்த உத்தமனைக் காண்பதற்காகவா உலகெங்கும் உலா வந்து உடலம் இளைக்கின்றாய்?

கருமேகமே! கண்ணனைக் காணாமலா கண்ணீர் மழை பொழிகின்றாய்?

வான்மதியே! மாயவனைக் காணாமலா கவலையாற் தேய்கின்றாய்?

நெருப்பே! நிமலனைப் பிரிந்த காரணத்தாலா நீறாக எரிகின்றாய்?

என்றெல்லாம் அலம்புகின்றார்.

கடலைக்கண்டதும் திருமாலின் கட்டில் என்று கைகூப்பித் தொழுகின்றார். அரவத்தைக் கண்டால் ஆதிசேடன் என்று அதன் பின்னாலே ஓடுகின்றார். புல்லாங்குழல் ஒலியைக் கேட்டுப் புருஷோத்தமனின் இசை என்று பூரிக்கின்றார். துளசி மலரைக் கண்டால் நாராயணனின் மாலை என்று ஆராதிக்கின்றார். வெண்ணெய்யைக் கண்டால் கண்ணன் உண்ட வெண்ணெய் என்று கருதுகின்றார். பசுக்களின் மத்தியில் பரந்தாமனைத் தேடுகின்றார்.

இங்ஙனமாக, கண்ணனின் காதலுக்காக ஏங்குகிற கன்னிப்பெண்ணின் ஆற்றாமை கண்டு அவரின் அன்னையும் பெரிதும் அங்கலாய்க்கின்றார் எனவும் பாடல்கள் சித்தரிக்கின்றன.

மண்ணை அள்ளி வாமணனின் மண்ணென்று சொல்கின்றாள். வானத்தைப் பார்த்து வணங்கி, விஷ்ணுவின் வைகுந்தம் என்று போற்றுகின்றாள். கடலைக் காணும் பொழுதெல்லாம் என் காதலன் கடல் போன்ற நிறத்தை உடையவன் என்று கண்களில் நீர் ஒழுகக் கூறுகின்றாள் என்று கூறுகின்ற பெண்ணின் தாயார் இப்படி எனது மகளைத் தன்வசம் இழுத்த திருமாலை என்ன செய்வேன்? என்று கழிவிரக்கப்படுகின்றார்.

தனது மகளின் தற்போதங் கெட்ட நிலையைத் தாயார் பின்வருமாறும் வருணிக்கின்றார்.

சோர்ந்திருக்கின்றாள் சற்றும் முற்றும்
நோக்குகின்றாள் கண்ணீர் வடிக்கின்றாள்.
உடல் சோர்கின்றாள் பெருமூச்சுவிடுகின்றாள்.
பெருமானே பெருமானே என்று கூவுகின்றாள்.
மண்ணை இருந்து துழாவி
வாமணன் மண் இது என்னும்
விண்ணைத் தொழுது அவன் மேவு
வைகுந்த என்றுகை காட்டும்
கண்ணை உள்நீர் மல்கநின்று
கடல்வண்ணன் என்னும் அன்னே என
பெண்ணைப் பெருமயல் செய்தார்க்கு
என்செய்கேன் பெய்வளையீரே

என்று பெண்ணின் அம்மையார் வருந்துவதாகச் செய்யுள்கள் செப்புகின்றன.

இப்படியாகச் சிற்றின்ப மூலாம் பூசிப் பேரின்பத்துக்கு இட்டுச்செல்லும் பாணியிலே திருவாய்மொழிப் பாடல்கள் காதல் ஓவியங்களாகத் துலங்குகின்றன என்றால் மிகையல்ல.

# சந்தோசத்திலொரு சங்கடம்

இவ்வார சிறுகதை

மணியத்தார் வீடு விழாக் கோலக் களைகட்டியிருந்தது. சொக் கட்டானுடன் கூடிய தகரக்கொட் டகை அமைத்து, அலங்காரப் பொரு ட்களைத் தொங்கவிட்டு, அழகிய சோடனை மாலைகளால் அலங்க ரித்து, பந்தலில் இருந்து வீட்டுவாசல் வரையும் மாலைகளால் அலங்கரி த்து வீட்டின் நுழைவாயிலில் இரு வாழை மரங்களைக் குலையுடன் நாட்டி வெளியிலும் மாலைகளால் அலங்கரித்து... அப்பப்பா! பெரும் ஏற்பாடு.

உறவினர்களும், அயலவர்க ளும் கல்யாண அடுக்குகளைக் கவ னிப்பதற்காக அங்குமிங்கும் ஓடித் திரிந்தனர். அலுத்துக் களைத்த மணியத்தார் ஓர் பிளாஸ்ரிக் கதிரை யில் சாய்ந்தபடி "அப்பாடா" என்ற பெருமூச்சுடன் தனது நாரி உழை விற்கேற்ப இருகால்களையும் நீட்டி நாரியினைக் கதிரையோடு இறுக் கிக்கொண்டார். அவரது மனக்குர ங்கு அங்கே மூட்டை கட்டி வைத்த வற்றைக் கிளறத்தொடாங்கியது.

மணியத்தார் கடின உழைப் பாளி. வேலியடைப்பு, தோட்டம் கொத் துதல், விறகு கொத்துதல் என அவ ரது தொழில்வரிசை நீண்டுகொண்டே போகும். பிள்ளைச் செல்வங்களோ எட்டு. மனைவியுடன் சேர்த்து அங் கத்தவர் தொகை பத்து.

பகீரதப் பிரயத்தனஞ் செய்து தனது உழைப்பில் பிள்ளை களை வளர்த்தார். பிள்ளைகள் தலைப்பட்டதும் தனக்குக் கொஞ் சம் ஆறுதல் வருமென்று எதிர்பார் த்து மனக்கோட்டை கட்டினார். அவ ரது அக்கோட்டையை மண்கோட் டையாக்கிவிட்டு தாய் தகப்பனிற்குத் தெரியாது திருமணஞ் செய்து அவர் களை விட்டுப் பிரிந்து சென்றான் பாபு. பாபு மணியத்தாரின் மூத்தமகன்.

கோபச் சக்கரம் இயந்திர கெதியில் அவரது மனதுள் சுழன் றது. "எனக்கு பாபு என்றொரு பிள்ளை இனியில்லை. இஞ்சயிருக்கும் எவ ரும் அந்த நாயோடு கதைக்கக் கூடாது. எதுவித தொட்ர்புகளும் வைக்கவுங் கூடாது. என்னை மீறி யாராவது எதுவுஞ் செய்தியளானால் எல்லாரையுந் தொலைச்சுப்போடு வன்..." ஆத்திரம் தீரும்வரை திட் டித்தீர்த்தார்.

ஏனைய அனைத்து அங் கத்தவர்களும் சோகம் ததும்பும் முக த்தோடு நிலத்தையே பார்த்தவாறு 'சரி' எனத் தலையசைத்தனர்.

நாட்கள் சில சோகங் கலந்த மௌனமாய் நகர்ந்தன. ஒருவாறு தன் னைச் சுதாகரித்துக்கொண்ட மணி யத்தார் ஏனைய பிள்ளைகளையும் மனைவி தங்கத்தையும் அருகில் அழைத்தார்.

"பிள்ளையள் நான் கஸ்ரப் படுகிறதெல்லாம் உங்களுக்காகத் தான். உங்களை நம்பித்தான் நான் இருக்கிறன். அவன் செய்தமாதிரி நீங்களுஞ் செய்யக்கூடாது. மற்றவர் களைப் போல நாங்களும் முன்னேறி வாழவேணும். ஐஞ்சு ஆண்பிள்ளை களில ஒன்று எனக்கில்லை என் றாச்சு. இனி நங்கள்தான் இந்த மூன்று சகோதரிகளையும் எங்களையும் பார் க்கவேணும்..." எனக்கூறியபடியே ஆண்பிள்ளைகள் நால்வரையும் பார் த்து லேசாகப் புன்னகைத்தார்.


நிமிடங்கள் சில கரைந்தன. இரண்டாவது மகனான சுரேஸ்,

"அப்பா, நீங்கள் சொல்வது தான் உண்மை. அதற்கு நாங்கள் இஞ்சயிருந்து உழைத்து முன்னேற முடியாது. எப்படியாவது நான் வெளி நாடு போகவேணும். அதுதான் சரி யான வழி..."

"அதுக்கடா தம்பி இப்ப எங் களிட்ட என்ன கிடக்கு? கொப்பா பாவ மடா. அவர் காசுக்கு எங்க போவார்...."

"இல்லையடி தங்கம், அவன் சொல்வதுதான் சரி. இருக்கிற காணி யை ஈடுவைத்தேனும் இவனை வெளி நாட்டுக்கு அனுப்பத்தான் வேணும்" எனக்கூறிவிட்டு அங்கிருந்து வெளி யே சென்றார் மணியம்.

மாதங்கள் மளமளவென்று உருண்டோடின. மணியத்தாரின் எதிர்பார்த்தது போல் அவரது காணி ஈடுவைக்கப்பட்டு இளைய மகனான சுரேஸ் வெளிநாடு சென்றான்.



சுரேஸ் மிகுந்த கெட்டிக்காரன் என்பதால் அவன் அங்கு சென்று ஒரு வருடம் ஆகமுன்னரே மூன்றாவது மகனான சுகுணனையும் கூப்பிட்டு விட் டான். பினனர் அவர்களிருவஞ் சேர்நது இளையதுகளான குமரனை யும், குணத்தையும் அங்கு கூப்பிட்டு விட்டனர்.

கொடுக்கிற தெய்வம் கூரை யைப் பிய்த்துக்கொண்டு கொடுப்பது போல மணியத்தாரின் வாழ்வில் மாற றங்கள் பல ஏற்படலாயின. ஊரார் பார்வைகள் முழுவதும் மணியத்தா ரின் குடும்பத்தின் மீதே பதிந்தன. குசேலனாக விளங்கிய மணியத்தார் குபேரனாக மாறிய காலத்திலிருந்து அவ்வூரில் நிகழும் முக்கிய நிகழ்வுக ளில் முதல்தர பிரமுகராகக் கணிக் கப்பட்டார்.

தனது வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்தி பெண்பிள்ளைகளில் மூத் தவர்களான சுகந்திக்கும், இந்துவிற் கும் திருமணஞ் செய்து வைத்துப் புறம்பாகக் காணி வேண்டி அதில் வீடுகளும் கட்டிக்கொடுத்தார்.

தொன்று தொட்டுத் தாம் குடியிருந்த வீட்டைக் கடைக்குட் டியான பாமாவிற்குக் கொடுக்க வேணும் என்பதுதான் அவரது திட் டம். அதற்கேற்ப அவ்வீட்டினை நவீனமயப்படுத்தினார்.

இன்று இவ்வளவு ஆடம் பரமாக நடைபெற்றுக்கொண்டிருக் கும் திருமண ஏற்பாடுகள் பாமாவினது திருமண ஏற்பாடுதான். பாமாதான் அக்குடும்பத்தில் அதிகம் படித்தவள். அதற்கு ஏற்றாற் போல உத்தியோகம் பார்க்கும் மாப்பிள்ளையைப் பேசி நிச் சயம் செய்து மணநாளும் குறிக்கப் பட்டது.

ஆனால் திடீரென ஏற்பட்ட இடப்பெயர்வால் அவர்களது திருமண மானது திட்டமிட்டபடி இடம்பெற முடியவில்லை. அவர்கள் எல்லோரும் இடமபெயர்ந்து வன்னி சென்றமை யால் அவ் ஏற்பாடுகள் குழம்பிப்போயின. ஐந்து வருடங்களிற்குப் பிறகு அதற் குரிய நாள் இன்றுதான் கனிந்தது.

"க்குகூஊ... க்குகூஊ ஆஆஆ..." அக்குழந்தையின் அழு கைச் சத்தம் கடந்த கால நினைவு களில் மூழ்கிப்போயிருந்த மணியத் தாரை நிகழ்காலத்திற்கு கொண்டு வந் தீது. ஓடிப்போய் அவனைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு, "அழா தேயடா பேரா அழாதே..." என அவ னைத் தேற்றியபடியே மனைவியை நோக்கி விழிகளைத் திருப்பினார்.

மணியத்தாரின் ஏனைய சம்பத்திகள் யாவரும் வந்து கூடியி ருந்தனர். வருபவர்களையெல்லாம் "வாங்கோ! வாங்கோ!" என்று இன் முகம் காட்டி வரவேற்றுக்கொண்டிரு ந்தாள் தங்கம். மனைவியைக் கண் டதும் தனக்கு இளமை பெயர்ந்ததாய் மணியத்தார் நினைக்கலானார். அந் தளவிற்கு முதுமையினை அடித்து விரட்டிய ஆடை அலங்கரிப்புகளு டன் அங்கு நின்றிருந்தாள் தங்கம்.

மெதுவாய் மனைவியிருக்கும் இடம் நோக்கிச் சென்றார்.

"எடியே தங்கம்! கல்ணாயம் உனக்கோ? மகளிற்கோ......?"

"சும்மா போங்கப்பா உங் களுக்கு நெடுகவும் நக்கல்தான்"

"அது சரி! சரி..." இழந்த இளமைக்காலத்தை மீட்டெடுத்த சந்தோஷத்தில் அவர்கள் சற்றுநே ரம் பேசிக்கொண்டிருந்தபோது பேரப் பிள்ளை மீண்டும் அழத்தொடங்கி னான்.

"எடியேய் இவனோட பெரிய கரைச்சலாக இருக்கு. தாய் எங்க?"

"என்னப்பா! அவள் வெளிக் கிடுகிறாள். கொஞ்சநேரம் உவனைப் பிராக்காட்டுங்கோ..."

"எடியேய் நான் வெளிக்கிட வேண் டாமோ..." மணியத்தார் கேட்டதும்,

"இவ்வளவு நேரமும் என்ன யோசிச்சுக் கொண்டிருந்தனீங்கள். சரி! தாங்கோ! கெதியாயக் குளிச்சு வெளிக்கிடுங்கோ..." எனக்கூறிய படியே பேரனை வாங்கினாள் தங்கம்.

"கார் வருகுது! கார் வரு குது. எடியே புவனம், சசி இஞ்ச வாங்கோ. நீங்க ஆராத்தித் தட்டை எடுங்கோ! பவளம் இந்தா நீ பன்னீர் தெளி...!" பேரனை இடுப்பில் வைத் துக்கொண்டு பதட்டப்பட்டவாறு கூறிக்கொண்டே அங்கு மிங்குமாய் ஓடினாள்.

முறைப்படி மாப்பிள்ளையை அழை த்துக்கொண்டு வந்த தும், வாசலில் நிறுத் திக் கால்கழுவத் தண் ணீர் கொடுத்தனர்.

அதன்பின்னர் ஆரா த்தி எடுத்து திஷ்ரிப் பொட்டும் வைத்துப் பன்னீர் தெளித்து அவ ரையும் அவருடன் கூட வந்தவர்களையும் உள் ளே அழைத்தனர்.

தோழன் அழைத் துச்செல்ல மாப்பிள்ளை தொடர்ந்து சென்று மண வறையில் அமாந்துகொ ண்டார். குழுமியிருந்த வர்களின் அகமும் முக மும் நகைக்கத் தொட ங்கியது.

அவ்வூரவர்கள் அனைவரை யும் பார்த்து மாப்பிள்ளை சிரிப்பதும் கையால் சைகைகள் செய்வதுமாய் ஒரே குசியாய் இருந்தார்.

மணமகனின் சகோதரியான தோழி மணமகள் அலங்காரஞ் செய்து கொண்டிருந்த அறையை நோக்கிச் சென்றாள். அவள் போகும் வழியில் இருவர் குசுகுசுத்துக் கொண்டிருந் தது அவளது செவியில் ஈட்டியாய் குத் தியது. எதற்கு வம்பெனப் பொறுத் துக்கொண்டு சென்றாள்.

மணமகளை அலங்காரப்படுத்தி யவளுள் ஒருத்தி அறையைவிட்டு வெளியே வந்தாள்,

"இவ்வளவு நேரமும் என்ன செய்யிறியள். நேரம் போகுதெல்லே..."

"அக்கா இப்பத்தான் சாறி உடுத்து முடிஞ்சது. அலங்காரங்க ளெல்லாம் செய்தாச்சு ஒரு கொஞ்ச நேரம் பொறுங்கோ வீடியோ எடுத்து விட்டு வரட்டும்..." எனக் கூறிவிட்டு அவள் சென்றாள்.

மணவறையில் தாலிகட்டி பள்ளியறையில் அவன் ரசிக்கவேண் டிய அழகையெல்லாம் துளித்துளி யாய் அவ்வீடியோக்காரனின் கையி லுள்ள வீடியோ கமெரா பருகிக்கொண் டிருந்தது. தோழியோ எரிச்சல் மேலீ ட்டால்,

"வீடியோவைப் பிறகு எடுக் கலாம் இப்ப நேரம் போகுது முகூர் த்த நேரம் முடியமுன்னர் தாலிகட்ட வேணும். சீக்கிரம் வாங்கோ..." என மணமகளை வலிந்து அழைத்தாள்.

புதுமணப்பெண்ணுக்குரிய நாணத்தோடு முகத்தை நெற்துணி யால் முக்காடு போட்டுப் புறப்பட ஆய த்தமானாள் மணமகள். அவளைக் கண்டதும் தோழிக்கு என்ன தோன் றியதோ தெரியவில்லை அவளது முக த்தை மூடிப்போடப்பட்டிருந்தஅந்த முக்காட்டை அகற்றினாள்.

"பிள்ளை உங்களுக்கு உந்த முக்காடு தேவையில்லை. சீக் கிரம் வாங்கோ..." எனக்கூறி அழை த்துச் சென்றாள்.

மணமகளிற்கோ அவளை அடி க்கவேண்டும் போலிருந்தது அழுகை அழுகையாய் வந்தது. மாப்பிள்ளை யின் தமக்கையென்பதனால் பொறு த்துக்கொண்டு மணவறைநோக்கி மெல்லமெல்ல நடந்தாள்.

மணவறையில் மணமகள் வந்து அமர்ந்துகொண்டதும் மண மகன் முகத்தில் புதியதொரு நாணம் அரும்பியது.

மணங்கான வந்தோர் யாவரும் மனதுள் அமுங்கி, அமுங்கிச் சிரிக்கலாயினர்.

பெரிய கரைபோட்ட பட்டு வேட்டியும், கோல்ட வாச்சும், மோதி ரம் சங்கிலியெல்லாம் அணிந்து தங் கத்திற்கு நிகராக மணியத்தாரும் உடுத்துப்படுத்தி வந்தார். மணங் காண வந்தவர் பலருடனும் அளவ ளாவினார். மனைவியிடம் சென்று, "எங்கே பொடி" எனக் கேட்டதும்.

"அவனோ அவன் நித்தி ரையாய் போனான். அங்கே வளத்தி யிருக்கிறன் அடிக்கடி பாருங்கோ" எனக்கூறிவிட்டுத் தங்கம் மணவ றைக்கருகில் சென்றாள்.

சுபநேரம் நெருங்கவும் ஐயர் தாலியையெடுத்து மணமகனின் கை களில் கொடுத்ததும் மணமகளின் கழுதில் தாலியேறியது. பெரியோர்க ளும் உறவினர்களும் அவையோ ரும் கூடிநின்று வாழ்த்தினர்.

**அகியோபி**

தாலிகட்டும்போது ஏற்பட்ட சர்வமங்கல வாத்திய முழக்கத்தால், நித்திரையில் கிடந்த மணியத்தா ரின் பேரன் சுஜிதன் விழித்துக்கொண் டான். சுஜிதன் இரண்டுவயது நிரம் பிய பிஞ்சுப்பாலகன். அவனுக்கு அங்கு நிகழ்பவையாவும் சிதம்பர சக்கரமாகவேயிருந்தது. நித்திரை விட்டு எழும்போது வழமையாய் அழுதுகொண்டு எழும்புவது அவன் வழக்கம். ஆனால் அன்று அவன் அழவில்லை. எதிரே தாயும் தகப்ப னும் அமர்ந்திருந்ததனால் அவன் அழவில்லைப் போலும்.

தாலிகட்டி முடிந்ததும் தம் பதிகள் பால்பழஞ் சாப்பிடும் நிகழ் விற்குத் தயாராகினர். அங்கே பாலில் கரைத்த பழங்கள் சிறியதொரு செம் புக்குள் தயாராக இருந்தது. அதைச் சிறிய கரண்டியால் கிள்ளி மணமகள் மணமகனின் கையில் போட்டதும் அதை மென்று தின்று மாப்பிள்ளை விழுங்கியதும் மறுமுறை அவருக் குப் போடுவதற்காய் கரண்டியை விட் டுக் கிள்ளும்போது மணமகளின் தோ ளில் இரு பிஞ்சுக்கரங்கள் பதிந்தது.

"அம்மா எனக்கும் தாங்கோ" எனக் கைகளை நீட்டி அடம்பிடி த்து நின்றான் அப் பிஞ்சுப்பாலகன் சுஜிதன். அதுவரை நேரமும் அமுக் கச் சிரிப்புடனிருந்தஅவையோர் அமு க்க வெடியாய்ச் சிரித்தனர். விழுந்தடி த்து வந்த மணியத்தார் பேரனைத் தூக்கிக்கொண்டோடினார்.

(13ஆம் பக்கம் பார்க்க...)

# மௌனத்தின் தேடல்கள் - 23

### நாளைய வேலையில்லாப் பட்டதாரிகள்

பாரின் சென்று
பட்டம் பெற்று
பட்டாம் பூச்சிகளாக
பிரகாசிக்கும் பட்டதாரிகளே!
நம் நாடு திரும்பினால்
நாளை எம்போல் நீங்களும்
வேலையில்லாப் பட்டதாரிகள்
என்பதில் ஐயமில்லை!

P.சூர்யா,
சரசாலை.

### புன்னகையின் அர்த்தம்

வரலாற்றுத் தவறுகளும் கல்விக்குப் பேதமையும்
எமக்கு காட்டியதால்தான் அன்றொருவன்
மூட்டிவைத்தான் போராட்டத் தீ - அது
மூலை முடுக்கெங்கினும் பற்றிக்கொண்டு எரிகிறது
எழில் கொஞ்சும் உங்கள் முகத்துப் புன்னகையின்
அர்த்தம் எமக்குப் புரிகிறது - எங்கே
அந்த அரசியல் ஆர்வலர்களுக்கு புரியப்போகிறது
நாட்டைத் தாங்கும் தூண்கள் நீங்கள் என்று.
நேற்றைய பட்டதாரிகள் வீதியில்
இன்றைய பட்டதாரிகள்.....?

M.சந்திரகலா,யோகபுரம்.

### தமிழினத்தின் துயர் துடைப்போம்!

பாலர் கல்வி
பள்ளியிற் கல்வி
பாடசாலையிற் கல்வி
கல்லூரியில் கல்வி
இடையில் கொட்டில்
ரியூட்டரிக் கல்வி
பயின்று வென்று
பல்கலைக்கழகம் புகுந்து
பட்டம் எடுத்தீர்கள்...
பட்டதாரிகளானீர்கள்....
ஏட்டுக் கல்விதானே
என்றிராமல் படைப்போம்
பல பல சாதனைகள்
தமிழனத்தின் துயர்
துடைப்போமென்று
காட்டுங்கள்!

மாருதி,
ஆவரங்கால்.

### பாரபட்ச இலங்கையிலே பயனில்லாப் பட்டம்

பாரினிலே நீ பிறந்தாய்....
பறந்து பறந்து ஏன் படித்தாய்....
பார்ப்பவர் கண் குளிர பல்கலைக்கழகமதில்
பலரின் முன் பட்டம் பெற்றாய்...
தமிழனாய்ப் பிறந்ததினால் தகுந்த வேலை தாரா
பாரபட்ச இலங்கையிலே
பருவத்திலே பலனில்லை
பட்டதாரிகள் உங்களை சிறுபான்மை
என்பதனால் சிறுமையாய் நினைத்திடுவார்
எங்கிடும் உங்களுக்குத் தீர்வுதான் எப்போது..?

பா.பிரபா,உடுவில்.

### புதிய பட்டதாரிகள்...!

கஸ்ரப்பட்டு கல்வி கற்றதற்கு
கையில் சுருள் கிடைத்துவிட்டதென்று
மகிழ்ச்சியா....?
ஓ... நீங்கள்
புதிய பட்டதாரிகள் அல்லவா?
உங்களுக்குத் தெரியாது போலும்
வேலையற்ற பட்டதாரிகளின்
நிலமை!!!

வா.கஜிதா, மருதங்கேணி.



### வெற்றிப் பெருமிதமா?

பதவிக்கு வந்து
பட்டம் வாங்கியோரது
பசப்புவார்த்தையிலும் - இனி
மயங்கமாட்டோம்
பட்டம் பெற்ற நாமும்
இனி பதவி தேடி
ஓடமாட்டோம்
கூட்டுச் சேர்ந்துவிட்டோம்
இனி நாம் சுயமாக
தொழில் புரிவோம் என்ற
வெற்றிக் களிப்புடன்
பெருமிதம் கொள்கிறீரா?

பொ.புனிதன்,
வரியப்புலம்.

### தொடர்கிறது

காலை மாலையென
கண்விழித்துக் கற்றோம்
பல்கலைக்கழகம் சென்று
பட்டம் பல பெற்றோம்
போராட்டம் பல செய்தோம்
சுலோக அட்டை தாங்கி
பசியைக்கூட இழந்தோம்
வேலை ஒன்று பெறுவதற்காய்
நாயாய் அலைந்தோம்
அது மீண்டும் மீண்டும்
எம் முன்னால் தொடர்கிறது....

இன்பராஜ்,மீசாலை

### போராட்டமே!

நீங்கள் படித்தீர்கள் பட்டதாரி ஆகினீர்கள்
நாங்களும் படித்தோம்
பல பல பட்டங்களையும் பெற்று
பட்டதாரியானோம் - ஆனால்
ஆண்டு ஆறாகியும் இன்னமும்
வேலை கிடைக்கவில்லை
எம் கைகளில் சுலோக அட்டையுடன்
நித்தமும் காரியாலயம் முன்பாக
மறியல் போராட்டமே எங்கள் பதவியாம்.

S.K.குணபாலன்,அளவெட்டி.

### என்னடா.... பட்டம்?

பட்டம் என்னடா பட்டம்
பள்ளியில் வட்டம் எடுத்தவன் வாழ்வதில்லையா?
தரப்படுத்தலால் ஓரிருவர் பெற்றவை
தரமான சேவையைச் செய்யுமா?
இனவிகிதாசார காரணங்காட்டி
எம்மவர் பெற்ற பட்டங்கள்
காற்றிலே பறக்க மட்டும்தானா?
உண்ணாவிரதம் மறியல் போராட்டம்
செய்தா உத்தியோகம் பெறவேண்டும்?
நாட்டுக்குள் பயன்படாப் பட்டங்கள்
வெளிநாட்டுக்குப் பறப்பதுமுண்டு
போசாக்கின்றி மரநிழலிலே கற்கிறார்
பாலியல் கொடுமைக்கும் ஆளாகிறார்
வசதியின்றி இடைவிலகுவதுமுண்டு
தேசிய சொத்தான கல்வி சீரழிகிறது
ஆசிரியர் தளபாடப் பற்றாக்குறை
விட்டதொட்ட குறையாய்த் தொடர்கிறது.

இரா.குமரகுரு,
பண்டத்தரிப்பு.

### கவலை

பட்டதாரியான
நிலையில் நிற்கும்
உங்களைப் பார்த்தால்
எமக்கும் மகிழ்ச்சிதான்...
ஆயினும் வேலையற்ற பட்டதாரிகள்
என்று நினைக்கையில்
மனம் கவலைப்பட்டு
வேதனையடைகிறது....

K.K.அன்ரன்,
மீசாலை.

### வேலையில்லாப் பட்டம்

பட்டமளிப்பு விழா தன்னில்
பலர் முன்னே பட்டங்கள் பல
பாடுபட்டுப் பெறும்போதும்
இருக்கிறது இன்னுமோர்
இலவசப் பட்டம்
'வேலையில்லாப் பட்டம்!'.

மா. குகரூபன்,
யாழ்ப்பாணம்.

### வெற்றிக்களிப்பு

கல்வி எனும் கடலைக் கடக்க எண்ணி
கல்லூரி முதல் கழகம் வரை சென்று
பட்டங்கள் பல படிப்படியாகப்
பெற்ற மகிழ்வினிலே
மீளாத சுழியாக வருகின்ற
வேலையில்லாப் பட்டம்
கண்களுக்குத் தெரியாமல்
கருத்தை மறைக்கிறது வெற்றிக்களிப்பு.

மா.அஷனந்தி,யாழ்ப்பாணம்.

### இளம் சமுதாயமே!

பட்டங்கள் பல பெற்று
பாரினில் புதுமைகள் பல செய்திடும்
நம் இளம் சமுதாயமே!
பசித்தோர் புசித்திட
பல்வகைத் தொழில்வளம் பெருக்கி
பஞ்சத்தைப் போக்கிட
பாடுபட்டு உழைத்திடுவீர்களா?

கந்தஞானமுத்து,
கைதடி.

### நெஞ்சம் மறக்குமா?

பகலிரவாய்ப் படித்துப்
பட்டம்தனைப் பெற்று
இன்புற்ற வேளையையும்
வேலைதனை வேண்டி
வெய்யிலில் வேகவேக
போராட்டம் நடத்தியதையும்
நெஞ்சம் மறக்குமா?


ஸ்ரீ.சோபிகா,வட்டுக்கோட்டை.

### விடை கூறும் நாள்

பார் போற்றும் பட்டம் படித்து
பல்கலைக்கழகத்துக்கு விடைகொடுத்து
மனமகிழ்ச்சியால் முகம் மலர்ந்து
வருகின்ற பட்டதாரிகளே!
தமிழனாய்ப் பிறந்து
பட்டம் பெற்றால் என்ன
பதவி கிடைக்குமா? - இம்மண்ணிலே
மனது கலங்காது மகிழ்ச்சிகொள்
விடை கூறும் நாள்
வெகுதொலைவில் இல்லை.

த.நா.பிள்ளையார்,மூளாய்.

### மௌனத்தின் தேடல்கள் - 25



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை **மிகச் சிறிய கவிதைகளாகக் தபால் அட்டையில்** சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.
**கிடைக்கவேண்டிய இறுதித்திகதி** - 28.08.2004
அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்- 25
சங்குநாதம்
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

### ப(த)ட்டம்

பட்டம் பெற்ற சந்தோசத்தில்
பாரில் உள்ள துன்பம் மறந்து
சிரித்து மகிழும் உறவுகளே!
நாளை வேலை தேடிச் செல்லும்போது
நீ பெற்ற பட்டமே உன்னை
பரிதவிக்க விட்டுவிடும் - அப்பொழுது
உனது நிலையை எண்ணி
அழுது புலம்பாமல்
சிரிப்பவனே நல்ல மனிதன்
மானிடமே அதற்காக உன் சிரிப்பை
சற்றே நிறுத்துங்கள் - அச்சிரிப்பை
சேமிப்பில் சேர்த்து துன்பம் வரும்போது
சிரிக்கலாம் அல்லவா.

அ.லஜிதா, நவாலியூர்.

### மறவாதீர்!

பல்கலைக்கழகத்தில் பயின்று
நட்பால் உயர்ந்து
நண்பர்களாக ஆனதால்
குதூகலமா...?
பட்டப்படிப்பில் பட்டதாரி
ஆனதால் குதூகலமா...?
மறந்துவிடாதீர்கள்
வேலையற்றோர் பட்டியலில்
நீங்களும் இணையப்போவதை.

S.வவா, விசுவமடு.




சென்னையில் ஒரு
• மழைக்காலம்
சூர்யா - அசின்

## கவர்ச்சி ரம்யா

திருமணத்துக்குப் பின் நடிக்கவரும் நடிகைகளின் பட்டியலில் சேர்ந்திருக்கும் இன்னொருவர் ரம்யா கிருஷ்ணன். 'வா... வாடா மன்மதா' என்ற படத்தில் கவர்ச்சியாக நடித்திருக்கிறாராம். இனித் தொடர்ந்து ரம்யாவை தமிழ்ப் படங்களில் பார்க்கலாம்.

## ஒற்றைக்காலில் அசத்தலாய் ஆடும் — டான்சர் குட்டி

வித்தியாசமான முயற்சிகளில் துணிச்சலுடன் இறங்கும் டைரக்டர் கேயார் இயக்கித் தயாரித்துவரும் படம் "டான்ஸர்".



ஒற்றைக்காலுடன் பிரமாதமாக நடனமாடும் குட்டி என்ற வாலிபனதான் இந்தப் படத்தின் ஹீரோ. டன்டன்னாக தன்னம்பிக்கையை விதைக்கும் வகையில் நா.முத்துக்குமார் எழுதி, பிரவீன்மணி இசையமைத்த "சொன்னது என்ன சொன்னது" என்று தொடங்கும் பாடலுக்கு குட்டி ஆவேசமாக நடனம் ஆடுவது போன்ற காட்சியை சமீபத்தில் காமராஜர் அரங்கில் படமாக்கினர்.

ஒற்றைக்காலில் குட்டி தன்னம்பிக்கையுடன் சுற்றிச் சுழன்று, விழுந்து எழுந்து, தாவி நடனமாடியதைப் பார்த்த படக் குழுவினர் கண்ணீர் மல்க கைதட்டி வாழ்த்தினர். குட்டியுடன், ராபர்ட், கனிகா உட்பட பலர் நடிக்கும் இந்தப் படத்தை ஏ.லோகேஷ் கேயார் தயாரித்து வருகிறார்.

ஒற்றைக்கால் உடைய ஒருவரை கதாநாயகனாக நடிக்க வைப்பது உலகிலேயே இதுதான் முதல் முறை என்று கூறப்படுகிறது. செப்டெம்பரில் 'டான்ஸர்' திரைக்கு வருகிறார்.

# சேரன் நடித்து இயக்கும் டூரிங் டாக்கீஸ்



விக்ரம் நடித்த 'ஜெமினி', தனுஷ் நடித்த 'திருடா திருடி', 'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்' மற்றும் தற்போது சிலம்பரசன், ஜோதிகா, மந்திராபேடி, யானாகுப்தா நடிக்கும் 'மன்மதன்' திரைப்படத்தை தொடர்ந்து எஸ்.கே. கிருஷ்ணகாந்த் பிரம்மாண்டமான முறையில் சேரன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி கதாநாயகனாக நடித்து இயக்கும் புதிய படத்தை தயாரிக்கிறார். இந்தப் படத்திற்கு 'டூரிங் டாக்கீஸ்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். முற்றிலும் மாறுபட்ட வேடத்தில் கதாநாயகனாகச் சேரன் நடிக்க, ஜோடியாக இரு முன்னணிக் கதாநாயகிகள் நடிக்கின்றனர். முக்கிய வேடத்தில் ராஜேஷ் நடிக்க மற்ற நடிகர், நடிகைகள் தேர்வு நடைபெறுகிறது.

வாழ்க்கையை சினிமாவாக நினைத்து வாழ்க்கை நடத்துபவர்கள் பலர். சினிமாவையே வாழ்க்கையாக நினைத்து வாழ்பவர்கள் பலர். சினிமாவைப் பார்த்து சிலர் காதலிக்கக் கற்றுக்கொண்டார்கள். சினிமாவைப் பார்த்து சிலர் குடும்பத்தை நேசிக்கக் கற்றுக்கொண்டார்கள். சினிமாவைப் பார்த்து இந்தப் படத்தின் கதாநாயகன் என்ன கற்றுக்கொண்டான். அது எந்தளவு முக்கியமானது என்ற கருத்தினை மையமாக வைத்து உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்பு செப்டெம்பர் மாதம் சென்னையில் தொடங்கி தொடர்ந்து இயற்கை எழில் கொஞ்சும் கிராமப் பகுதிகளில் நடைபெற்று ஜனவரி மாதம் வெளிவருகிறது.

தமிழ் சினிமாவில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தி 'ஆட்டோகிரா..ப்' படத்திற்கு பின்னணி இசை மூலம் பலத்தை ஏற்படுத்திய சபேஷ் - முரளி இப்படத்திற்கும் இசை அமைக்க, எம்.எஸ்.பிரபு ஒளிப்பதிவு செய்கிறார். கலை - ஜே.கே, கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் - சேரன்.

## ரூப் ரூபட்

'ராஜா சின்ன ரோஜாவில்' வரும் 'சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா' டூயட் பாடல் ரீமிக்ஸ் செய்யப்படுகிறது. 'கலையாத நினைவுகள்' படத்தில் புதுமுகங்கள் விஸ்வாஜி–பூர்வஜா இந்தப் பாடலுக்கு ஆடுவார்கள்.

## கலக்கும் காளை

சிறிய வேடங்களில் நடித்துக் கொண்டிருந்த காமெடியன் முத்துக்காளையின் கையில் இப்போது ஏகப்பட்ட படங்கள். விஜயகாந்தின் 'நெறைஞ்ச மனசு' படத்தில் மெயின் காமெடியனாக வருகிறார். இது தவிர 'மதுர', 'மன்மதன்', 'போஸ்', 'சதுரங்கம்', 'ஏய்', 'எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமி', 'கிரி', 'மீசை மாதவன்', 'குருதேவா' ஆகிய படங்களிலும் நடித்துவருகிறார்.

## பேரழகனின் புதிய தோழர்

பேரழகன் சூர்யாவின் புதிய தோழர் யார் தெரியுமா? இயக்குநர் சரண்தான். 'வசூல் ராஜா' படவிழா உட்பட தான் சம்பந்தப்பட்ட அனைத்து விழாக்களுக்கும் சூர்யாவை அழைக்க சரண் தவறுவதில்லை. சரண் இயக்கும் படத்திலும், தயாரிக்கும் படத்திலும் சூர்யா நடிக்கிறார்.

## முருகதாஸின் மிரட்டல்

திருமணம் முடிந்துவிட்டது. இனி அடுத்த பட வேலையில் செப்டெம்பர் முதல் முழுவீச்சாக இறங்கப்போகிறாராம் முருகதாஸ். அஜீத், அசின் நடிக்கும் 'மிரட்டல்' தான் அவரது அடுத்த படம். இப்படத்தில் வித்தியாசமான அஜீதைக் காட்டப்போகிறேன் என்கிறார் தாஸ்.



'ஆயுதம்'
பிராசாந், சினேகா

# மனிதர்களை அழிக்கும் ரோபோக்கள்

ரோபோக்களை மனிதன் படைக்கிறான். ஆனால் ரோபோக்கள் தன்னைப் படைத்த மனிதர்களையே அழிக்க முற்பட்டால்...? இதுதான் 'அபாயமனிதர்கள்' படத்தின் கதை.


ஜேம்ஸ் குரோம் வெல் ஒரு விஞ்ஞானி. ரோபோக்களை வடிவமைத்து சக்தி தந்து உருவாக்குகிறார். திடீரென்று அவர் தற்கொலை செய்துகொண்டதாக செய்தி வருகிறது.

போலீஸ் அதிகாரி வில்ஸ்மித் இதனை துப்புத் துலக்க ஆரம்பிக்கிறார். இறுதியில் அதிர்ச்சியூட்டும் உண்மைகளைக் கண்டுபிடிக்கிறார். படு மிரட்டலான இந்தப் படத்தை பிரமாண்டமாக இயக்கியிருப்பவர் அலெக்ஸ் பிரையாஸ். விரைவில் இப்படம் திரைக்கு வருகிறது.



ராம்குமார் மகன் துஷ்யந்தும் சிபிராஜும் நெருங்கிய நண்பர்கள். 'வசூல் ராஜா எம்.பி.பி.எஸ்' சிறப்புக் காட்சிக்கு குட்லக் தியேட்டரில் பிரபு ஏற்பாடு செய்ய, சிபியையும் அழைத்து வந்து படம் பார்த்தார் துஷ்யந்.

'அழகிய தீயே' வெற்றியால் மகிழ்ந்து கொண்டிருக்கும் பிரகாஷ்ராஜ், அடுத்த படத்தை விரைவில் ஆரம்பிக்கிறார். இதையும் ராதா மோகன்தான் இயக்கலாம் என பேச்சு அடிபடுகிறது.



'ஜெய் சூர்யா'
அர்ஜீன், லைலா

## சிவா 98480 22338

நாகர்ஜுனா, அசின், ரக்ஷிதா நடிக்கும் புதிய படம் சிவா 98480 22338'. இது தெலுங்குப் படத்தின் டப்பிங். சிவா என்பது படத்தில் நாகர்ஜுனாவின் பெயர். சிவாவின் செல் நம்பர்தான் தலைப்பில் உள்ளது. இசை - சக்ரி. ஹாஸ்புஷ் பிலிம்ஸ் சார்பில் காதர் அசன் தயாரிக்கிறார். இயக்கம் - பூரி ஜெகனாத்.

## விக்ரம் பாடிய "தில்"லான பாட்டு



விக்ரம் திகதிக்காக தமிழ் தயாரிப்பாளர்கள் பெரிய க்யூவில் நிற்கும் போது நமக்கெங்கே கால் ஷீட் கொடுக்கப் போகிறார் என்று நினைத்த தெலுங்கு தயாரிப்பாளர்கள் விக்ரம் நடித்து ஹிட்டான படத்தை வாங்கி தெலுங்கில் மொழி மாற்றம் செய்கிற வேலையில் இறங்கியிருக்கிறார்கள்.

பிதாமகனைத் தொடர்ந்து விக்ரமின் 'தில்' படமும் தெலுங்குக்குப் போகிறது. படத்துக்கு அட்ராக்ஷன் ஏதாவது வேணாமா? விக்ரமையே கூப்பிட்டு 'தில்' படத்தில் வரும் டைட்டில் ஸோங்கைப் பாடவைத்திருக்கிறார்கள். விக்ரமோடு சேர்ந்து பாடியிருக்கும் பின்னணிப் பாடகி நடிகர் கருணாஸின் மனைவி கிரேஸ். 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்' படத்தைத் தொடர்ந்து இவர் பாடியிருக்கும் இரண்டாவது பாடல் இது. எல்லாம் சொல்லிட்டு படத்தின் பெயரைச் சொல்லாவிட்டால் எப்படி? 'யெஸ் விக்ரம்' இதுதான் படத்தின் பெயர்!


மூன்று ப
சேர்ந்த
பெல்காம்
னஸ்மான்
ளனர். பி
மில் பெ
உதயகும
லக்ஷ்மியி
'க
வேறு இ
தது. சி
தான் உ
லும் நடி
எழுதிக்

யார் அ
மாற்றி ப
உதயகும
எனக்
'கண்
ங்க. என்
லில் நா
றேன். பட
களே பா
லுங்க' எ
குஷ்பு
ரீமா செ
த்தில் ந
ார்.
தோழியி
படம் என்
சம்பளத்
குறைவா
யிருக்கிற
மத்திய அ
கராக விக்
விருது வழ
த்தில் சிற

தம்



# அழகிய தீயே



## திரை விமர்சனம்

ஒரு உதவி இயக்குநரின் வாழ்க்கைப் போராட்டம், இடையில் சந்தர்ப்பவசத்தால் ஒரு காதல், இறுதியில் வெற்றி என்கிற மிகச் சாதாரண கதைதான். அதைக்கூட மிகவும் சுவையாக, சுவாரஸ்யமாக, நகைச் சுவையாகச் சொல்லமுடியும் என்று காட்டுகிற படம்தான் 'அழகிய தீயே.'

நான்கைந்து படங்களில் நடித்தும் பெரிய அளவில் வராத பிரசன்னாவுக்கு இந்தப் படம் ஒரு திருப்புமுனையாக அமையும். அவர் மட்டுமல்ல அவருடன் சினிமாக் கனவுகளோடு அலையும் மூவரும் (இரண்டு பேர் இயக்குநர்கள், ஒருவர் நடிகர்) மிக நன்றாக நடித்திருக்கிறார்கள். சித்தப்பா என்று அழைக்கப்படும் குமரவேலுவும், இன்னொரு இயக்குநராக (இவர் காதல் படம்தான் இயக்குவார்) வரும் பாலாவும் கூத்துப்பட்டறைக் கலைஞர்கள், இனி திரைக்கலைஞர்களாக உலாவரும் வாய்ப்பு நிறைய இருக்கிறது.

கனவுகளில் மட்டுமே உயிர்வாழும் உதவி இயக்குநர்கள் பட்டாளத்துக்கு உரமூட்டும் ஒரு படம் இது. தேநீருக்குக் கூட வழியில்லையென்றாலும் உடலைக் கட்டுமஸ்தாக வைத்திருப்பதற்காக முட்டை சாப்பிடும் நடிகர் கனவில் இருக்கும் ஜெயவர்மா. (தயாரிப்பாளர் பிரகாஷ்ராஜின் மைத்துனர்) நன்றாகச் செய்திருக்கிறார். நடுவில் ஒரு சோகக் காட்சி வேண்டுமென்பதற்காகவே அவரைச் சாகடித்துவிடுகிறார்கள். மற்றபடி அவர் சாவுக்கு முக்கியத்துவம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

தயாரிப்பு வேலையோடு நின்றுவிடாமல் ஒரு முக்கிய வேடத்தில் நடித்திருக்கிறார் பிரகாஷ்ராஜ். கொஞ்சநேரமே வந்தாலும் முழுப் படத்தையும் சுவாரஸ்யமாகக் கொண்டுபோகிற அளவுக்கு வேலை பார்த்துவிடுகிறார்.

கட்டாய திருமணத்திலிருந்து தப்பிக்கப் பொய் சொல்லி, அதனாலேயே பல சிக்கல்களைச் சந்திக்கும் கதாநாயகி நவ்யா நாயர். இந்தக் கரக்டர்களுக்கு இவர் சரியாகப் பொருந்தியிருக்கிறார் என்று சொல்லமுடியவில்லை. இன்னும் கொஞ்சம் பிரகாசமான முகத்தை நடிக்க வைத்திருக்கலாம்.

ஜாலியாக வாங்க, ஜாலியாக போங்க என்று செய்யும் விளம்பரத்திற்கு நூறு சதவீதம் பொருத்தமான படமாக இருக்கிறது. பிரகாஷ்ராஜின் ஆர்வக் கோளாறினால் திடீர் திருமணம் செய்துகொண்டு மாமனார், மைத்துனர், மனைவி என்று எல்லோரிடமும் மாட்டிக்கொண்டு பிரசன்னா முழிக்கும் காட்சிகள் வயிற்றைப் பதம் பார்க்கின்றன.



கதாநாயகியின் அப்பாவாக வரும் வில்லன் பிரமிட் நடராஜன் கரக்டர், பிரகாஷ்ராஜ் கரக்டர் ஆகியவற்றை ஒரு அளவோடு நிறுத்தியது, இறுதிக் காட்சியில் காதலை மிக மென்மையாக ஒரே ஷாட்டில் சொல்வது எனப் பல காட்சிகளில் இயக்குனர் ராதாமோகன் பாராட்டுப்பெறுகிறார்.

இன்னொரு குறிப்பிடத்தக்க விஷயம் வசனங்கள். வீட்டு உரிமையாளராக வந்து நடிப்பு ஆசையில் சுற்றும் எம்.எஸ். பாஸகர் பேசும் வசனங்கள், சமீபத்திய படங்களை ஆரோக்கியமான முறையில் கிண்டல் செய்கின்றன. அதுவும் பாஸ்கரின் வட்டார வழக்கு மொழி பெரிய ப்ளஸ் பொயின்ட்.

இப்ப வந்த படங்கள்ல முரளி கூட காதல உடனே சொல்லடறார்டா என்ற நகைச்சுவை வசனம், இந்த காசு எங்கம்மாவோட வியர்வை என்கிற அழுத்தமான வசனம் எனக் காட்சிக்கேற்றவாறு சுருக்கமான வரிகளில் நன்றாகச் சொல்லியிருக்கிறார் வசனகர்த்தா விஜி.

பாடல்கள் பரவாயில்லை. அவை இன்னும் சிறப்பாக இருந்திருந்தால் படத்துக்கு மேலும் பலமாக இருந்திருக்கும்.

விதத்தியாசமான படங்களைத் தரவேண்டும் என்கிற பிரகாஷ்ராஜின் ஆசையை நிறைவேற்றி, தமிழ் ரசிகர்களின் ரசனைத் திறனை உயர்த்தும் படம்.

# ...பெல்காம் அழகி



'கலக்கல்', 'குறுக்கெழுத்து', 'கற்க கசடற' என
...று படங்களில் நடித்து வருகிறார் லக்ஷ்மி ராய். பெல்காமைச்
...ந்த இவர் இரண்டுமுறை (2002, 2003 ஆம் ஆண்டுகளில்) 'மிஸ்
...காம் அழகி' பட்டம் வென்றிருக்கிறார். இவரது தந்தை பிஸ்
...மான். தாய் ஹவுஸ் வைஃப். மூத்த சகோதரிகள் இருவர் உள்
...ர். பிளஸ் ரூ படிக்கும்போதே மாடலிங்கிலும் ஈடுபட்டு வந்தார்.
... பெல்காம் பட்டம் வென்றதை அறிந்த இயக்குநர் ஆர்.வி.
...யகுமார், தனது 'கற்க கசடற' படத்தில் நடிக்கக் கேட்டார்.
...மியின் வீட்டில் பச்சைக்கொடி காட்டிவிட்டனர்.
'கற்க கசடற' படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் போதே
... இரண்டு படங்களில் நடிக்கவும் லக்ஷ்மிக்கு வாய்ப்பு வந்
... சினிமாவில் வாய்ப்புகள் வருவது அபூர்வம். என் படம்
...ர் உனது முதற் படமாக இருக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. நீ அந்தப் படங்களி
... நடி என்று லக்ஷ்மியிடம் கூறினேன் என்கிறார் உதயகுமார்.
... தமிழ் எனக்குக் கொஞ்சமும் தெரியாது. தமிழ் வசனங்களை ஆங்கிலத்தில்
...திக்கொண்டு பேசுகிறேன் என்கிறார் லக்ஷ்மி ராய்.

# இன்னொரு விஜய்!

விஜய்யைப் போலவே முகசாயல். அவரைப் போலவே நடக்கிறார். பேசுகிறார்.
... அவர்? வேறு யார், விஜய்யின் சித்தி மகன் விக்ராந்த்தான்.
அவரும் நடிக்க வந்திருக்கிறார் 'கற்க கசடற' படத்தில். சந்தோஷ் என்ற பெயரை
...றி படத்துக்காக விக்ராந்த் என அவருக்குப் பெயர் சூட்டியவர் இயக்குநர் ஆர்.வி.
...யகுமார்தான். விஜய் மாதிரியே இருக்கிறர்கள். நடிப்பும் அதேபோல இருக்குமா?
...க் கேட்டால்,
...கண்டிப்பா இல்லி
...என்னுடைய ஸ்டை
... நான் நடிச்சிருக்கி
... படம் வந்ததும் நீங்
... பார்த்துச் சொல்
...க' என்றார்.



'வசூல் ராஜா எம்.பி.பி.எஸ்'
கமல், சினேகா

...ஷ்புவின் தோழி
... சென் 'கிரி' பட
...ல் நடித்து வருகி
...ர். இது தனது
...ழியின் சொந்தப்
... என்பதால் தனது
...ளத்தை விடக்
...வாகவே வாங்கி
...க்கிறாராம் ரீமா.

ஆண்டுதோறும் அகில இந்திய ரீதியில் சிறந்த படம், சிறந்த நடிகர் - நடிகைகளை தேர்ந்தெடுத்து அரசு விருது வழங்கி வருகிறது.

அந்தவகையில், தேசிய விருதுக்கான சிறந்த படமாக 'இயற்கை' தேர்வுசெய்யப்பட்டுள்ளது. சிறந்த நடி
விக்ரம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 'பிதாமகன்' படத்தில் வெட்டியானாக நடித்ததற்காக விக்ரமுக்கு இவ்
வழங்கப்படுகிறது. சிறந்த நடிகையாக மீரா ஜாஸ்மின் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஒரு மலையாளப் பட
சிறப்பாக நடித்தமைக்காக இவ்விருது வழங்கப்படுகிறது.

இவ்விருதுகளை குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் வழங்கவுள்ளார்.

# கவிதைக் கலசம்

## எங்களூரில் சீதைகள்....

எங்களூரில் .என்றும்
எழுச்சி செய்யும் ஊர்வலம்
மழை யார் வீட்டில்
இதுவரை பெய்தது?
எம்நாட்டில் எங்களூரில்
எங்கும் சில வீட்டில்
தொடர் மழையாக...
பெய்கிறது வறுமையாக!

வறுமை தான் அவர்களின்
சொத்து - அதனால்தான்
சீதைகளின் காத்திருப்புகள்
தொடர்கின்றன
தொடர்கதையாக...
வரட்சி, இப்போது
வயல்களில் இல்லை
எம் நாட்டில் ஏழைகளின்
வயிற்றில்தான் போலும்!



காதோரம் தொங்கும்
வெண் கூந்தல் வெளிநீட்ட
இன்றும் ஏழை வீட்டில்
சீதைகளின் இருப்புக்கள்...

பணம் எனும் அலை எழுந்து
குணம் எனும் செல்வத்தை
அடித்துச் சென்றுவிட்டதால்
எங்கும் இப்போது
சீதைகளின் இருப்புக்கள்...

வெறுமை! அதில்தான்
வெண்மை அதிகம்
சூரியதேவன் கனல்களால்
சூடாகும் வானம்கூட
கார்கால மேகங்களால்
களைப்பாறும்-இவர்களுக்கில்லை
என்றும் ஆறுதல்
நெஞ்சில் எப்போதும்
நெருப்பாய் எரியும்
வாழ்வின் போராட்டங்கள்!

இறந்தகால நினைவுகளை
சுமந்துகொண்டு
எதிர்காலத்தை எதிர்பார்த்தபடி
இவர்களின் நிகழ்காலப்
பயணங்கள் நிம்மதியற்று
போய்விடுகின்றன....!

மா.சிவசோதி, கரவெட்டி.

## என் ஆன்மா

பனியில் நனைந்து நடுங்கி
பணிந்து நிற்கும் பூக்களைப் போன்று
பணிவான பாதங்கள்
தரைபார்த்து நடக்கும் விழிகளுடன்
எறும்பின் உயிரைக்கூடக் காப்பாய் நீ!
செடியில் பூத்துக்குலுங்கும்
பூக்களைக் கூடப் பறிக்காது
உன் கரங்கள்!
ஜோடியைப் பிரிந்து உண்ணாமல்
அடம்பிடிக்கும்
உன் வீட்டு ஐந்தறிவு ஜீவனுக்குள்ள
அன்பு தெரியாமல் - நீ கூட
அதன் பின் உணவருந்தாமல்
சித்தார்த்தன் மகளாக நடைபோடுகிறாய்!
அனுதினமும் உணவோடு உன்
நினைவுகளையும் அருந்தி
சிந்தை இழந்து சிறைபட்டு
சிலுவை சுமக்கும் என் ஆன்மா....
இப்போ சிதைவளர்க்கத்
தொடங்கி விட்டது - உன் வீட்டு
செல்லப்பிராணியாகக்கூட இல்லாததையிட்டு!

இ.வினோதன், மூதூர்.

## தேன் நிலவு



வேலின் விழியில் முகம்
காலும் மதி வெளியில்
கோலமயில் அவளைக் கண்டு
கூடி மகிழ்வு கொண்டேன்

சில வழி அதனில் பேசும்
செல்ல மொழி இனிப்பில்
பாலே வழிமுகத்தில் - அருள்
பார்த்து மகிழ்வடைந்தேன்

வெள்ளைச் சிரிப்பினிலே - முகம்
வெட்டும் அழகினிலே
துள்ளும் இடையினிலே - முகம்
தாங்க மறந்து நின்றேன்

கொல்லும் பிரிவினிலே - பின்னால்
கூறும் குழைவினிலே
செல்லும் நடையழகில்
பலதே கண்டு கொண்டேன்!

வ.சிவாஜி,
கரணவாய்.

## கற்க(க்) கல்

'ஆ' விலொரு கல்
ஆக்கல்!
'நா' விலொரு கல்
நக்கல்!
'ஊ' விலொரு கல்
ஊக்கல்!

சேற்றிலொரு கல்
சறுக்கல்!
சோற்றிலொரு கல்
கருகல்!
ஆற்றிலொரு கல்
பெருகல்!

ஏக்கத்திலொரு கல்
இரங்கல்!
ஏக்கம் கண்டு போகுமொரு கல்
விக்கல்!
எதிர்பாராது எழுங் கல்
சிக்கல்!

அன்பிலொரு கல்
உருகல்!
ஆவேசத்திலொரு கல்
திருகல்!
அருவருப்பிலொரு கல்
குக்கல்!

திருப்தியில்லா இடத்திலொரு கல்
விலகல்!
தீயிலொரு கல்
கருக்கல்!
தீன்சுவைப் பானங்களிலொரு கல்
பருகல்!

பழைசிலுள்ளதொரு கல்
உக்கல்!
பாரிலென்றுமுள்ள கல்
நீக்கல்!
இங்கு நாம் தாண்ட
வேண்டிய கல்
மைல்கல்!

அகியோபி,
வதிரி.

## தமிழிஷ்

நன்றி என்று சொன்னால் அது
நாகரிகமில்லை - இப்போ
'தாங்யூ' என்பதே தகும்
இது 'தமிழிஷ்' காலமல்லவா?

மன்னிக்க என்றால் நயமில்லை
'சொறி' எனச் சொல்வதே சரி
இ.:.து 'தமிழிஷ்' மொழியல்லவா?

'ஏசி' பூட்டிய வசதியால்
நம் கதைகளிற் குளிர்பிடித்து
'ஓசீ!' என்றோதுகிறோம் - இந்த
அர்த்தநாரீஸ்வரத் 'தமிழிஷ்'
காலத்தில்

மாடு கூட அம்மா எனும்போது
மழலை 'மம்மி' என்பது
இந்த 'தமிழிஷ்(ன்)' புதிய பரிணாமம்
ஈருடலும் ஒருயிராய் கலந்து
'டாடி' 'மம்மி' நாகரிகம் பிறந்து
அத்தை மாமி முறை மறந்து
'அன்ரி' 'அங்கிள்' முறை வளர்ந்து
'எம்ரி' ஆனது தமிழ் - ஏனெனில்
'தமிழிஷ்' காலம்
இ.:.து ஆதலால்.

சுபா ஜெகநாதன்.

## சுகமான காட்சி

மலை பாய்ந்து
அலைகளைக் காதலிப்பதற்காய்
கடலில் முற்றுப்பெறும்
நதிகள்
கடலில் மழை பொழிந்தால்
கவலைப்படுவதில்லை



ஓய்வின்றித் தொடரும்
பயணத்தில் ஏதோ
கடந்துவந்த பாதையின்
ஓலச் சத்தம்

ப்ாறைகள் கரைகின்றது என்று
நதிகள் அழுகின்றதோ?
உவர்நீர் தேடி
நன்நீரோடும் காட்சி
சூரியவேளைச் சுகம்தான்.

ஜோ.ஜெஸ்ரின்.

## என்ன செய்யப் போகிறாய்?

தென்றல் காற்றை
கடன் வாங்கி
பௌர்ணமி நிலவினிலே
நட்பு எனும் விதையை
விதைத்ததும் - நீ
சின்னச் சின்ன அறுவையால்
என்னைச் சிறைப்பிடித்ததும் - நீ
உன் கள்ளமில்லாச் சிரிப்பால்
என்னைத் திருடியதும் - நீ
உன் பார்வையால் அடிக்கடி
என்னைக் கொள்ளையடித்ததும் - நீ
என் மாற்றங்களுக்கு
காரணமானதும் - நீ
பாசமெனும் கடலில்
தத்தளிக்க வைத்ததும் - நீ
பிரிவு என்னும் கொடிய
விஷத்தை ஏற்றி
பிரியாவிடை பெற்றதும் - நீ
என்னை இன்னும்
என்ன செய்யப் போகிறாய்....?

க.கற்பகவல்லி,
பருத்தித்துறை.

## எரிபற்று நிலை

தண்ணீர் கூட தீப்பிடித்துக் கொண்டது
எனக்குள் நீ இருக்கின்றாய் என்றபோது
பெற்றோல் கூட பற்றிக்கொள்ள மறுக்கிறது
உனக்குள் நான் இல்லை என்றபோது.

பிரம்ம சாத்வி.
பருத்தித்துறை.

## நான்கு வகை மனிதர்கள்

சமுதாயத்தில் நான்கு வகையான மனிதர்கள் உள்ளனர்.

ஒரு சாரார், வானமே எல்லை என்று எண்ணாமல் 'தமக்கு நேரமே இல்லை' என்று சொல்லிப் பெரிதாக அலட்டிக்கொள்வார்கள். கிட்ட நெருங்கிப் பார்த்தால், நேரம் இல்லை! என்று சொல்வதற்குத்தான் இவர்களுக்கு நிறைய நேரம் இருக்கும்.

இன்னொரு சாரார், 'நேரம் போகவில்லை' என்று கூறிச் சும்மாவே இருப்பார்கள். அல்லது தூங்கிக் கழிப்பார்கள்; விழித்திருக்கும் போது வீண் வம்பிலும், அரட்டையிலும் ஈடுபட்டுத் தங்கள் நேரத்தைக் கொல்லுவதில் வல்லவர்கள் இவர்கள்.

மூன்றாவது பிரிவினருக்கோ நேரம் போதாது. இவர்கள் எந்தநேரமும் தேனியைப்போல் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருப்பார்கள்; பம்பரம்போல சுழன்றுகொண்டேயிருப்பார்கள். இவர்கள் நல்ல வழிகளில் திட்டமிட்டு நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவர்கள். இவ்களது பார்வையில் காலம் பொன் போன்றது மட்டுமன்று; பொன்னிலும் மேலானது.

இந்த மூன்று சாராரிடமிருந்து வேறுபட்டு, 'எனக்கு இப்போது நேரம் சரியில்லை' என்று சொல்லித் திரிவோரும் இன்றைய சமுதாயத்தில் உள்ளனர். இவர்கள் தங்கள் கைகளை நம்பாமல் தங்கள் கைகளிலுள்ள ரேகைகளை நம்புபவர்கள்; தங்கள் மனத்திடத்தை நம்பாமல், சோதிடத்தை நம்புபவர்கள்; தங்கள் சுயமதியை நம்பாமல் தலைவிதியை நம்புபவர்கள்.

சிறியவர்-பெரியவர், ஆடவர் - மகளிர், ஏழை - பணக்காரர், நகரவாசி- கிராமவாசி என்று யாராக இருந்தாலும் அனைவருக்கும் ஒருநாள் என்றால் 24 மணி நேரம்தான்! இந்த 24 மணி நேரத்தை எப்படிப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தே ஒருவரது வாழ்வில் மாற்றமும் ஏற்றமும் அமையும்.

அமைதியாக எண்ணிப்பார்த்தால் - ஆழ்ந்து சிந்தித்துப்பார்த்தால் - ஓர் அடிப்படையான உண்மை விளங்கும். நாம் வேலை செய்வதற்கு என்று நேரத்தை ஒதுக்கி இருக்கிறோம்; நாம் தூங்குவதற்கு என்று நேரத்தை வகுத்திருக்கிறோம்; எட்டுமணி நேரம் தூங்குகிறோம் ஆனால் வாழ்வதற்கு என்று ஒருநாளில் எத்தனை மணிநேரத்தை திட்டமிட்டிருக்கிறோம்?

நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துவோம்; திட்டமிட்டுப் பணியாற்றுவோம். 'எனக்கு இப்போது நேரம் சரியில்லை' என்ற பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். 'எல்லா நேரமும் நல்ல நேரம் தான் - அதன் அருமையை உணர்ந்து பயன்படுத்தவேண்டிய முறையில் பயன்படுத்தினால்' என்ற முடிவுக்கு வருவோம்!

நம்மிடம் ஒப்படைக்கப்பெற்ற இருபத்துநான்கு மணி நேரத்தில் - நாம் என்ன செய்தோம்? கொஞ்சம் கடுமையான நடையில் கேட்கவேண்டும் என்றால், என்ன பண்ணிக் கிழித்தோம்?

இனிமேல் கலண்டரில் தாளைக் கிழிப்பதற்கு முன் ஒருகணம் நாமே இப்படிக் கேட்டுக்கொண்டால் சிறப்பாக இருக்குமல்லவா?

## வாசகர் நாதம்

என் பிரியமான சங்குநாதமே!
மின்னலென மின்னி வரும் உன் ஆக்கங்கள்
என்றும் சூப்பரோ சூப்பர்!
மகளிர் உலகம் என்றும் இனிமை!

விஞ்ஞானச் சங்கம் தரும் விஞ்ஞானத்
துளிகள் நம்மை சிந்திக்க வைக்குதே!
என்னைப் பாடவைத்தவள் என்னையும்
பாட வைக்கிறாள் சங்குநாதமே!

புதுப் புது விடயங்களைச் சுமந்து வரும் சங்குநாதமே!
உனது சேவை மேலோங்கணும்
உன் கவிதைக் கலசம் மனதை திருடுகின்றதே!

நம் தாய் மண்ணில் வெளியாகும் சங்குநாதமே!
சிறுவர் அரங்கம் அறிவை ஊட்டுகின்றது
உனது சேவை ஈடு இணை இல்லாது
மேலோங்க எனது வாழ்த்துக்கள்!

செ.நன்னிலா, சிறுப்பிட்டி.

அன்பின் சங்குநாதமே! உன் ஆக்கங்கள் அனைத்தும் சிறப்பானவை. அவைகளுள் சினிமாச்சிதறல் வண்ண நிறங்களில் வெளிவந்தால் மிகவும் சிறப்பாயிருக்கும். என்னைப் பாடவைத்தவள் மீண்டும் வருவாளா? உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

க.கவியரன், திருநகர்.

# தீயில் கருகும் ரோஜா



வாசலில் கதலி வாழைக்குலை இரண்டு கம்பீரமாக நிமிர்ந்து நின்றது. வளவினுள்ளே பந்தல் போட்டு மாலை தோரணம் கட்டி ஏக தடபுடலாய் அந்தவீடு அமர்க்களப்பட்டுக்கொண்டிருந்தது.

படிக்கும்போது யாரோ ஒரு பையனோடு அந்தப் பெண் ஓடிவிட்டாள். அவன் வசதி குறைந்தவன் என்பதால் அவர்களைப் பெண்வீட்டார் பிரித்துவிட்டார்கள். பெண் வீட்டார் பணம் படைத்தவர்கள் ஆடம்பர வாழ்வை அனுபவிப்பவர்கள்.

அந்தப் பெண்ணுக்கு வேறு மாப்பிள்ளை பார்த்து திருமணம் இன்று நடக்கிறது. திருமணவீடு கலகலத்துக் கொண்டிருக்க, எதிர்வீட்டு ஜன்னலோரமாய் நின்று ஒரு ஜீவன் ஒருவித ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டிருந்தது.

இந்தச் சமூகத்தால் வெறுத்தொதுக்கி வைக்கப்பட்டுள்ள பெண்தான் தேவகி. அவளின் இந்த ஏக்கம் சாதாரணமானதல்ல. இளவயதுக் கனவுகளைச் சுமந்து இளமையான நினைவுகளில் மிதந்துகொண்டிருந்த பெண் புறா கொடூரவேடர்களின் கையில் அகப்படாமல் இருந்திருந்தால் இன்று இவளும் ஒரு குடும்பம், குழந்தைகள் என்று வாழ்ந்திருப்பாளோ!

1987இல் இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த காலம். பாதுகாப்புப்படையென்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இந்தியப்படை, தமிழ்மக்களை கொன்று குவித்தது. வீட்டுக்குள் புகுந்து நாயைச் சுடுவது போல் சுட்டுத்தள்ளியது. அப்படித்தான் தேவகி வீட்டினுள்ளும் நள்ளிரவு புகுந்த இராணுவம் தன் வெறியாட்டத்தை நடத்தியது. படுக்கையில் கிடந்த தாய் தந்தை சகோதரர் எல்லோரையும் சுட்டுக்கொன்றது.

அன்று பதினெட்டு வயதே நிரம்பியிருந்த தேவகி காடையர்களால் பலாத்காரம் செய்யப்பட்டு குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடந்தாள். துடித்துக்கொண்டிருந்த தாயையும் தேவகியையும் ஊரார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். இரு சகோதரரின் உடலும் தந்தையின் உடலும ஊர்மக்களாலேயே அடக்கம் செய்யப்பட்டது.

தேவகியும் தாயும் பிழைத்துக்கொண்டனர். தாயின் உடல் குணப்பட்டாலும் மனம் குணப்படவில்லை. இவ்வுலகை மறந்த நிலையில் மனநோயாளி ஆகிவிட்டிருந்தார்.

வாழ்வின் மேடு பள்ளங்களைப் புரிந்துகொள்ளாத சிறுவயதிலேயே இப்படியொரு கொடுமைக்கு ஆளானதை எண்ணி உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருக்கிறாள் தேவகி. ஊரார் அவளை ஒதுக்கியே வைத்துள்ளார்கள். எந்த நல்லது கெட்டதுக்கும் இவளை அழைப்பதில்லை. அவ்வளவாய் யாரும் அவளுடன் கதைப்பதில்லை. அவள் கெட்டுப்போனவள் என்றே கருதுகிறார்கள். கெடுக்கப்பட்டாள் என்று யாரும் நினைக்கவில்லை. இதுவே அவளை இன்னும் வேதனைப்பட வைத்தது.

தந்தை ஒரு அரசாங்க உத்தியோகத்தர் என்பதால் அவரின் பென்சன் பணத்திலேயே இவர்கள் இருவரது வாழ்வும் ஓடிக்கொண்டிருக்கிறது. அவளது பருவக்கனவுகளெல்லாம் பாழாய்ப்போய் இன்று பட்டமரமாகத் தனித்து நிற்கிறாள் சுயநினைவற்ற தாயோடு.

சமூகம் ஒரு சாக்கடை என்று எப்படி ஒதுக்குவது. அதன் கூரிய நாவால் குத்திக்கீறுவதை எப்படித் தவிர்ப்பது. அவள் கெட்டுப்போனவள்தான். ஆனால் அவளாக கெட்டுப்போகவில்லையே. பலவந்தமாகப் பறித்து கசக்கி எறியப்பட்ட மலரல்லவா? இதில் அவளின் குற்றமென்ன? இதயமில்லாத இந்தச் சமுதாயம் ஏன் இன்னும் போலிக் கௌரவத்துக்காகத் துடித்துக் கொண்டிருக்கிறது.

எமது நாட்டின் முதுகெலும்பான தமிழ்ப் பண்பாடு கலாசார விழுமியங்களை உடைத்தெறிந்து வெளிநாட்டு மோகத்துக்குள் புகுந்து நாளுக்கொரு உடை மாற்றுவது போல் கணவனை மனைவியும், மனைவியை கணவனும் மாற்றிக்கொண்டு நாகரிகம் என்ற போர்வையில் வாழும் பணக்கார வர்க்கத்தை விட இந்தப் பேதை எந்தளவில் குறைந்தவள்.

காதலிக்கும்போதே கருவைச் சுமப்பதும், காதல் முறிந்ததும் கருவை அழிப்பதும் பாஷனாகிப் போய்விட்டது. இந்தச் சமுதாயம் ஏன் இன்னும் விழிகளை மூடிக் கொண்டு இருக்கிறது என்பதுதான் புரியவில்லை.

தப்பு என்று தெரிந்தும் அதைச் செய்துவிட்டு பணபலத்தால் அதனை மூடிமறைப்பவளை, பணத்துக்காகத் திருமணம் செய்யும் இளைஞர்கள் அன்னியரால் கற்பு சூறையாடப்பட்ட பெண்களை ஒதுக்குவது ஏன்? கெட்டுப்போனவள் கட்டிக்கொண்டு போகும்போது, தப்பே செய்யாத இந்தப் பாவை தண்டனை அனுபவிக்கிறாளே. இதுக்கெல்லாம் யார் பொறுப்பு?

கனவுகளைச் சுமந்து இன்பமாய் வாழும் காலத்தில் இரக்கமே இல்லாத கொடியவர்களின் கையில் அகப்பட்டு புழுவாய்த் துடித்தபோது அனுபவித்த வலியையும்விட இந்தச் சமூகம் கொடுக்கிற வேதனையைத்தான் அவளால் தாங்க முடியவில்லை.

அன்று இறந்துபோன குடும்பத்தோடு நானும் இறந்துபோயிருக்கலாம். என்னைப் பிழைக்க வைத்தவர்கள் ஏன் என்னை வாழ விடுகிறார்கள் இல்லை.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு நினைவலைகள் அறுபட்டு மீள் நினைவுக்கு வந்த தேவகியின் விழிகள் நீர் கோர்த்து மாலையாகிக் கொண்டிருந்ததை உணர்ந்தவள் விரல்களால் நீரைத் தட்டிவிட்டு ஆவலுடன் முன்வீட்டு வாசலை நோக்கினாள். மாப்பிள்ளை வீட்டார் வந்திறங்கினார்கள். உயரமாய் அழகான ஒரு வாலிபன் மாப்பிள்ளைக் கோலத்துடன் காரில் இருந்து இறங்கினான். பணக்காரச் செழுமை அவனில் பளிச்சிட்டது.

M.சந்திரகலா
யோகபுரம்

இந்தப் பணம்தானே எமது வாழ்வையே நிர்ணயிக்கும் காரணியாகிவிட்டது. ஒருவேளை இது என்னிடமும் இருந்திருந்தால் யாராவது என்னையும் மணம் முடித்திருப்பார்களோ என்னவோ. உலகம் விஞ்ஞான வளர்ச்சியில் எங்கோ போய்க்கொண்டிருக்க, இந்த தமிழ்ச் சமூகம் மட்டும் ஏன் இன்னும் சாக்கடையையும் சகதியையும் கிளறிக்கொண்டிருக்கிறது. இதை எப்போது இந்தச் சமூகம் உணர்ந்து விழிப்படையப் போகிறது. உயிரும் உணர்ச்சியுமுள்ள இந்த தேவகி போல் இன்னும் எத்தனை எத்தனை தேவகிகள் ஒவ்வொரு ஊருக்குள்ளும் முடங்கிக் கிடக்கிறார்களோ யாரறிவார்.

---

இவ்வார சிறுகதைகள்

# கசவாரம்

காலைவேளை! நேரம் எட்டு முப்பதாகிக்கொண்டிருந்தது.

அந்த உணவகத்தினுள் இருந்த சனக்கூட்டம் மெல்ல மெல்லக் கலையத் தொடங்கியது. சாப்பாட்டு மேசைகளுக்கு முன்பாக இருந்து இரண்டொருவர் தேநீர் குடித்துவிட்டு அவர்களும் எழுந்து சென்றுவிட்டார்கள்.

சாப்பாட்டு மேசைகளின் மேல் சிந்துப்பட்டுக் கிடந்த உணவுத் துணிக்கைகளைத் துண்டொன்றினால் துடைத்துவிட்டு அவன் திரும்பியபோது, அவர் கடைக்குள் நுழைவது தெரிந்தது.

''ஐயா வாங்கோ..,''

அவன் கூறியபடி அவர் இருப்பதற்கு வசதியாக கதிரையை மேசைக்கருகில் தள்ளிவைத்தான்.

''என்னையா... வழக்கம் போல இடியபபம்தானே...?'' அவன் கேட்டான்.

''ஓமோம்... '' என அவர் கூறிவிட்டு மௌனமாக இருந்தார்.



அவன் திரும்பிச் சென்று, கடைப் பெட்டிக்குள் இருந்த இடியப்பங்களில் ஐந்தை எடுத்து, வாழையிலையின் மேல் வைத்து கொண்டுவந்து அவர் முன் வைத்துவிட்டு, இடியப்பத்தின் மேல் சொதியை ஊற்றினான். கூடவே சம்பலையும் எடுத்துப்போட்டான்.

மறுகணம் - அவர், தான் கொண்டுவந்த ஒரு சிறிய பொலித்தீன் உறையை எடுத்து, வாழையிலையில் கிடந்த சம்பல் முழுவதையும் அதனுள் போட்டு மூடிக்கட்டிவிட்டு, சாப்பிடத்தொடங்கினார்.

அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். அந்த இடத்தில் ஒருவருமில்லை. காசுமேசையில் உணவக உரிமையாளர் கணக்குக் கொப்பியில் ஏதோ எழுதிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவன் அவர் முன்பாக இருந்த கதிரையில் அமர்ந்தான்.

''ஐயா...''

அவர் நிமிர்ந்து பார்த்தார்.

''நான் கேட்கிறன் எண்டு குறை நினைக்காதையுங்கோ...''

அவரது புருவங்கள் சுருங்கின.

''நானும் ஒவ்வொரு நாளாய்ப் பார்த்துக்கொண்டுதான் வாறன். நீங்கள் நான் போடுற சம்பலை மட்டும் எடுத்துப் பத்திரப்படுத்திக்கொண்டு போறியளே! ஏன்? வீட்டிலை கோழியளுக்குப் போடவா?''

அவன் வஞ்சகமில்லாத உணர்வோடுதான் கோட்டான்.

ஒருகணம் அவன் முகத்தை உற்றுப்பார்த்த அவர், திரும்பி சுற்றுமுற்றும் பார்த்து விட்டுக் கூறினார்.

''அது தம்பி, இஞ்சை கடையில இந்தச் சம்பலை நீங்கள் சும்மாதானே போடுறியள். இதை எடுத்துக்கொண்டு வீட்டை போனால், மத்தியானத்துக்கு ஒரு கறி மிச்சமதானே. சந்தைக்குப்போய் ஒரு மரக்கறி வாங்கிற காசை மிச்சம் பிடிச்சுச் சேர்த்துவைத்து ஆருக்கேன் வட்டிக்குக் குடுக்கலாமல்லோ...''

என்று கூறியவர், மீண்டும் அவனைப் பார்த்து,

''தம்பி! இனிமேல் எனக்கு சம்பல் போடேக்கை கொஞ்சம் உண்டனப் போடுறியே...''

அவரது வேண்டுகோளுக்குச் சம்மதமாக அருவருப்புடன் அவனையறியாமலே மெதுவாக... மௌனமாக ஆடிக் கொண்டது அவனது தலை.

ஆஞ்சநேயன்
புதுக்குடியிருப்பு

---

சந்தோஷத்திலொரு...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவனோ "அது வேணும்! அது வேணும்" என்று அடம்பிடித்தான்.

"எட! அறுவானே நித்திரையாய் கிடந்திட்டுச் செய்யிற வேலையைப்பார். அங்க அம்மாவும் அப்பாவும் தாலிகட்டிக் கொண்டிருக்கினம் அது முடிய வருவினம் கொஞ்சம் பொறு. நான் தம்பிக்கு கண்டோஸ் வாங்கித் தாறன்" எனப் பேரனைச் சமாளிக்கலானார்.

புதுமணத் தம்பதிகளான பழைய தம்பதிகள் வெட்கத்தாலும், நாணத்தாலும், அவமானத்தாலும் அசடுவழியப் பெயர்ந்தும் பெயர்ந்தும் குறுகலாயினர்.




# ஏன்? ஏன்?

குயிலே குயிலே கூவ்வதேன்?
குழந்தை கேட்டு மகிழவா?
மயிலே மயிலே ஆடுவதேன்?
மற்றவர் பூர்த்து மகிழவா?
நாயே வாலை ஆட்டுவதேன்?
நன்றியை எமக்குக் காட்டிடவா?
முயலே முயலே துள்ளுவதேன்?
முன்னேற எம்மை ஊக்கிடவா?
பசுவே பசுவே கத்துவதேன்?
பாலைக் கறக்க அழைத்திடவா?
பச்சைக் கிளியே அழைப்பதேன்?
பழுத்த பழத்தைக் காட்டிடவா?

*ரா. விஜயா, கரவெட்டி.*

ஒழுக்கமுடைமையே கல்வியின் நோக்கமாகும்
~ *அலி(ரலி)*

உழைப்பு வறுமையை மட்டும் விரட்டவில்லை. தீமையையும் விரட்டுகிறது.
*~வாட்டேர்*

# அன்னை

பத்துமாதம் அவள் வயிற்றில்
பத்திரமாய் எமைச் சுமந்து
உலகிற்கு உவந்தளித்த
உயர்தெய்வம் அவள்தானே!
அவள் உதிரத்தைப் பாலாக்கி
உணவாக எமக்களித்து
எம் கண்முன்னே உலவிவரும்
தெய்வமே எம் அன்னை!

*வ. சுஜீத்தா,*
*யா/வதிரி திரு இருதயக்கல்லூரி,*
*கரவெட்டி.*

# பொது அறிவு


1. உலகின் மிகப் பெரிய தீவு எது?
2. தீபமேந்திய சீமாட்டி என அழைக்கப்படும் பெண் தாதி யார்?
3. உலகில் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் நூல் எது?
4. இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு உழைத்த பெரியார் யார்?
5. இலங்கையின் புகழ்பெற்ற ஓவியம் எது?
6. இலங்கையின் தேசிய மலர் எது?
7. உலகின் புனிதபூமி என்றழைக்கப்படும் நகரம் எது?
8. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?

*S. அஜிதா,*
*யாழ்/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியசாலை.*

# இவை உங்களின் ஓவியங்கள்



நா. சௌர்த்தி
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



யோஜிதா
கிங்ஸ்டன் ச.பாலர் பாடசாலை.



சி. சுபிகா
ஏழாலை மகா வித்தியாலயம்.

# தொகைப்பெயர்ச் சொற்றொடர்கள்

| | |
|---|---|
| ✦ முத்தொழில் | ஆக்கல், காத்தல், அழித்தல் |
| ✦ முத்தமிழ் | இயல், இசை, நாடகம் |
| ✦ மூவேந்தர் | சேர, சோழ, பாண்டியர் |
| ✦ மும்முரசு | வீரமுரசு, கொடைமுரசு, மங்கலமுரசு |
| ✦ முக்கொடி | பனைக்கொடி, புலிக்கொடி, மீன்கொடி |
| ✦ முக்குணம் | சாத்துவிகம், இராசதம், தாமதம் |
| ✦ திரிகடுகு | சுக்கு, மிளகு, திப்பலி |
| ✦ நாற்பயன் | அறம், பொருள், இன்பம், வீடு |
| ✦ நால்வகை உபாயம் | சாமம், பேதம், தானம், தண்டம் |
| ✦ நாற்சொல் | பெயர், வினை, இடை, உரி |
| ✦ ஐம்பொறி | மெய், வாய், கண், மூக்கு, செவி |
| ✦ ஐம்புலன் | சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் |
| ✦ பஞ்சபூதம் | நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் |
| ✦ பஞ்சமா பாதகம் | கொலை, களவு, கள், காமம், குருநிந்தை |

# பதிர்


இராமசாமி பொன்னம்மா தம்பதியினருக்கு மூன்று மகள்மாரும் மூன்று மகன்மாரும் உள்ளனர். புது வருடத்திற்குப் புதுத்துணி வாங்க இராமசாமி தம்பதியினரும் அவர்களின் பிள்ளைகள் எல்லோரும், பிள்ளைகளின் கணவன்மார், மனைவிமார் எல்லோரும் அத்துடன் அந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள 3 பிள்ளைகளும் ஒரு வானில் நகரத்திற்குப் போனார்கள் எனின்,

அவ்வாறு துணிவாங்கப் போனோர் எத்தனை பேர்?

# கண்டுபிடியுங்கள்



பைனாக்குலரின் வழியே பறவைகளைப் பார்க்கும் சிறுவனுக்கு ஒரேமாதிரியான தோற்றம் கொண்ட பறவைகள் தென்பட்டன. அவை எவையாக இருக்கும் எனக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?




# பலரிடம் ஊழியம் புரிந்த கழுதை

ஒரு கழுதை சலவைத் தொழிலாளியிடம் ஊழியம் புரிந்து கொண்டிருந்தது. எப்பொழுது பார்த்தாலும் தன் முதுகின்மீது தாங்க முடியாதளவு துணி மூட்டையை வைத்துச் சுமக்கச் செய்கிறான் என்று கழுதைக்கு மனக்குறை. அதனால் ஒருநாள் கழுதை சலவைத் தொழிலாளியை விட்டு ஓடிப்போய் விட்டது.

பல இடங்களில் அலைந்து திரிந்த கழுதை பிறகு ஒரு செங்கல் சூளைக்காரனிடம போய்ச சேர்ந்தது.

சலவைத் தொழிலாளியாவது மென்மையான துணி மூட்டைகளையே கழுதையின் முதுகிலேற்றிச் சுமக்கவைத்தான். செங்கல் சூளைக்காரனோ, கரடுமுரடான செங்கற்களை அளவுக்கதிகமாக முதுகிலேற்றிக் கொடுமைப்படுத்தினான். சலவைத் தொழிலாளியோ வயிறாற தீனியாவது போட்டான். செங்கல் சூளைக்காரனோ அரை வயிறு தீனிகூடப் போடவில்லை.

பழைய சலவைத் தொழிலாளியே தேவலை போலிருக்கிறதே என எண்ணிய கழுதை ஒருநாள் செங்கல் சூளைக்காரனை விட்டும் ஓடிவிட்டது.

இவ்வாறு கழுதை ஒருவர் மாறி ஒருவர் எனப் பலரிடம் சென்று ஊழியம் புரிந்தது. செல்லுமிடமெல்லாம் உழைக்காமல், உடல் அலுக்காமல் வேலைசெய்ய வேண்டும் எனக் கழுதை எதிர்பார்த்தது.



ஆனால் தீனிமட்டும் வயிறு நிறைய வேண்டும் என எதிர்பார்த்தது. ஆனால் அது எதிர்பார்த்தது போன்ற சுக வாழ்வு எங்கும் அமையவில்லை.

கடைசியாக கழுதை ஒரு தோல் வியாபாரியிடம் சென்று சேர்ந்தது. அங்கு வேலைப்பழு சற்றுக் குறைவாக இருந்தது. மற்ற இடங்களைவிட அந்த இடம் திருப்பதிகரமாகவே இருக்கிறது என கழுதை நினைத்தது.

ஒருநாள் கழுதையின் உடல் நலம் பாதித்தது. அதனால் தொடர்ந்து சில நாட்கள் வேலைசெய்ய முடியவில்லை.

கழுதையின் நிலையைக் கவனித்த தோல் வியாபாரி, "இந்தக் கழுதையால் இனி பழைய தெம்புடன் வேலைசெய்ய முடியாது. இதை வைத்துக்கொண்டு தொடர்ந்து தீனி கொடுப்பது வீண் செலவு" என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

பிறகு கழுதையைக் கொன்று அதன் தோலை உரித்து நல்ல விலைக்கு விற்றுவிட்டான்.

வாழ்க்கை என்பது கஷ்டங்களும் நஷ்டங்களும் நிறைந்ததாக இருக்கும். அந்தக் கஷ்ட நஷ்டங்களுக்கு இடையில் சுகத்தையும் இன்பத்தையும் தேடி அமைத்துக்கொள்வதுதான் வாழ்கையின் இலட்சியமாக இருக்கவேண்டும்.

# விடுகதைகள்

1. அம்மா படுத்திருக்க மகள் ஓடிக்கொண்டிருப்பாள். அவள் யார்?
2. அனல்மேல் கறுப்புக்குதிரை, அதன்மேல் வெள்ளையன் ஏறி ஏறிக் குதிக்கிறான். அது என்ன?
3. அண்ணன் தம்பி ஐவர், அண்ணன் ஆதரவு தராவிட்டால் தம்பீமார் செயல்பட மாட்டார்கள். அது என்ன?
4. அந்தரத்தில் ஆடுவான். ஆனந்தம் தருவான். அவன் யார்?
5. அவனுக்கு ஆயுள் பன்னிரு மாதம். அது என்ன?
6. அண்ணன் தம்பி ஒன்பது பேருக்கும் ஒன்பது குணம். அவர்கள் யார்?

# விடைகள்

**பொது அறிவு**
1. கிறீன்லாந்து தீவு
2. புளோரனஜ் நைட்டிங்கேல்
3. திருக்குறள்.
4. அறிஞர் சித்திலெப்பை
5. சிகிரியா ஓவியம்
6. நீலோற்பலம்
7. ஜெருசலேம்
8. ஆனந்த சமரக்கோன்

**விடுகதைகள்**
1. அம்மிக்குளவி
2. தோசைக்கல்-தோசை
3. பெருவிரல்
4. ஊஞ்சல்
5. வருடம்
6. நவக்கிரகம்

புதிர் - 32

கண்டுபிடியுங்கள் 4-5

# மாறவேண்டிய கருத்துருவாக்கங்கள்

பெண்கள் எவ்வளவுதான் முன்னேற்றங் கண்ட பொழுதிலும் பெண்கள் பற்றிய சமூகபார்வை என்பது இன்னமும் சாபக்கேடானதாகவே இருந்து வருகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன் 'பெண்ணிற் பெருத்தக்க யாவுள' என்று வள்ளுவர் எழுப்பிய கேள்வி முதலாக இன்றுவரை பெண்ணினம் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

பெண்களின் மாற்றங்களும், முன்னேற்றங்களும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவில் இருந்தாலும் பெரும்பாலும் துயரமும் ஆதங்கமும் நிறைந்ததாகவே இருக்கின்றன. அண்மையில் நண்பர் ஒருவர், 'நீங்கள் (பெண்கள்) எல்லாம் நத்தைகள். ஓட்டுக்குள்தான் இருக்கவேண்டும்' என்று குறிப்



பிட்டார். இது அவரது தனிப்பட்ட கருத்து என்றாலும்கூட சமூகத்தில் காலம் காலமாய்ப் பெண்கள் பற்றிய பார்வை இப்படித்தான் இருந்து வருகிறது என்பதற்கு இக்கூற்று சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது.

பெண்களின் ஆற்றல்களை பலமாக அங்கீகரிக்க பலரும் விரும்புவதில்லை. உதாரணமாக, யாருக்கும் அடங்காமல் அட்டகாசம் புரிந்துகொண்டிருந்த கொம்பன் யானையை தன் வலிமையால் அடக்கிக்காட்டிய வீரப்பெண் அரியாத்தை. ஆனால் இந்தப் பெண் தெய்வ அருளாலேயே யானையைப் பணிய வைத்ததாகக் கூறுவோரும் உள்ளனர்.

அதாவது பெண்ணின் ஆற்றலை ஜீரணித்துக்கொள்ளமுடியாத நிலையில் வெளிப்படுத்தும் கருத்தே இதுவெனக் கொள்ளலாம். தமிழ் சமூகத்தில் மட்டுமல்ல உலகிலுள்ள பெரும்பாலான இனச் சூழலில், சமூகத்தில் இப்படியான கருத்துக்கள் இருப்பதை நாம் அறியலாம்.

பிரான்சின் மது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கரங்கள் நீண்டு விரிந்து தெரிந்தபோது ஆர்க் எனும் கிராமத்திலிருந்து ஆவேசமாய்ப் புறப்பட்டு ஆக்கிரமிப்பாளர்களை மோதி வென்று படை நடாத்திய வீரப்பெண் ஜோன் ஓப் ஆர்க் பின்னாளில் சூனியக்காரியென்று எள்ளி நகையாடப்பட்டு, உயிருடன் த மூட்டிக் கொளுத்தப்பட்டாள் என்பது வரலாறு.

இன்றைக்கும் பல கிராமங்களில் பெண் பிள்ளைகள் பரீட்சைகளில் கூடிய பெறுபேறு பெற்றால், விளையாட்டுக்களில் பரிசுகள் பெற்றால் அதைப் பிள்ளையின் கெட்டித்தனம் என்று மெச்சுவதை விடுத்து கடவுளின் கிருபை என்று மாற்றுவதை நாம் கண்கூடாய் பார்க்கிறோம். காலம் காலமாகப் பெண்கள் பற்றி ஊன்றப்படுகின்ற கருத்துக் கருவூலகங்களின் தோற்றப்பாடுகளே இவைகள்.

பெண்களின் உலகம் விரிவடைந்து . வருகின்றது. பெண்கள் முன்னேறி வருகின்றார்கள். பெண்கள் சாதித்து வருகின்றார்கள். ஆனாலும் பெண்கள் மீதான சமூகப் பார்வை என்பது மாற்றம் காணாததாகவே இருக்கிறது.

இத்தகைய நிலைக்கு எந்த ஒரு தனிநபரையும் குற்றவாளியாகக் கூறமுடியாது. சமூகத்தில் பெண்கள் பற்றி ஆழப்பதிந்திருக்கும் அடிப்படைக் கருத்தில் மாற்றம் காணப்படவேண்டும். பெண் என்பவள் யார்? இந்த உலக இயக்கத்தில் பெண்ணின் பங்களிப்பு என்ன? அவள் தனது பங்களிப்பை முழுமையாகச் செய்யவிடாமல் தடுத்து நிற்கும் காரணிகள் என்ன? என்பவை பற்றி சிந்திக்கவேண்டியது அவசியமாகின்றது.

எமது தேசியத் தலைவர் குறிப்பிட்டதுபோல ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது. எனவே படைப்பியல் ரீதியாக பெண் வேற்றுமை காட்டப்பட வேண்டியவளல்ல, மாறாக பெண் என்பவள் சமூகச் சுழற்சிக்கு உந்து சக்தியாகத் திகழ வேண்டியவள்.

ஆனால் மிகவும் துரதிஷ்டவசமாக பெரும்பாலான பெண்கள் தம் நிலை உணர்வதில்லை. அகங்கள் குறுகியிருப்பதால் முன்னேற்றங்கள் தடைப்படுகின்றன. முன்னேற்றங்கள் தடைப்பட்டு குறுகிய வட்டத்துக்குள் வாழும்போது அவள் தன்னாலும் பிறராலும் சுமையாக உணரப்படுகிறாள். இந்த உணர்வு காலப்போக்கில் பெண்ணுக்குள் தாழ்வுச் சிக்கலை உண்டுபண்ணுகிறது.

காலம் காலமாய் பெண் பற்றி ஊன்றப்படும் பிற்போக்கான கருத்துக்களும் பெண்ணுக்குள் உருவாகும் தாழ்வுச் சிக்கலும் சேர்ந்து அவளை அடிமைப்படுத்தி விடுகின்றன. அடிமையாகிப் போகும் மன நிலை காலப்போக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதுவே வாழ்வாகிப் போகிறது.

உண்மையில் பெண் என்பவள் தனக்குள் இருக்கின்ற திறமையை, ஆற்றலை உணர்ந்துகொள்ளக்கூடியவளாக வேண்டும். சிந்தனைத் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். தலைமைத்துவப் பண்புகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தன்னம்பிக்கை அற்று ஒதுங்கிக்கொள்ளும் நிலையை மாற்றவேண்டும்.

நிர்வாகம் என்பது பெண்களுக்கும் ஏற்ற விடயம் தான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்ற கேள்விக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் என்றாலும் பதிலளிக்க வேண்டும்.

உலக சனத்தொகையில் சரிபாதி பெண்கள் என்கிறார்கள். ஆனால் முன்னேற்றங் காட்டும் அல்லது ஆற்றல்களை வெளிப்படுத்தும் பெண்களின் தொகை மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது. உலகம் அறிவியலில் எவ்வளவோ தூரம் முன்னேறிவிட்ட போதிலும் பிற்போக்கான எண்ணங்களையும், சிந்தனைகளையும் பற்றிப்பிடித்து தொங்கும் பெண்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இன்றைக்கும் சீதனப் பிரச்சினையால் திருமணமாகாத பெண்களின் பட்டியல் இருக்கின்றது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றும் முகவர்களை நம்பி நடுத்தெருவில் நிற்கும் பெண்களின் கதைகள் வெளிவருகின்றன. காதலித்து ஏமாற்றப்படும் பெண்கள் இருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் பொழுது பெண்களின் உலகம் அறியாமையிலிருந்து இன்னமும் முற்றாக விடுபடவில்லை என்றே கூறமுடிகிறது.

குடும்பம் பல பெண்களுக்கு சுமையாக அழுத்துகிறது. யாராவது என் பாரத்திற் பாதியைச் சுமக்க முன்வரமாட்டார்களா? என்று ஏங்கும் பெண்கள் பலர் இருக்கின்றார்கள். பொருளாதார ரீதியாக சுரண்டப்படும் பெண்கள் இருக்கின்றார்கள்.

பெண்கள் தம் மனவுலக இருளில் இருந்து வெளிவர வேண்டும். ஒளிமயமான எதிர்காலத்தை சிந்திக்கவேண்டும். எமது வாழ்வும் வலுவும் எமது கரங்களிலேயே தங்கியிருக்கின்றது. ஆரோக்கியமான சமூகத்தை - தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் பெண்கள் அகவிடுதலையடைய வேண்டும். பெண்கள் பற்றி சமூகத்தில் நிலவுகின்ற பிற்போக்குத்தனமான கருத்துக்கள் களைந்தெறியப்பட வேண்டும்.

பெண்களின் ஆற்றல்களும், ஆளுமைகளும் வெளிக்கொண்டு வரப்படவேண்டும். தம்மது ஆழப் புரையோடி நிற்கும் சமூகக் கொடுமைகளும் அநீதியுமான ஒடுக்குமுறையைப் பெண்கள் உடைத்தெறிய வேண்டும்.

# மகளிர் உலகம்



## ஓ பெண்ணே!



தீயிற்கு வாழ்க்கைப் பட்டாலும்
விறகு கூட விட்டு வைக்கிறது
அதன் சாம்பலை....
பெண்ணே!
உனக்குப் பின் உயிர் வாழ
என்ன வைத்திருக்கிறாய்?
ஆரம்பிக்கட்டும் உன் வேள்வித் தீ!

உன்னைச் சுற்றிலும்
எதிர்ப்புக்கள் இருக்கிறது
என்றால் தளராதே!
நீ சுறுசுறுப்புடன்
முன்னேறிக் கொண்டு
இருக்கின்றாய் என்பதே
அதன் அர்த்தம்!

கார்மேலர் மரிய செல்வம்.

## பயனுள்ள குறிப்புகள்

* கத்தரிக்காய், வெண்டைக்காய், பீன்ஸ் ஆகியவற்றை பொரியலாகச் செய்யும்போது அதில் சிறிது சோள மாவோ, கடலை மாவோ, சோயா மாவோ சேர்த்தால் பொரியலின் சுவை கூடும். உடலுக்கும் நல்லது.

* வாய்ப்புண் ஏற்பட்டால், நெய்யை உருக்கி, வாயில் ஊற்றி சிறிதுநேரம் அப்படியே வைத்திருந்து, நாக்காலேயே வாய் முழுவதும் தடவிவர, மூன்றே வேளைகளில் புண் மறைந்துவிடும்.

* அடுப்படியில் நீங்கள் பயன்படுத்தும் கைபிடி துணி சாதாரண சோப்புக்கெல்லாம் செவி சாய்க்காது. சோடாப் பவுடர் வாங்கி வைத்து மாதத்திற்கு ஒருமுறை தண்ணீரில் சோடவைக் கலந்து இந்தத் துணிகளைப் போட்டு அடுப்பில் ஏற்றிக் கொதிக்க வையுங்கள். அப்போதுதான் பிசுக்கெல்லாம் நீங்கி துணி பளீச் ஆகும்.

* துணிச்சாயம் வேறு துணிகளில் ஒட்டிவிட்டால், வெங்காயத்தை அரைத்து சாயம் ஒட்டியுள்ள இடங்களில் தடவி 10 நிமிடம் வைத்து பின் சோப்புப் போட்டு துவைத்தால் கறைகள் நீங்கும்.


* சுரைக்காயின் உட் பகுதியை அரைத்து, அதன் சாற்றைத் தலையில் தடவி அரைமணி நேரம் ஊற விட்டுக் குளிக்க தலைமுடி மென்மையாகிவிடும். இரண்டு மாதங்களில் நல்ல வளர்ச்சியும் காணும்.

* நீங்கள் பயன்படுத்தும் கைப்பைகளின் ஜிப் எளிதாகத் திறக்க வரவில்லையென்றால் ஜிப்பின்மீது மெழுகுவர்த்தியைத் தேய்த்துப் பாருங்கள். ஜிப் எளிதாகத் திறக்கும்.

* பேனாமை கறை படிந்த துணிகளை துவைப்பதற்கு முன் கறைகளின் மேல் சிறிது தயிரைப் பூசி துவைத்தால் கறை உடனே நீங்கவிடும்.

## சுமைத்துச் சுவைப்போம்

### கோதுமை அல்வா



**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| கோதுமை மா | - 500g |
| சீனி | - 500g |
| நெய் | - 250g |
| முந்திரிப்பருப்பு | - 50g |
| கேசரிப்பவுடர் | - அளவுக்கு |
| ஏலம் | - அளவுக்கு |

செய்முறை:-

கோதுமை மாவை சிறிது நீர்விட்டு கூழ் போலக் கரைத்துக்கொள்ளவும். பின் சீனியில் சிறிது நீர்விட்டு பாகு காச்சவும். பாகாகக் காச்சியதும் அதனுள் மாக்கலவையை ஊற்றிக் கிளறவும். பின் கேசரிப்பவுடர், ஏலப்பொடி சேர்த்துக் கிளறவும். இறுகிய பதம் வந்ததும் நெய், முந்திரிப்பருப்பு சேர்த்துக் கிளறி நன்கு இறுகித் திரண்டதும் இறக்கி தட்டில் கொட்டி மட்டப் படுத்தி துண்டுகளாக வெட்டிப் பரிமாறலாம்.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும்

## கடற்பாசிகளின் பொருளாதார முக்கியத்துவமும் அவற்றின் வளர்ப்பும்

(iii) பண்ணைகளில் கடற்பாசிகளை வளர்த்தல்

கடற்பாசிகளை பண்ணைகளில் வளர்ப்பது அண்மைக்காலத்தில் ஏற்பட்டதல்ல. கிட்டத்தட்ட 300 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. **China**, **Japan** போன்ற நாடுகளில் இத்தகைய கடற்பாசிகள் பெருமளவில் வளர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு பாசியினதும் குணாதிசயங்களுக்கு ஏற்ப அவற்றின் வித்திகளின் சேகரிப்பு, பிரிவிலிகளை வளர்க்கும் முறை வேறுபடும்.

**Porphyra** வளர்ப்பு **'Nori Culture'** எனவும்

**Laminaria** வளர்ப்பு **'Kombu Culture'** எனவும்

**Undaria** வளர்ப்பு **'Wakami'** எனவும் அழைக்கப்படும். இவற்றைவிட **Gracilaria**, **Gelidium** போன்ற சிவப்பு அல்காக்களும் வளர்க்கப்படுகின்றன. **Korea, Philippines** போன்ற நாடுகளும் இத்தகைய பண்ணை வளர்ப்புகளில் ஈடுபடுகின்றன.

சீனாவில் **Gracilaria** 30 வருடங்களுக்கு மேலாக வளர்க்கப்படுகிறது. இந்த வளர்ப்பின்போது இதன் வித்திகளில் இருந்து சிறிய பிரிவிலிகளை உருவாக்குதல் 4 படிகளில் நடைமுறைப்படுத்தப்படும்.

a) வித்திகளைச் சேகரிப்பதற்குரிய ஒரு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்தல். இது **Intertidal flat area** வில் அடிப்பகுதி வன்மையாகவும், 1.01 - 1.02க்கும் இடைப்பட்ட அடர்த்தியுள்ள தெளிவான கடல்நீரைக் கொண்டதாயும் இருக்கவேண்டும். இவ் விடத்தைச் சுற்றிவர 20-30cm உயரமான அணைக்கட்டு ஏற்படுத்தப்படும்.

b) வித்திகள் இணைந்துகொள்வதற்குப் பொருத்தமான மேற்பரப்பு உடைய அடிப்படைப் பொருட்களான **(substratum)** கற்கள், உடைந்த முருகைக்கற்கள், சிப்பிகள் **(corals, shells)** இடப்படும். ஒவ்வொரு கல்லும் கிட்டத்தட்ட 0.5 kg உடையதாக இருக்கவேண்டும். 600 தொன் **(tons)** கற்கள்/ ha இல் இடப்படும். சிப்பி ஒடுகளாயின் 120 tons /ha இடப்படும். அண்மையில் செயற்கை நார்கள், நைலோன், பொலித்தீன், கயிறுகள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. பாவனைக்குதவாத மீன்பிடி வலைகளும் உபயோகிக்கப்படுகின்றன.

c) முற்றிலும் முதிர்ச்சியடைந்த பெற்றோர் தாவரங்கள் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். இவை சிவப்பு அல்லது கபில நிறமாகக் காணப்படும். இவற்றின் மேற்பரப்பில் வித்திக்கலனகள் இலகுவில் அடையாளம் காணக்கூடியதாக இருக்கும்.


d) இவற்றிலுள்ள அழுக்குகள் துப்பரவான கடல் நீரினால் கழுவப்பட்டு மூங்கில் தடிகளினால் ஆக்கப்பட்டு திரைகளில் 2-4 மணி நேரம் காற்றில் உலரவிடப்படல் வேண்டும். இவற்றின் மேற்பரப்பில் சுருக்கங்கள் விழும்போது இவை தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் **(selected site)** அடிப்படைப் பொருளில் பரப்பப்படும். 300Kg/ha தாய்த்தாவரங்கள் தேவைப்படும். **Gracilaria** தாய்த் தாவரங்கள் கடல் நீரில் வைக்கப்பட்டதும் பெருமளவு வித்திகளை வெளிவிடும். இவை ஒருநாளில் அடிப்படையில் ஒட்டிக்கொள்ளும். இயற்கைச்சூழலில் வித்திகள் விரைவாக் முளைக்கும். 5நாட்களுள் தட்டுருவான பிரிவிலிகள் உருவாகும்.

இன்னொரு முறையில் காற்றில் உலரவிடப்பட்ட கடற்பாசிகள் ஒரு பாத்திரத்துக்குள் **(vat)** போடப்பட்டு கடல் நீருடன் சேர்த்து ஒரு தடியால் வேகமாகக் கலக்கப்படும். சுமார் 2 மணித்தியாலங்களுக்குப் பின் பெருமளவு வித்திகளைக் கொண்ட கடல் நீரானது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ப்பு இடத்தில் **(selected site)** தெளிக்கப்படலாம் **(sprayed)**.

**Chiang (1981)** என்பவரின் ஆய்வின்படி **Taiwan** இல் **Gracilaria** இவ்வாறு வளர்க்கப்பட்டு 12 000Kg / 300ha அறுவடை செய்யப்படுகிறது. சீனாவின் வடபகுதியில் குளங்களில் மீன் வளர்ப்புடன் **Gracilaria** வளர்ப்பு சேர்த்து நடத்தப்படும். 5-6 தொன்/ha பிரிவிலிகள் குளங்களில் இடப்பட்டு இரசாயன வளமாக்கிகள், பன்றி உரம் என்பன இடையிடையே சேர்க்கப்படும். 30-45 நாட்களுக்கு ஒருமுறை பிரிவிலிகளின் பல பாகங்கள் அறுவடை செய்யப்படும். மீதி தொடர்ந்து stock ஆக விடப்படும். அண்மைக்காலத்தில் **Gracilaria** பண்ணை வளர்ப்பு **(farming)** பிரபலமான கைத்தொழிலாக வளர்ந்துள்ளதற்குக் காரணம் ஏகார் **(Agar)** உற்பத்தியின் தேவை அதிகரித்தமையாகும். கூடுதலான **Gracilaria** உற்பத்தி செய்யப்படும் வலயம் **Southern China** ஆகும்.

**Porphyra** வளர்ப்பு 1600இல் ஆரம்பிக்கப்பட்டது. ஆதியில் சிறு தடிகளைக் கொண்ட கட்டுகள் **(bundles of twigs)** குடாக்களில் **(Estuaries)** வைக்கப்பட்டு வித்திகள் அவற்றில் படியவிடப்பட்டன. பின் வித்திகள் படிவதற்கு மூங்கில் தடிகள் **(bamboo twigs)** உபயோகிக்கப்பட்டன. தற்போது வலைகள் **(Nets)** பாவிக்கப்படும்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் இதன் உற்பத்தி 6மடங்கு அதிரித்துள்ளது. சுத்தமான சிப்பியோடுகளில் **(Oyster shells)** வித்திகள் சேகரிக்கப்பட்டு வலைகளில் படிய விடப்படும். மென் சூடான நீர், நீண்ட ஒளி ஆவர்த்தனம் **(Long photo periods)** என்பன வெற்றிகரமான **Nori Culture** க்கு தேவை. அதன் வாழ்க்கை வட்டம் பற்றிய அறிவு **(Life Cycle)** இதன் உற்பத்தியில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.



Nori Culture

(தொடரும்)

இந்திராணி சிவானந்தா (M.Sc.)
விரிவுரையாளர்
தாவரவியல் துறை,
யாழ். பல்கலைக் கழகம்

என்னும் முகவரிக்கு 26.08.2004 இற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு தலா 100 ரூபா பரிசாக வழங்கப்படும்.

**புதிர் இல:106**

**சரியான விடை:**
**மகனுடைய வயது 36**
**தந்தையினுடைய வயது 63**

சரியான விடையெழுதி அனுப்பியோரில் பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்.

1. **P.புவனேந்திரன், இலங்கை மின்சாரசபை(C.E.B) சுன்னாகம்.**
2. **நவரட்ணவேல் சஞ்சயன், இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.**
3. **சின்னத்துரை பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.**

# விஞ்ஞானத் துளிகள்

**இவ்வாரப்.புதிர் இல:107**

நயாகரா நீர்வீழ்ச்சி (Niagara falls) எங்கு உள்ளது? "நயாகரா" என்பதன் அர்த்தம் என்ன?

இப்புதிருக்கான சரியான விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி,

பத்திராதிபர்
யாழ். விஞ்ஞானச் சங்கம்
மே/பா. தாவரவியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

புதிர் இல: 106 இற்கான பரிசுப்பணத்தை அன்பளிப்புச் செய்தோர்:
**விண்மீன் அங்காடி**
பிரதான வீதி
நெல்லியடி, கரவெட்டி.

குறிப்பு: புதிர்ப்போட்டிகளில் வெற்றி பெற்றோர் தமக்குரிய பரிசுப்பணத்தினை வார நாட்கள் தோறும் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 107**

சரியான விடை :..............................
முழுப்பெயர் :..............................
முகவரி :..............................
கையொப்பம் :..............................

# வெந்தயத்தின் மகிமை

சைவ உணவானாலும், அசைவ உணவானாலும் சில முக்கிய துணை மூலிகைப் பொருட்களை நாம் சேர்க்கத்தான் வேண்டும். இவை மூலிகைப் பொருட்கள் என்று தெரியாமலே நாம் சேர்த்து கமகம என்று இருக்க சந்தோஷமாக சாப்பிடுகிறோம். உடலுக்கு இது நல்லது, கெட்டது என்று பலரும் பார்ப்பதில்லை.

எந்த உணவையும் சந்தோஷத்துக்காக சாப்பிடக்கூடாது. எந்த உணவும் உடலைக் கெடுப்பதில்லை. சில உணவுகளைப் பார்த்த மாத்திரத்தில் தவிர்ப்பதும் தவறு. சில உணவுகளை தொடர்ந்து சாப்பிட்டு உடலைக் கெடுப்பதும் சரியல்ல.

இதோ வெந்தயம், கடுகு, மல்லி, சீரகம், பெருங்காயம் போன்றவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றிலும் மருத்துவ குணங்கள் உள்ளன. இது பலருக்குத் தெரியாது. பலர், கடுகு போட்டாலே சாப்பிடமாட்டார்கள். சிலருக்கு பெருங்காய வாசனையே பிடிக்காது. சிலருக்கு பொங்கலில் மிளகு போட்டால் பிடிக்காது. சிலர் இஞ்சி என்றாலே முகத்தைச் சுளிப்பர்.

ஆனால் இதெல்லாம் நமக்குக் கிடைத்துள்ள, நம்மை அறியாமலேயே வயிற்றுக்குள் போகும் மூலிகைச் சத்துக்கள்.

வெந்தயத்தின் மகிமை தெரியுமா? இப்போது வெந்தய தோசை முதல் வெந்தய சூப் வரை வந்து விட்டது. இதை வாங்கிச் சாப்பிட்டு ஆனந்தம் காண்கின்றனர் பலரும். உண்மையில் வீட்டில் எல்லா வகை உணவிற்கும் வெந்தயம் போடுகின்றனர். இது வயிற்றுக்கும் நல்லது. ஜீரண சக்தி உட்பட பலவகையிலும் நல்லது.

* மிகவும் திடமான கனிமச்சத்து கொண்டது வெந்தயம்.
* வெந்தய விதைதான் பல உணவுகளிலும் பயன்படுத்தப்படுகிறது.
* வெந்தயக்கீரையை மசியல் செய்து சாப்பிட்டால் மந்தம், வாயு, இருமல், வயிற்று வலி போகும்.
* வெந்தயப் பொடி செய்து சாப்பிடலாம். இது சர்க்கரை வியாதி, நரம்பு பிரச்சினைகளுக்கு நல்லது.
* வெந்தய தோசை உட்பட பலவகை உணவுகளும் வெந்தயத்தில் வந்துவிட்டன.
* லேட்டஸ்டாக வெந்தயசூப் வந்து விட்டது. வழக்கமாக, தக்காளி சூப், வெஜிடபிள் சூப் என்பது போய் இப்போது வெந்தயத்துக்கும் மவுசு வந்துவிட்டது.

இவ்வளவு மருத்துவ குணம் வாய்ந்த வெந்தயம் எவ்வளவு நல்லது என்று இனியாவது நீங்கள் தெரிந்து கொண்டு சாப்பிட்டால் உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் நல்லது.

* * *

# இரைச்சல் தரும் தொல்லைகள்



இரைச்சல் - சத்தம் இதுதான் பல உடல் தொல்லைகளுக்கு மூலகாரணம். பல சிறுசிறு உடல் கோளாறுகளுக்கு இதமான சூழ்நிலையே துணைமருந்து. ஆனால், இப்போதுள்ள சுற்றுச்சூழல் எல்லாமே அமைதிக்கு எதிரிகள் தான்.

எங்கும் காட்டுக்கத்தல், எங்கும் எரிச்சலூட்டும் இரைச்சல்கள், யாரிடமும் உரக்கப் பேசும் பழக்கவழக்கங்கள். இதிலிருந்து நாம் விடுபட்டே ஆகவேண்டும். எவ்வளவோ நாடுகளில் இந்த இரைச்சலை ஒடுக்கிவிட்டனர். காரணம், இதை ஒரு நாகரிகப் பழக்கமாகவே கொண்டுவந்து விட்டனர். நாம்தான் மாறமாட்டோம் என்கிறோம். எதிலும் இரைந்து பேசி நாம் பழகிவிட்டோம். ஆனால் நாமே, ஐம்பதைத் தாண்டியபின்னர், யாராவது சத்தம் போடடால் எரிச்சல்படுகிறோம்.

இன்று வீட்டிலும் சத்தம், வெளியிலும் சத்தம், அலுவலகத்திலும் சத்தம், உறவினரை, நண்பரைத் தேடிப்போனாலும் சத்தம். எங்கும், எதிலும் எப்போதும் சத்தம் என்றாகிவிட்டது. இதில் லேட்டஸ்ட் ஹெறுப்பூட்டும் சமாச்சாரம் மொபைல் போன்தான். யாரைப் பார்த்தாலும் 'செல்' வைத்திருக்கின்றனர். ஆனால் அதை எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்ற நாகரிகம் கூட தெரியாமல் இருக்கின்றனர் என்பது தான் வேதனை.

சத்தத்தைப் பொறுத்த வரை இத்தனை டெசிபல் அளவுதான் இருக்கவேண்டும் என்ற அளவீடு இருக்கிறது. ஆனால், நாம் எந்த சூழ்நிலையிலும் சத்தத்தோடுதான் காலத்தைத் தள்ள வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் நம் பழக்கவழக்கங்கள் தான். நம் வாகனங்கள் தான். நம் டிஜிட்டல் மியூசிக் சிஸ்டங்கள் தான். நம் வீட்டு உபயோக சாதனங்கள், நம் அலுவலக சாதனங்கள்தான்.

**நம்மூரை எடுத்துக்கொண்டால், லேட்டஸ்ட்டான இரைச்சல் என்றால் இரண்டில்தான். ஒன்று செல் பேசுவோர், இன்னொன்று வாகன இரைச்சல்.**




ஏன் இதெல்லாம் வெளிநாடுகளில்கூடத்தான் இருக்கின்றன. அவர்களெல்லாம் போதுமான சத்தத்துடன் தானே புழங்குகின்றனர். நம்மால் ஏன் முடியவில்லை? இதை நாம்தான் பலமுறை கேட்டுக்கொள்ளவேண்டும். இப்படி மனிதர்களாலும், சாதனங்களாலும் ஏற்படும் சத்தம்தான் பலவகையில் நம் உடலை, மனதைப் பாதிக்கிறது. அதன் மூலம் ஸ்ட்ரெஸ் முதல் ஸ்ரோக் வரை வருகிறது. சத்தம் நேரடியாக மாரடைப்பை ஏற்படுத்தாது. அதன் மூலம் தொடர்ச்சியாக உடல்கோளாறு தொடர்ந்து கடைசியில் பெரிய பிரச்சினையில் வைத்துவிடும். அப்போதுதான் டாக்டர் சொன்னபடி சத்தமேயில்லாத அறையில் அடைந்து கிடக்கவேண்டியதாகிவிடுகிறது.

சாதனங்கள் மூலம் ஏற்படும் சத்தத்தைப் போக்க, உரிய கருவிகளை வைக்கலாம். இதன்மூலம் சத்தமே வராமல் செய்யலாம். அதுபோல ரெலிபோன் மணி அடிப்பது, கொம்பியூட்டர் சத்தம், மற்ற சாதனங்களின் சத்தம் ஆகியவற்றைப் போக்க நாம் ஏதாவது மாற்று ஏற்பாடு செய்யமுடியும். ஆனால், மனிதன் போடும் சத்தத்தைக் கட்டுப்படுத்த மனிதன் தானே ஏதாவது செய்யவேண்டும்.

தூங்கி எழுந்ததில் இருந்து மீண்டும் தூங்கப் போகும் வரை எல்லாவற்றிலும் சத்தம் தேவைப்படுகிறது. அமைதியாக எழுந்து, அமைதியாகக் குளித்து, சாப்பிட்டு, அலுவலகத்தில் அமைதியாக வேலைசெய்து அமைதியாகத் திரும்பும் மனிதர் யாரையாவது பார்த்திருக்கிறீர்களா? முழு அமைதி தேவையில்லை. முடிந்தளவு சத்தத்தைக் குறைத்தாலே போதுமானது.

### சத்தத்தைக் குறைக்க

* நாம் வீட்டில் செய்யும் அன்றாட வேலைகளை கண்காணித்தாலே, சத்தத்தைக் குறைக்க வழி கிடைத்துவிடும்.

* இரைந்து பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் கோபம் வந்தாலும்.

* எல்லாவற்றிலும் திட்டமிடுதலைப் பின்பற்றினால் பதட்டம், அதனால் சத்தம் போடுவதைத் தவிர்க்கலாம்.

* பொறுமை மிக முக்கியம். அது இருந்தால் சத்தம் வரவே வராது.

* மனதை அடக்கும் திறமை உள்ளவர்களால் சத்தத்தைத் தவிர்க்கலாம்.

* யோகா போன்றவற்றைக் கடைப்பிடிப்பது நல்லது.

### செல் வாகன இரைச்சல்

நம்மூரை எடுத்துக் கொண்டால், லேட்டஸ்டரான இரைச்சல் என்றால் இரண்டில்தான். ஒன்று செல் பேசுவோர் இன்னொன்று வாகன இரைச்சல். பொது இடங்களில் வாகன இரைச்சல் அதிகமாக இருக்கிறது என்றாலும் அதைக் கட்டுப்படுத்த பொலிஸாரால் தான் முடியும்.

சில வாகனங்கள் புகை மாசுடன், இரைச்சல் மாசும் சேர்ந்து சுற்றுச்சூழலை அதிகமாகப் பாதிக்கிறது. இதை கண்டிப்பாக நாம் தவிர்த்தாக வேண்டும்.

இன்னொன்று செல் பேசுவோரின் இரைச்சல். சிலர் பொது இடம் என்றுகூடப் பார்க்காமல் சொந்தக்கதை, ஊர்க்கதை என்று பெரிசாக அளக்க ஆரம்பித்துவிடுவார்கள். சுற்றிலும் பலர் இருக்கின்றனர் என்றுகூடப் பார்க்காமல் 'ஓ...' என்று இரைந்து பேசுவார்கள். படித்தவர்கள் கூட இப்படித்தான் இரைந்துபேசும் பழக்கம் உள்ளவர்களாக இருக்கின்றனர். இது அவர்கள் உடல் நலனுக்குப் பாதிப்பு என்பதைவிட, மற்றவர்களின் காதுகளுக்கு கேடு என்பதை உணரவேண்டும்.

## குருப் பெயர்ச்சி...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இக்காலம் உங்கள் கௌரவம், செல்வாக்கு, சுகம் இவைகளில் நல்ல மாற்றத்தையுண்டாக்கும்.

30.09.2004 முதல் 09.12.2004 வரை அத்தம் நட்சத்திரம் சந்திரன் சாரத்தில் செல்லும் குரு. சந்திரன் அட்டம அதிபதி என்பதால் வளர்பிறை காலத்தில் கெடுதல் பலன்களும், தேய்பிறை காலத்தில் ஏதும் செய்யாமலும் விட்டுவிடுவான் இந்தக் குரு. பிறகு சித்திரை நட்சத்திரம் சார செவ்வாய் சார குரு உங்களுக்கு நன்மைகளையே செய்யக்கூடியவன். 09.12.2004 முதல் 15.09.2005 வரை உள்ள காலமிது. இதில் வக்ரம் உள்ள காலமும் அடங்கும்.

### மகரம்

உங்கள் மகர ராசிக்கு இந்தக் குரு 3-12க்கு உரியவன். 3என்பதும் மறைவிடம் தான். 12 என்பதும் மறைவிடம் தான். எனவே உங்களுக்கு குரு எப்போதும் நல்லவன் அல்ல. குரு ஒரு முழு சுபக்கிரகம் அவ்வளவுதான். ஒரு சுபக்கிரகமான குரு இப்போது உங்கள் 4வது வீடாகிய பாக்கிய இல்லத்துக்கு வந்திருக்கிறான். இது பொதுவான சிறப்பு தான். உங்களுக்கு இப்போது சுபவர்க்கம் ஏறிய குரு. பொதுவாக உங்கள் செல்வ நிலையைப் பெருக்கக் கூடியவன். தந்தை அல்லது உறவு மூலம் சொத்து வரவும், வழக்கு இருப்பவர்களுக்கு வழக்கு வெற்றி, நோய் தீர்வு, கடன் வரவு போன்ற நன்மைகளைச் செய்யும். சிலருக்கு இருந்த திருமணத் தடையும் அகன்றுவிடும். பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேர்வதும் உண்டாகும். இது ஸ்தான பலன்.

இனி சாரபலத்தைப் பார்ப்போம். குரு உங்களுக்கு ஆகாதவனாக இருந்தபோதிலும் ஒரு சுபக்கோள். 19.08.2004முதல் 30.09.2004 வரையில் உத்தரம் நட்சத்திரம் சூரியன் சாரத்தில் செல்லும் குரு. சூரியன் உங்களுக்கு அட்டமாபதி. அதாவது தீய ஸ்தானத்திற்கு உரியவன் என்பதால் இக்காலம் கெடுதல் பலன்களுக்கே வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. எச்சரிக்கைக்குரிய காலமாகும். பிறகு 30.09.2004முதல் 09.12.2004 வரையில் அத்தம் நட்சத்திரம் சந்திரன் சார எல்லையில் செல்லும் குரு. இக்காலங்களில் செலவுநிலை உயரும். பலவகை பாக்கியங்கள் பெறவும் வாய்ப்பு உண்டு. 09.12.2004 முதல் 12.09.2005 வரையில் சித்திரை நட்சத்திரம் செவ்வாய் சார எல்லையில் செல்லும் குரு. இக்காலத்தில் 04.03.2005 முதல் 31.07.2005வரை குருவுக்கு வக்ரகாலமாகும். அசையாப் பொருட்கள், கட்டடம் கட்டுவதும் இக்காலத்தில் உண்டாகும்.

### கும்பம்

இந்த கும்பராசிக்கு .2-11க்கு உரியவன் குரு. இரண்டுமே நற்பல ஸ்தானங்கள்தான். எனவே உங்களுக்கு இந்தக் குரு நல்லவன். இப்போது 8க்குப் போய்விட்டதே என்ற கவலைதான் பெரிதாய் இருக்கும். நல்லவைகளைச் செய்யவேண்டிய குரு அட்டமத்தில் மறைந்துவிட்டதினால் நன்மைகள் நடக்கவேண்டியதற்குப் பதிலாக தீமைகள் நடக்கும். சிலருக்கு திருமணத்தடை அல்லது காலம் கடந்துபோவது போன்றவையும் இருக்கும். நோய் வாய்ப்பட்டிருப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இடறிவிழுதல், புறங்கை, காலில் பாதிப்புண்டாவது போன்றவையும் நிகழக்கூடும். இது ஸ்தான பலம்.

அடுத்தபடியாக குரு செல்லும் சாரத்தைப் பார்க்கவேண்டும். 19.08.2004முதல் 30.09.2004 வரை உத்தரம் நட்சத்திரம் சூரியன் சாரத்தில் செல்லும் குரு. சூரியன் உங்களுக்கு 7வது கேந்திர அதிபதி. இக்காலம் எல்லாவழிகளிலும் சுமூகமான நற்பலன்களேயிருக்கும். அரசாங்கம் மூலமாக பெரிய நன்மைகளையும் எதிர்பார்க்கலாம். பிறகு 2வது பிரிவுப்படி அத்தம் நட்சத்திரம் சந்திரன் சாரத்தில் செல்லும் குரு. இது 30.09.2004 முதல் 09.12.2004 வரை. சந்திரன் உங்கள் ராசிக்கு 6க்குரியவன். இக்காலம் பகைவர்கள் மூலம் பாதிப்பு, கடன், நோய் வழியிலும் பாதிக்கக்கூடும். இது சலனமான காலமே. 3வது காலம் சித்திரை நட்சத்திரம் செவ்வாய் சாரக் குரு. செவ்வாய் 3-10க்குரியவன். இக்காலம் நன்மை, தீமை இரண்டும் கலந்த பலன்களே நடக்கும். இது 09.12.2004முதல் 15.09.2005 வரை உள்ள காலம். இதில் வக்ரமும் அடங்கும்.

### மீனம்

இந்த மீனராசிக்கு குரு ஜென்ம அதிபதி. 10க்குமுரியவன். இப்போது சென்றிருக்கும் ராசி வீடு 7வது வீடு. இது சப்த கேந்திரம் என்று கூறும் வீடு. இதற்கு முன் 1-10க்குமுரிய கேந்திர வீட்டு அதிபதிதான். எனவே இது தீய இல்லம் அல்ல. இது மேலெழுந்தவாரியாகக் கூறப்படும் ஸ்தான பலம்தான். அடுத்தபடியாக நாம் சாரத்தைப் பார்த்தால்,

ஆரம்பத்தில் உத்தரம் நட்சத்திரம் சூரியன் சார எல்லைக்கு சென்ற குரு. சூரியன் உங்கள் ராசிக்கு 6வது வீட்டுக்குரியன். 19.08.2004 முதல் 30.09.2004 வரையில் சூரியன் சார குருதான். இக்காலம் பலமற்ற குரு. நீங்கள் எல்லா வழிகளிலும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். உங்களுக்கு வேணடாதவர்கள் மூலம் தீமைகள் நிகழ வாய்ப்பு இருக்கிறது. நோய் வரமுன் கவனிப்பது அவசியம். விபத்து போன்ற பாதிப்புக்கும் இடமுண்டு. கூடிவந்த திருமணம் நின்று போகவும் வாய்ப்புண்டு.

மேலும் 30.09.2004 முதல் 09.12.2004வரையில் அத்தம் நட்சத்திர எல்லை சந்திரனுடையது. இக்காலம் உங்களுக்கு பலவழி நன்மைகள் இருக்கின்றன. திடீர் திருமண முடிவு, எல்லாவழிகளிலும் காரிய சாதனையுடைவர்களாக இருப்பீர்கள். கௌரவச் செலவுகள் அதிகமாகிவிடும். பிரிந்தவர் மீண்டும் ஒன்று சேருவர். தொழில் உயர்வு, புத்திரப்பேறு போன்ற நன்மைகளையும் செய்யும். 3வது சித்திரை நட்சத்திரம் செவ்வாய் சார எல்லை. செவ்வாய் உங்களுக்கு 2-9க்கு உரியவன். குடும்ப வகைக்கு கட்டடம் சேர்க்கை, குடும்பத்துக்கு நாகரிகப் பொருள் சேர்க்கையும் உண்டாகும். இது 09.12.2004 முதல் 15.09.2005 வரை உள்ள காலம். இதில் வக்ர காலமும் அடங்கும்.

## வியக்கவைத்த ஆரம்ப...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்பின்னர் கிரேக்க நாட்டின் அதிபர் கொன்ஸ்ரான் டினோஸ் ஸ்டிலனோபோலஷ் 28ஆவது ஒலிம்பிக் போட்டியினை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைப்பதாக அறிவித்தார். அத்துடன் ஒலிம்பிக் தீபத்தினை 1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியின் போது நீர்ச் சறுக்கலில் தங்கப் பதக்கம் வென்ற கிரேக்க வீரர் நிகொலஸ் காக்ஸ் மனாகிஸ் ஏற்றி வைத்தார். இதேவேளை ஒலிம்பிக் சுடர் ஏற்றும் வாய்ப்பு கிரேக்க நாட்டின் தடகள வீரர் கஸ்டஸ் எகந்தரிஸ்ஸ°க்கே வழங்கப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப விழாவுக்கு முதல்நாள் ஊக்கமருந்து பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானமையால், விளையாட்டு வீரர்கள் பெரும் கொளரவமாகக் கருதப்படும் ஒலிமபிக் சுடர் ஏற்றும் வாய்ப்பு அவருக்கு இதனால் கைக்கெட்டாமல் போனது.

ஒலிம்பிக் சுடர் ஏற்றும் வைபவத்துடன் ஒலிம்பிக் போட்டியின் ஆரம்பநாள் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.



தன்னம்பிக்கை உணர்வுகளின் வெளிப்பாடான கடந்த 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டி அதற்கு முந்தய பார்சிலோனாப் போட்டி ஸ்டைலை மையமாகக் கொண்டிருந்தது. அதற்கு முந்தைய லொஸ் ஏஞ்சலஸ் போட்டி ஹொலிவுட் பார்வையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், தற்போது ஏதென்ஸில் நடைபெறும் போட்டியானது பழமையும் நவீனத்தையும் வெளிப்படுத்தும் போட்டியாக அமைந்துள்ளது.

## இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல - 24

### படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



கறுப்புக் கதாநாயகர்களில் ஒருவரின் மனைவியான இவர் 'வேலன்'தொடர் மூலம் ரசிகர்களின் மனங்களில் இடம்பிடித்தவர். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும்28 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 24**
**'சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-
சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 24**

படத்தில் உள்ளவரின் பெயர் :-.........................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-.........................

அனுப்புபவரின் முகவரி :-.........................

.........................

.........................

## இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 22 சரியான விடை





பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்

### இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல. 22 இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | இ.மயூரன்<br>5ஆம் வட்டாரம்,<br>நயினாதீவு. |
| இரணடாம் பரிசு | :- | க.திவ்வியன்<br>அச்சுவேலி வடக்கு,<br>அச்சுவேலி. |
| மூன்றாம் பரிசு | :- | மு.ஜெயந்தி<br>வட்டு கிழக்கு,<br>சித்தன்கேணி. |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்

L.சுவஸ்திகா, உடுப்பிட்டி. பா.அன்பினி, சண்டிலிப்பாய். கி.காவேரி, திருநெல்வேலி. R.ராஜசந்திரன், நாவாந்துறை. S.சித்திரா, கொக்குவில். யோ.சிவாஜினி, சாவகச்சேரி. சி.விவேகானந்தன், வியாபாரிமூலை. இ.விஜயசிறி, வேலணை. இ.கிந்துஜா, வேலணை. ந.சஞ்சயன், மீசாலை. வி.செல்வநாயகம், புத்தூர். து.சந்திரவதனா, வல்வெட்டித்துறை. கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. செ.நன்னிலா, நீர்வேலி. பா.செல்வராணி, வட்டுக்கோட்டை. க.சஷிலா, வட்டுக்கோட்டை. வ.சிவாஜி, கரணவாய். யோ.யோகராசா, சங்கானை. ந.அபிராமி, மூளாய். S.சறோஜா, நல்லூர். K.புஸ்பராணி, தம்பசிட்டி. பா.சிறிமோகன், பொற்பதி. S.விதுஷன், வண்ணார்பண்ணை. V.இளங்கோ, கோப்பாய். இ.தவசீலன், பொற்பதி. சு.பிரபாகரன், புதுக்குடியிருப்பு. பா.பவரூபன், சண்டிலிப்பாய். ஸ்ரீ.சோபிகா, வட்டுக்கோட்டை. N.தமயந்தி, காரைநகர். க.குணபாலன், அளவெட்டி. த.கிருபாகரன், வரணி. இ.பிரியதர்சினி, பண்டத்தரிப்பு.

## பேனா நண்பர்கள்

தி.சாரங்கன்
வயது:- 21
C/O சயந்தினி,
புலவனார் லேன்,
கல்வியங்காடு.
வழமையானவை.


S.மது
வயது:- 20
C/O வி.தங்கமலர்,
4ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.
T.V, வானொலி.

M.மதன்
வயது:- 19
இல-37, முதலியார் குளம்,
செட்டிக்குளம்,
வவுனியா.
கவிதை, பேனாநட்பு.

பா.சிறிமோகன்
வயது:- 25
பொற்பதி, குடத்தனை.
விளையாட்டு, கவிதை,
வானொலி, பத்திரிகை,
பேனாநட்பு. அரட்டை.

சுதா
வயது:- 19
71, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
கிரிக்கெட், கவிதை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல - 24




அனுப்ப வேண்டிய முகவரி-

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 24**
**'சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- .........................
முகவரி :- .........................
.........................
.........................

இங்கே வெட்டுக .........................

### இடமிருந்து வலம்

(1) மனிதனின் மேன்மையான குணத்தை இப்படியும் கூறுவர். (4) புத்திர சோகத்தால் இறந்த மன்னன். (7) இதன் இலையில் நீா் தரித்து நிற்காது. (9) பொருள் - இதனைக் குறிக்கும் (10) இவற்றில் சில கற்றுக்கொடுத்தால் பேசும்.

### மேலிருந்து கீழ்

(1)ஒரு வாத்தியக் கருவி. (2) இவை பூமியை செழிப்பாக வைத்திருக்கும். (3) பெண் இதனைக் குறிக்கும். (5) மனிதன் அடக்கவேண்டிய ஒரு குணம். (6)கோவலன் விற்கச் சென்ற அணிகலன். (7) மனிதனுக்கு ஏற்படும் நோய்களிலொன்று. (8) நயனம் என்றும் அழைப்பர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 22இன் விடைகள்

### இடமிருந்து வலம்

(1) அரவிந்தம் (5)சாகரம் (6)கீரி (8) புராணம் (9) மானம் (10) கரும்பு.

### மேலிருந்து கீழ்

(1) அநுசாசனம் (2) விகாரம் (3) தரு (4)கிரி (7)பராயம் (10) கலம்.

### பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | லோ.அபிராமி<br>கொட்டடி,<br>யாழ்ப்பாணம். |
| இரண்டாம் பரிசு | :- | S.சித்தார்த்தன்<br>காரைநகர் வீதி,<br>வட்டுக்கோட்டை. |
| மூன்றாம் பரிசு | :- | T.S.S. கீதா + பூரணி<br>யா/யாழ்ப்பாணக்கல்லூரி,<br>வட்டுக்கோட்டை. |

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் - அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

S.நிகேதினி, வண்ணார்பண்ணை. கே.அரசேஸ்வரன், நல்லூர். செ.இராஜதேவி, கோப்பாய். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. லோ.கீர்த்திகா, யாழ்ப்பாணம். க.சுதா, வரணி. த.நவரட்ணவேல், நாகர்கோவில். க.சஷீலா, வட்டுக்கோட்டை. திருமதி.செ.பாக்கியநாதன், சங்கானை. பா.அன்பினி, சண்டிலிப்பாய். ச.பிரபாகர், கிளிநொச்சி. இ.தமிழினி, மல்லாவி. சு.சந்திரவதனா, சாவகச்சேரி. பா.தர்ஜினி, சண்டிலிப்பாய். பா.பவரூபன், கல்வளை. ந.நவஜீவன், மூளாய். ஸ்ரீ.சோபிகா, வட்டுக்கோட்டை. இ.மயூரன்,நயினாதீவு. சொ.நித்தியா, கொக்குவில். S.கார்த்திகா, யாழ்ப்பாணம். சா.தயாளினி, மானிப்பாய். யோ.சிவகுமார். கரவெட்டி. து.பிரதீபன், மீசாலை. க.மாதங்கி, மல்லாகம்.

# ஒலிம்பிக் ஷோ



ஒலிம்பிக் திருவிழாவின் துக்க நிகழ்ச்சிகளும் தடகளம் மற்றும் காற்பந்து, ஒலிம்பிக்கின் முடிவு நிகழ்ச்சியும் நடைபெறும் மைதானமே இது. இம் மைதானத்தில் 72,000 பேர் வரை அமரக் கூடிய வசதிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகின் விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டிகளின் துவக்க நிகழ்ச்சி ஏதென்சில் வெகுசிறப்பாகத் துவங்கியது. துவக்க நிகழ்ச்சியின் பிரம்மாண்டத்தைக் காண கண்கோடி வேண்டும் என்று சொல்லலாம். அவ்வளவு சிறப்பாக அமைந்தது. துவக்கநிகழ்ச்சி நடைபெற்ற விளையாட்டு அரங்கின் உள்ளே ஒலிம்பிக் சின்னம் ஒளிரும் காட்சி.







ஒலிம்பிக் போட்டிகளில் 10 மீற்றர் ரைபிள் துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்ற உக்ரேனின் ஒலினா காஸ்டிவி வெற்றிவிழாவில் தலையில் மலர்வளையம் அணிந்தவண்ணம் காணப்படும் காட்சி.

ஒலிம்பிக் நிகழ்வில் 8,000 ரசிகர்கள் அமர்ந்து பார்க்கவல்ல இம் மைதானத்திலேயே வாலிபால், கடற்கரை வாலிபால், தேக்வாண்டோ, ஹாண்ப்பால் போட்டிகள் நடைபெறவுள்ளன.




பெண்களுக்கான 3மீ.ஒருங்கிணைந்த ஸ்பரிங் போர்ட் டைவிங் போட்டியில் தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்ற மங்கையர்கள் இவர்கள்.






400மீற்றர் தனிநபர் மேட்லி நீச்சல் போட்டியில் புதிய உலக சாதனை படைத்து தங்கத்தை வென்ற வீரர் மைக்கல் பெல்ப்ஸ்.



எந்த நாட்டுக்குச் செல்லத் தயாராக நிற்கும் யுத்தக் கப்பலோ என எண்ணாதீர்கள். இது நோர்வேயில் நடைபெறவுள்ள உயரமான கப்பல்கள் பங்கேற்கும் பந்தயத்தில் கலந்துகொள்வதற்காகத் தயாராகும் ரஷ்யாவின் மிர் கப்பல்.

இந்தியாவின் இந்தத் தேசியக் கொடி சாதாரண சீலையால் உருவாக்கப்பட்டதல்ல. இந்தியாவின் 58வது சுதந்திர தினத்தையொட்டி, டெல்லி செங்கோட்டையில் நடைபெற்ற விழாவில், நிறஆடைகளை அணிந்து பள்ளிச் சிறுவர் சிறுமியர்கள் ஒன்றிணைந்து உருவாக்கியதே இத் தேசியக்கொடி.






வால்ட் டிஸ்னியின் படைப்பான டொனால்டு டக் கார்ட்டூன் பாத்திரத்தை கௌரவிக்கும் விழா அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது. விழாவில் தனக்கு அளிக்கப்பட்ட கௌரவப் பட்டத்தை ரசிகர்களிடம் காண்பித்து மகிழ்ச்சியடையும் டொனால்ட் டக்

இப் பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தாரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது